# முத்தூர் வரலாறு



செ. இராசு

# முத்தூர் வரலாறு

ஆசிரியர்
பேரூராதீனப்புலவர், கல்வெட்டறிஞர்
புலவர் **செ. இராசு,** எம்.ஏ., பிஎச்.டி,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 5

வெளியீடு
**கொங்கு ஆய்வு மையம்**
3பி, வெங்கடேசுவரா நிவாஸ்
130/2, வள்ளியம்மை தெரு,
ஈரோடு – 638 011

வெளியீடு — 6.7 2000 முத்தூர்ச் சோழீசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு விழா வெளியீடு

பதிப்புரிமை @ — கொங்கு ஆய்வு மையம்

செய்தி சேகரிப்பும்
வெளியீடும்,
நூல் கிடைக்கும் இடமும் — கொங்கு ஆய்வு மையம்
3, பி வெங்கடேசுவரா நிவாஸ்
130/2 வள்ளியம்மை தெரு,
நாராயண வலசு,
ஈரோடு – 638 011

தொலைபேசி — 0424-220940

விலை — ரூபாய் **30.00**

அச்சிட்டோர் — அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்,
ராயப்பேட்டை,
சென்னை – 600 014.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 5 |
| | ஆசிரியர் உரை | 7 |
| 1. | கொங்கு நாடு | 9 |
| 2. | காங்கய நாடு | 13 |
| 3 | முத்தூர் | 20 |
| 4 | நொய்யல் ஆறு | 25 |
| 5. | முத்தூர் காணியாளர்கள் | 32 |
| 6. | முத்தூர் கோயில்கள் | 50 |
| 7. | முத்தூர் கல்வெட்டுக்கள் | 70 |
| 8. | முத்தூர்ப் பட்டயம் | 79 |
| 9. | குல குருக்கள் | 87 |
| 10. | புலவர்கள் | 91 |

சாந்தலிங்கர் தான் மலர் வாழ்க!

## அணிந்துரை

கயிலை மாமுனிவர், பேரூராதீனம்
திருப்பேருந்திரு **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**
பேரூர், சென்னை – 10

இமய முதல் குமரிவரை பரந்த நாடு பாரதநாடு. இந்நாட்டின் முதற் பொருள் செம்மேனியெம்மானாகிய சிவபெருமான் அம்மையப்பராக விளங்கும் கோலம் தொன்மைக் கோலம் என்று திருவாசகம் கூறுகிறது சிவவழிபாடு தமிழகத்தில் தழைத்தோங்கியது. திருமுறைகள் அருளப் பெற்றன. மெய்ப்பொருளாகிய சைவசித்தாந்த நூல்கள் வளம பெற்றன. மன்னர்களும், மக்களும் ஆயிரக்கணக்கான திருக்கோயில்களை உருவாக்கினர் மொழிக்கு மொழிக்கு தித்திக்கும் மூவர் மொழியும் திருவாசகமும், வான் பழித்து மனிதனை ஆட்கொண்ட வளமையுமாய் விளங்கின. கற்கோயில்கள் கலைக் கோயில்களாக வாழ்வியல் வளத்தோடு விளங்கின

முத்தூர் அருண்மிகு பெரியநாச்சியார் உடனமர் சோழீசுவரர் திருக்கோயில் எட்டுக் குலத்தவர்கட்கு முதன்மை உடையது. இத்திருக்கோயில் சோழர் காலத்திருப்பணி, கல்வெட்டுக்களும், பட்டயங்களும் புகழும் சிறப்புடையது.

அம்பொன் நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கிய திலகவதியார் போல் துறவு மேற்கொண்டு திருமடம் அமைத்துச் சோழீசுவரருக்கு அருட்பணி செய்த முத்தன் குலத் தவ விளக்கு, குமராயி அம்மை திருமடம் அமைத்துப் பெண் துறவிகளை உருவாக்கி வழிகாட்டிய பெருமை உடையது இத்தலம்

இத்திருக்கோயில் வழிபாடுகள் முறையாய் நடைபெற நிவந்தங்கள் நிலங்களாக வழங்கப் பெற்றன அவை காலப் போக்கில் கைமாறித் திருக்கோயிலைப் பேண வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டது. மக்கள் மனம் செலுத்தாமையால் பொலிவிழந்து வழிபாடு இன்றி சிதைவுற்றிருந்தது. பலமுறை முயன்றும் இளங்கோயில் உருவாக்கியும் திருப்பணிகள்

தொடங்கப் பெறவில்லை. அன்பர்கள் முத்தூர் நற்பணி மன்றம் என்று ஒன்றை அமைத்துப் பொருளீட்டனர், பணிகளில் ஈடுபட்டனர். சிற்பக் கலைஞர்களைக் கொண்டு முழுமையாகத் திருப்பணி தொடங்கினர். நமது ஆதீனத்தின் தொடர்பைப் பெரிதும் உரிமையாக்கிம் பணியை நமது மேற்பார்வையுடன் சிறப்பாகச் செய்ததுள்ளனர் திரு. பெருமாள் கவுண்டர், திரு. சேனாபதிக்கவுண்டர், திரு. மாணிக்கம் என்னும் அங்கப்ப முதலியார் ஆகியோர் பணி பாராட்டுதற்குரியது நற்பணி மன்ற அன்பர்கள் தொடர்ந்து இடர்களை நீக்கி இனிய பணி செய்தனர். திருக்குட நீராட்டு விழா விக்கிரம ஆண்டு ஆனித் திங்கள் 23ஆம் நாள் (7.7.2000) வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது

கொங்கு நாட்டில் பல திருக்கோயில்கள் சோழர்களால் திருப்பணி செய்யப் பெற்றவை. இவைகளைப் பற்றி நமது ஆதீனப் புலவர் கல்வெட்டுப் பேராசிரியர், முனைவர் புலவர் செ. இராசு அவர்கள் ஐம்பதிற்கும் மேற்பட்ட வரலாற்று நூல்களை எழுதிப் பெருமை சேர்த்துள்ளார் சிறப்பு மிக்க முத்தூர் திருக்குட நீராட்டு விழாவில் முத்தூர் வரலாற்றைப் புலவர் செ. இராசு அவர்கள் அரிதின் ஆய்ந்து நூலாகத் தந்துள்ளார். இவரது பணி ஆராய்ச்சியாளர்களால் பெரிதும் பாராட்டத் தக்கது இந்நூலை உருவாக்கி திருத்தலப் பெருமையை வளப்படுத்தி வரும் இவர் பணி வரை சாந்தலிங்கப் பெருமாள் தாள் மலர் நினைந்து வாழ்த்துகின்றறோம்.

பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகள்
28.6.2000

# ஆசிரியர் உரை

காங்கயநாட்டின் வரலாற்றுப் புகழ்பெற்ற பேரூராகிய முத்தூரில் தொன்மையானது சோழீசுவரர் திருக்கோயில் இக்கோயில் கடந்த பத்தாண்டுகளாகத் திருப்பணி செய்யப்பட்டு இப்போது குடமுழுக்கு விழா. சீருடனும், சிறப்புடனும் நடைபெறுகிறது அதனையொட்டி 'முத்தூர் வரலாறு' என்னும் இந்நூல் வெளிவருகிறது

முத்தூரில் ஆய்வு செய்ய வேண்டும், கல்வெட்டுக்களைப் படி எடுக்க வேண்டும் என்று முதலில் பணித்தவர்கள் பேரூர் ஆதீனத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் ஆவர் அவர்கள் இட்ட பணியால் தொடங்கிய ஆய்வு இந்நூலாக உருவெடுத்துள்ளது.

பல அறிவுரைகளை வழங்கி வரலாற்றைச செம்மையுறச் செய்த அடிகளார் அவர்கள் அழகிய அணிந்துரை ஒன்றையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்கள் பொன்னார் திருவடிக் கமலங்கட்கு என் மனமார்ந்த நன்றி மலர்களைப் படைக்கின்றேன்.

சின்னமுத்தூர் தெற்கு வளவு பி பாலசுப்பிரமணியம் அவர்கள் இவ்வரலாறு எழுதப் பற்பல உதவிகளை உரியகாலத்தில் செய்து உதவினார்கள். மனமார வாழ்த்தும் அளித்துள்ளார். அவர்கள் சிறப்புடன் நிர்வகிக்கும் செல்வக்குமாரர் கோயில் எழுத்தர் திரு. எம்.பி. கேசவன் அவர்கள் நூல் உருவாக்கத்திற்குத் துணை நின்றார்கள்.

முத்தூரில் கள ஆய்வு செய்யும் போதும், ஆலயங்கள் அனைத்தையும் நேரில் காணும் போதும் உடனிருந்து உதவிய அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் திரு. செ குப்புசாமி, பெ சதாசிவம் ஆகியோர் உதவி மறக்கற்பாலதன்று. அவர்களை ஆய்வுக்கு அனுப்பிய முத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் அவர்கட்கு நன்றி உரியதாகுக.

முத்தூர்ச் சிவாலய நற்பணி மன்றத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து ஆக்கமும், ஊக்கமும் அளித்தனர். அவர்களுக்கு நன்றி.

முதலில் நன்கொடையளித்து உற்சாகப் படுத்தியவர்கள் முத்தூர் ஆனூர் வித்யாலயா மெட்ரிக் பள்ளித் தாளாளர் பண்பாளர் திரு கே.எஸ். சிவசேனாபதி அவர்கள் விளம்பரங்கள் அளித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றி

கடந்த 20 ஆண்டுகளாக பல கொங்குக் காணியாளர்கள் என்னை அழைத்து வரலாறு எழுதும் பணியை என்னிடம் ஒப்படைத்துள்ளார்கள். முத்தூர் வரலாற்றை நானே முன்னின்று தயாரித்து அன்பர்கள் உதவியால் வெளியிடுகின்றேன். அந்த வகையில் முத்தூர் என்னைக் கவர்ந்தது என்று கூறவேண்டும்.

இந்நூலைக் குறித்த காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்ட சென்னை அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ் உரிமையாளார் திரு. D. இராமநாதன் அவர்கட்கு நன்றி.

கொங்கு மக்கள் கொங்கு ஆய்வு மையத்தின் வரலாற்றுப் பணியை ஊக்குவிப்பார்களாக!

அன்புடன்

ஈரோடு
1.7.2000

செ. இராசு



அருள்மிகு செல்லாண்டியம்மன் முத்தூர்.

# 1. கொங்கு நாடு

நம் செந்தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டைநாடு, கொங்குநாடு என்ற இரண்டு தனிப்பிரிவு நாடுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது.

கொங்குநாடு தனக்கென்று எப்பொழுதும் தனியாக எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இதனைப் பழங்கால இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன நீலகிரி, கோவை, பெரியார், சேலம் மாவட்டங்களும், தருமபுரி மாவட்டங்களின் தென்பகுதிகளும், திண்டுக்கல் மாவட்டம் பழனிப்பகுதியும், கரூர் மாவட்டக் கரூர், குழித்தலைப் பகுதிகளுமே பழங்கொங்கு நாடாகும்.

*வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு*
*குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று – கிடக்கும்*
*களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு*
*குளித்தண் டலையளவு கொங்கு*

என்பது ஒரு தனிப்பாடல் இதன் மூலம் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை என்பதும், தெற்கு எல்லை பழனிமலை என்பதும், மேற்கு எல்லை வெள்ளியங்கிரிமலை என்பதும், கிழக்கு எல்லை குளித்தலை என்பதும் பெறப்படுகிறது, தெற்கு எல்லை பன்றிமலை என்றும், வடக்கு எல்லை தலைமலை என்றும், மேற்கு எல்லை வாளையாறு என்றும் எல்லை கூறும் ஆவணங்களும் உள்ளன.

தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது, தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின் மிகப்பழமையான மேற்கோள் பாடல் ஒன்று ‘வியன் தமிழ்நாடு ஐந்து’ என்று கூறுகிறது

*‘நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா*
*மறவேந்தன் வஞ்சியான் அல்லன் – துறையின்*
*விலங்காமை நின்ற வியன்தமிழ்நாடு ஐந்தின்*
*குலங்காவல் கொண்டொழுகும் கோ’*

என்பது அப்பாடலாகும்.

சைவ சமய நூல்களில் மிகவும் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம் ‘தமிழ்மண்டிலம் ஐந்து’ என்று கூறுகிறது, எனவே கொங்குநாடு தனிப்பிரிவு என்பது உறுதிப்படுகிறது

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்கு நாடு' தனிநாடாகக் குறிக்கப்பெறுகிறது

'கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே' (புறநானூறு 373) எனச்சோழன் அழைக்கப்பெறுகின்றான். அவன் கொங்கு நாட்டை வென்று அடிப்படுத்திய செய்தி அதன்மூலம் பெறப்படுகிறது

*'கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்*
*வெண்கோட்டு யானை போஒர் கிழவன்*
*பழையன்'* *(நற்றிணை - 10)*

*'ஒளிறுவாள் கொங்கர்'* *(குறுந்தொகை-383)*

*'ஆகெழு கொங்கர் நாடு'* *(பதிற்றுப்பத்து-22)*

*' கொங்கர் ஆபரந்தன்ன'* *(பதிற்றுப்பத்து-77)*

*'கொங்கர் படுமணி ஆயம்*
*நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா'* *(அகநானூறு-70)*

*'வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி'* *(அகநானூறு-253)*

*'கொங்கர் மணி அரை யாத்து*
*மறுகின் ஆடும் உள்ளி விழவு'* *(அகநானூறு-368)*

போன்ற பாடல்கள் மூலம் கொங்குக் குறுநில மன்னர்கள். கால்நடைச் செல்வம், கொங்கர் போர்த்திறன், அவர்கள் விழா ஆகியவை சங்க இலக்கியங்களில் குறிக்கப் பெறுகின்றன.

கொங்குநாட்டை ஆட்சிபுரிந்த சிற்றரசர்கள் சங்க இலக்கியத்தில் அத்தி, அதியமான், ஆய், ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன், ஏற்றை, ஓரி, கங்கன், கட்டி, கடிய நெடுவேட்டுவன், குமணன், கொடுமுடி, கொண்கானங்கிழான், தாமான் தோன்றிக்கோன், நன்னன், பழையன், புன்றுறை, பேகன், விச்சிக்கோ ஆகியோர் சுட்டிக் கூறப்பட்டுள்ளனர். கொங்கு நாட்டு மணிகளும் வண்ணக் கல்மணிகளும், வேலைப்பாடு மிக்க அணிகலன்களும் புகழ்ந்து சங்க இலக்கியங்களில் பாராட்டப்படுகின்றன.

சேரன் செங்குட்டுவன் தனக்குச் சமமான அரசனாகக் கொங்குநாட்டு இளங்கோசரைத் தமிழ்நாட்டு மூவேந்தருக்கு ஒப்ப மதித்துப் போற்றியிருக்கின்றான் நூற்றுவர் கன்னர், இலங்கைக் கயவாகு, மாளுவ வேந்தர். சோழன் பெருங்கிள்ளி ஆகியோர் போலக் கொங்கு நாட்டு மன்னனையும் நட்பாகக் கொண்டிருக்கிறான் இதனைச் சிலப்பதிகாரம் மூலம் அறிகின்றோம்.

பேரூரை மேற்குக் கொங்கு என்று பாண்டியர் பழஞ் செப்பேடுகளும், இலக்கியங்களும் கூறுகின்றன

*'குடகொங்கத்து அடல்மன்னனைக்*
*கொல்களிற் றொடும் கொண்டுபோந்து*
*கொடியணிமணி நெடுமாடக்*
*கூடல்மதில் அகத்துவைத்தும்'*

என்று சீவரமங்கலச் செப்பேட்டிலும்,

'மீகொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்' என்று சுந்தரர் தேவாரத்திலும் குறிப்புகள் வருகின்றன. இதனால் கொங்குநாடு தனிநாடு என்று பெறப்படுகிறது

கொங்கு நாட்டிலிருந்து சமய அடியார்கள் சேரநாடு நோக்கிச் சென்றதை,

*'கொங்கு நாடு கடந்து போய்க்*
*குலவு மலைநாட்டு எல்லையுற'*

*'மலைநாடு கடந்தருளி .... திருமுருகன்*
*பூண்டிவழிச் செல்கின்றார்'*

என்று பெரியபுராணம் குறிப்பிடும். சிலப்பதிகாரத்திலும் கொங்கு நாட்டின் மேற்பகுதி அரசர் 'குடகக்கொங்கர்' என்று குறிக்கப்பெறுகிறார் கண்ணகியே 'கொங்கச் செல்வி' என்று சிலம்பில் குறிக்கப்பெறுகிறார்

நூற்றாண்டுகள்தோறும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கொங்குநாடு தனிநாடு எனக்கூறுகின்றன சிலர் தொண்டை நாட்டைச் சோழநாட்டுடனும், கொங்கு நாட்டைச் சேர நாட்டுடனும் அடக்குவர். அது பொருந்தாது

கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் தம் 'கொங்கு நாட்டு வரலாறு' என்னும் நூலில் கீழ்வருமாறு குறிக்கின்றார்.

'சோழர்கள், ஒயிசளர், விசய நகரத்தார், மைசூர் மன்னர்கள் ஆகிய வம்சத்தாரிடம் கொங்குநாடு சென்றது இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராச்சியங்களுடன் கொங்குநாடு இணைக்கப்பட்ட போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையை இழக்கவில்லை. இந்நாட்டின் அமைப்பு மாத்திரம் அன்றி இந்நாட்டுக் குடிமக்களின் பழக்கவழக்கங்களும் பண்டைக்காலம் தொட்டு ஒரேவிதமாக இருந்துவந்தன சமூக வழக்கங்களிலும் இவர்களுடைய வழக்கங்கள் ஏனைய

நாட்டார்களிடமிருந்து சிறிது வேறுபட்டேயிருக்கும். இவ்விதக் காரணங்களினால் கொங்கு நாட்டைத் தனிநாடு என்று நிச்சயிக்கக்கூடும்.

சேரநாடு என்னும் கேரளத்தில் வழங்கிவரும் பழக்க வழக்கங்களைக் கொங்கு நாட்டாரின் பழக்கவழக்கங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால், எக்காலத்திலும் இவ்விரு நாடுகளும் ஒன்றாக இருந்திருக்க முடியாது என்று சொல்லவேண்டும். கொங்குநாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்திருந்தால் சேரநாட்டு வழக்கம் கொஞ்சமேனும் கொங்கு நாட்டில் பரவியிருக்கும் இவையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் ஆதிகாலம் தொடங்கி இவ்விரு நாடுகளும் தனித்தனியாகவே இருந்திருக்கவேண்டும் என்றும், கொங்குநாடு ஒரு தனிநாடாகவே இயற்கையில் அமைந்து வந்ததென்றும் திண்ணமாகக் கூறலாம்.

வராகமிகிரர் தன் நூலில் கொங்குநாடு தனிநாடு என்று குறிக்கின்றார். அசோகன் கல்வெட்டிலும் தனி அரசராகக் குறிக்கப்பெறும் சதியபுத்திரர் கொங்குநாட்டு மன்னன் அதிமானே என்பது ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

*'ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி'*

என்பது ஜம்பைக் கல்வெட்டாகும்.

' கொங்குநாடு' என்னும் வரலாற்று நூலில் புலவர் அ.மு.குழந்தை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

' தொன்றுதொட்டே கொங்கு நாடு சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு உட்படாத தனியாட்சி நாடாகவே இருந்துவந்தது. வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய வேளாண்குடிச் செல்வராகிய கொங்கு நாட்டுத் தனி அரசர்கள் தமக்குள் பகையின்றி ஆண்டுவந்தனர். அவர்கள் முடியுடை மூவேந்தரிடத்தும் அன்போடு நண்பும் அமைவும் உடையவராக இருந்து வந்தனர் முடியுடை மூவேந்தர்க்கு மைத்துனரும் மாமனாருமாகிய அவர்கள் பின்னர் எவ்வாறு இருந்திருப்பர். கேரளோற்பத்தி, கேரள மான்மியம் போன்ற நூல்களும், திருவாங்கூர்ச் சரித்திர ஆசிரியர் சங்குண்ணிமேனன் அவர்களும், டாக்டர் எஸ் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் கொங்கு தனியாட்சி நாடு என்பதைத் தக்க எடுத்துக் காட்டுகள் காட்டி நிறுவியுள்ளனர்.

தொல்பொருட் சிறப்பும், கல்வெட்டுப் பரப்பும், சிற்பச்செல்வமும் வரலாற்றுப் பெருமையும், வாழ்வியல் வளமும் வற்றாச் சீரும் உடையது நமது கொங்கு நாடு.

# 2. காங்கய நாடு

## கொங்கு 24 நாடு

கொங்கு நாட்டில் குடியேறிய வேளாளர் உட்படப் பல சமுதாயத்தினர் நாடெங்கும் சென்று பல ஊர்களில் காணி கொண்டு நிலையான ஆட்சியை ஏற்படுத்தினர். ஆங்காங்கு குளம் தொட்டு வளம் பெருக்கினர் ஆலயங்கள் கட்டி வழிபாடு செய்து கொடைகளும் பற்பல விட்டனர் தங்களுடன் குடியேறிய குடிபடைகளுக்கும் பல உரிமைகளை அளித்தனர். கால்நடைச் செல்வத்தைக் காத்து வேளாண்மையை மேற்கொண்டனர். அப்போது நாட்டு நிர்வாகம் செய்ய கொங்கு நாட்டை 24 உள்நாடுகளாகப் பிரித்தனர் தங்கள் பூர்வீகமான காஞ்சிபுரம் சூழ்ந்த தொண்டை நாட்டில் 24 கோட்டங்கள் இருப்பதனால் இங்கும் 24 நாடுகளாகக் கொங்கு நாட்டைப் பிரித்தனர் என்பர் சமண சமய தீர்த்தங்கரர் 24 பேர் என்பதால் 24 நாடாயிற்று என்றும் கூறுவர்

| | | | |
|---|---|---|---|
| 01. | பூந்துறைநாடு | 13. | ஒடுவங்கநாடு |
| 02. | தென்கரைநாடு | 14. | வடகரைநாடு |
| 03 | காங்கயநாடு | 15 | கிழங்குநாடு |
| 04. | பொன்கலூர்நாடு | 16 | நல்லுருக்காநாடு |
| 05. | ஆறைநாடு | 17. | வாழவந்திநாடு |
| 06 | வாரக்கநாடு | 18. | அண்டநாடு |
| 07 | திருவாவினன்குடிநாடு | 19 | வெங்காலநாடு |
| 08 | மணநாடு | 20. | காவடிக்காநாடு |
| 09. | தலையநாடு | 21. | ஆனைமலைநாடு |
| 10. | தட்டயநாடு | 22. | இராசிபுரநாடு |
| 11. | பூவாணியநாடு | 23. | காஞ்சிக்கோயில்நாடு |
| 12. | அரையநாடு | 24. | குறுப்புநாடு |

பிற்காலத்தில் பல அரசர்கள் புதியனவாகக் காடு கொன்று நாடாக்கி மக்களைக் குடியேற்றம் செய்யும் போது நாடுகள் பெருகின என்பதைக் காணுகின்றோம். சில பட்டயங்கள் கொங்கு 42 நாடுகள் என்று கூறுகின்றன.

அவை தாராபுரம் சூழ்ந்த நாடு 24, தணாயக்கன் கோட்டைசூழ்ந்த நாடு 6, கீழ்கொங்கில் குன்றத்தூர் (சங்ககிரி) சூழ்ந்தநாடு 12. காங்கய நாடு மூன்றாவது நாடாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. 24 நாடுகளைக் குறிக்கும் பாடல் பின்வருமாறு

*சொல்லஅரி தானபூந் துறைசைதென் கரைநாடு*
*தோன்றுகாங் கேயநாடு*
*தோலாத பொங்கலூரர் நாடுதிகழ் ஆறையணி*
*தோய்ந்தவா ரக்கநாடு*
*வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு*
*மணநாடு தலையநாடு*
*வரதட்டை பூவாணி அரையநாடு ஒடுவங்கம்*
*வடகரை கிழங்குநாடு*
*நல்லுருக் காநாடு வாழவந் தியும்அண்ட*
*நாடுவெங் காலநாடு*
*நாவலர்கள் சொல்கா வடிக்காநாடு ஆனைமலை*
*ராசிபுர நாடுநிதமும்*
*இல்லறம் வளர்ந்துதவி மலகுகாஞ் சிக்கோயில்*
*இயல்செறி குறுப்புநாடு*
*இனியபுகழ் சேர்கொங்கு மண்டலந் தனிலான*
*இருபத்து நான்குநாடே*

காங்கய நாடு 'தோன்றுகாங்கேய நாடு' என அடைமொழியுடன் கூறப்படுகிறது. புகழ் தோன்று நாடு, புண்ணியம் தோன்று நாடு, முன்தோன்றிய நாடு எனப் பல்வேறு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

**காங்கய நாடு**

காங்கய நாடு கொங்கு நாட்டில் மிகவும் பழமையான நாடாகக் கருதப்படுவது. சங்ககால முத்தூருக் கோட்டம் இப்பகுதியே என்பது திருப்பூர் க. பழனிச்சாமிப் புலவர் அவர்கள் கருத்தாகும்

கங்கைகுல வேளிருக்கு உரியது ஆதலின், காங்கயநாடு ஆயிற்று என்பர் சிலர். கங்கையின் புதல்வன் முருகன், காங்கேயன் என்ற சிறப்புப் பெயர் பெற்றான் அதுபோலக் கங்கைகுல வேளிர்களும் காங்கேயர் என்ற சிறப்புப் பெயர் பெற்றனர். சீய கங்கன் இப்பகுதியில் ஆட்சி புரிந்ததால் காங்கயத்துககு 'சிங்கை' என்பது பெயராயிற்று என்பர் சிலர் காங்கேயருக்குத் தலைநகராக இருந்த காரணத்தால் இவ்வூர் காங்கேயம் என்று பெயர் பெற்றது என்பதும் ஒரு காரணமாகும். இலக்கிய வழக்கே

காங்கேயம் காங்கேயர் என்ற பெயர் பொருள்தந்த குலத்தலைவர் கடையூர்ப் பட்டவர்த்தனருக்குரியது. அவர்களின் முன்னோர் இங்கு வாழ்ந்து இருக்கலாம் அதனாலும் காங்கேயம் எனப்பெயர் வந்திருக்கலாம் இன்னும் சில ஆய்வாளர்கள் கங்கர்களின் தலைநகர் ஸ்கந்தபுரம் காங்கயம்தான் கங்கர்கள் ஆண்ட பகுதி காங்கயம் ஆயிற்று என்பர் ஆய்வாளர் முனைவர் எ சுப்பராயலு அவர்கள் காங்கயம என்பதே பழம்பெயர் என்பார்

மெக்கன்சியின் ஆவணம், கடையூர்க் காங்கேயர் கோட்டை கட்டிய இடம் 'காங்கேயன் கோட்டை' என்று பெயர்பெற்றுப் பின் காங்கயம் ஆயிற்று என்று கூறுகிறது அவ்வூர்ப் பெயரே பின் நாட்டுக்கும் ஆயிற்றுப் போலும், எனவே காங்கயம் ஊருக்கும் நாட்டுக்கும் காடையூர்க் காங்கேயரால் பெயர் வந்தது என்பது புலப்படுகிறது

பல்வேறு சிறப்புக்களைப் பெற்றது இந்தக் காங்கயநாடு இலக்கியங்களால் ஏத்திப் புகழப் பெறும் நாடு காங்கயநாடு கொங்குவேளாள பாளையக்காரரில் மூவர் வீற்றிருந்து ஆட்சி செய்யும் சிறப்பினை உடையது அவர்களை 'மூவரசு' என்று இலக்கியங்களும், தனிப்பாடல்களும் புகழும். கொங்கு நாடெங்கும் பல்கிப் பரவியுள்ள கொங்கு வேளாண் குலத்தார் பலருக்கும் பூர்வீகம் காங்கய நாடுதான் என்பது சிறபபுக்குரியது.

## மும்மன்னர் ஆட்சி

தமிழகத்திற்குச் சேர, சோழ, பாண்டியர் மூவேந்தர் ஆட்சி போலக் காங்கய நாட்டிற்கும் மூவர் ஆட்சி என்பது புலவர் புகழும் செய்தி

காடையூரில் இருந்து அரசு புரிநதவர்கள் பொருளந்தை குலக் காடையூர் காங்கய மன்றாடியார் மரபினர். இவாகள் பொருளந்தை குலத்தில் முழுக்காது பிரிவைச் சேர்ந்தவர்கள் பழையகோட்டை ஆனூரில் இருந்து ஆட்சி புரிந்தோர் பயிரகுலத்தலைவர் சர்க்கரை மன்றாடியார் மரபினர் காங்கயத்திலிருந்து ஆட்சி புரிந்தவர்கள் செங்கண்ண குலத்துத் தலைவர்கள் பல்லவராயர் மரபினர் இதனை இலக்கியம் பின்வருமாறு புகழுகிறது.

*தங்கக் கட்டியும் தந்தியின் குட்டியும்*
*தரள மோகன மாலையின் பெட்டியும்*
*முன்கை கட்டியே நெஞ்சம் பறைகொட்டி*
*முடிமன்னர் தினம் கப்பங்கள் கட்டியும்*

*எங்கு மெட்டிய விருதுகள் கொட்டியும்*
*யானை பன்னிரு கடகங்கள் கட்டியும்*
*கொங்கை மெட்டியே இம்முடி சூடிய*
*குமார காங்கேயர் நாடெங்கள் நாடே!*

*காமத் துரோக எதிரியர் மிண்டன்*
*தக்க சொட்டை முனைவலர்க்குக் கண்டன்*
*தாய் முதுகில் கவிஞோர்கள் ஏறிச்*
*சவுக்கி லேஅடி போடப் பொறுததுமே*
*நாமிந்தப் புலவோ னுக்குததொண்ட டானது*
*நல்ல தம்பிச் சருக்கரை உத்தமக்*
*காமிண்ட மன்றாடி மன்னவன் கீர்த்தி*
*கதிக்கும் காங்கேய நாடெங்கள் நாடே!*

*நிதம்ப ரப்பிய தானதன் மங்களும்*
*நீதி சறறும் வழாது வழங்கும்*
*புதன் பெருக்கிய புத்தியும் கல்வியும்*
*பூசு ரர்க்குச் செயுமுப காரமும்*
*இதம் பரவு சிவபூசை நேயமும்*
*யாவர்க்கு முபகா ரங்களே செய்யும்*
*சிதம்பரப் பல்ல வேந்திர அரசு*
*செலுத்து காங்கேய நாடெங்கள் நாடே!*

மூவரும் கொடையிலும், வீரத்திலும், மக்களை ஆதரிக்கும் பண்பிலும் சிறந்து விளங்கினர். இன்றும் இம்மூன்று பட்டவர்த்தனரும் சிறப்புற்று விளங்கி வருகின்றனர் இவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள்.

**காங்கய நாட்டின் சிறப்பு**

காங்கய நாட்டில் ஓடுவது மாநதியின் நீர். வீதியில் தேர்களே உயர்ந்து காணப்படுகின்றன. இரவலரைத் தேடிச்சென்று தான தர்மங்கள் செய்யும் நாடு காங்கயநாடு அங்கு உள்ள கோயில்கள் செழித்துக் காணப்படுகின்றன அன்னக்கொடி கட்டித் தானதர்மம் செய்து இரவலர்க்குச் சோறு போடுவதால் அக்கொடிகளின் ஆட்டம் அங்கு காணப்படுகிறது. வேறு ஆட்டம் இல்லை. அதிர்வன முரசுகளேயாகும். எல்லோரும் பாடல்கள் இசைப்பர் இச்சிறப்புகளையுடையது காங்கயநாடு என்கிறார் புலவர்.

*ஓடக் காண்பது மாநதி நீர்கள்*
*உயரக் கண்டது வீதியெங்கும் தேர்கள்*

*தேடக் கண்டது தானதன் மங்கள்*
*செழிக்கக் கண்டது தேவத் தலங்கள்*
*ஆடக் கண்டது அன்னக் கொடிகள்*
*அதிரக் கண்டது முரசு துடிகள்*
*பாடக் கண்டது கீதங்கள் யாரும்*
*பகரும் காங்கேய நாடெங்கள் நாடே!*

எட்டுத் திக்குகளிலும் காங்கயநாடு புகழ் பெற்றது. கொங்கு 24 நாடுகளிலும் தலைமையானது. அன்னதானத்தில் சிறந்தநாடு. கலை வளரும் நாடு. முடி சூடிய தலைவர்கள் அரசு புரிவது. சிவன் மலையில் சீருடன் தேரோட்டும் நாடு. செல்வம் சிறக்கும் நாடு என்ற ஒரு பாடல் காங்கய நாட்டைப் புகழுகிறது.

*அட்டதிசை யெங்கணும் அறுநான்கு நாட்டிலும்*
*அதிபவுசு பெற்றநாடு*
*அரதேசி பரதேசி பசியாற என்னாளும்*
*அன்னம் பகிர்ந்தநாடு*

*மட்டுள்ள குலமாதர் நடனசங் கீதமும்*
*வரிசைபல பெற்றநாடு*
*வாகையுடன் நாட்டார்க்கு மணிமுடி சூட்டவே*
*வந்தரசு பெற்றநாடு*

*திட்டமுள சக்திசிவன் மலைவே லவர்க்குத்*
*திருத்தேர் நடத்துநாடு*
*செம்மைமிகு பனிரெண்டு கிராமநாட் டாருக்கும்*
*செல்வம் சிறந்தநாடு*

*கட்டமுடி தவறாது வெட்டிச் செயங்கொண்டு*
*கனபவிசு பெற்ற நாடு*
*கனசென்னி மலைகாஞ்சி ஆன்பொருநை சூழ்கின்ற*
*காங்கயநன் னாடுதானே!*

மேலும் கவிஞர் காங்கயநாட்டின் வளத்தை விவரிக்கின்றார். நீர் வளமும், நிலவளமும், மக்கள் மனவளமும் அதனால் தெரிகிறது

*முத்து ரத்னம் விளைவுள்ள நாடு*
*முனிவர் வேள்வி வளங்கொண்ட நாடு*
*சத்திர சாலை மிகுந்துள்ள நாடு*
*தடந்தொறும் தண்ணீர்ப் பந்தல்உள நாடு*

*நித்திய மங்கள கலியாண நாடு*
*நிறைந்த செல்வம் சிறந்துள்ள நாடு*
*மெத்த வீரம் விசயம் புகழும்*
*விளங்கும் காங்கய நாடெங்கள் நாடே!*

'ரத்னம' விளைவுள்ள நாடு என்பது மிகவும் அரிய உண்மை காங்கய நாட்டுப் பகுதியில் சிவன்மலை சூழ்ந்த பகுதியில் படியூர் உள்ளிட்ட ஊர்களில் பல வண்ணக் கற்கள் பன்னெடுங் காலமாய்க் கிடைக்கின்றன. சங்க காலத்தில் சேரர் ஆட்சிக்காலத்தில் அவை மணிகளாகச் செய்யப்பட்டும், பாசிகளாக உருவாக்கப்பட்டும் ரோம் நாட்டுக்கு ஏற்றுமதி ஆயிற்று தமிழகப் பெண்களும் விரும்பி அணிந்தனர் காங்கய நாட்டுக் கல்மணிகளை ரோம் நாட்டுப் பெண்கள் மிகவும் விரும்பி அணிநதனர் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கொடுமணல் அகழாய்வு அதனை இன்று மெய்ப்பிக்கிறது. பதிற்றுப்பத்து என்னும் சங்க இலக்கியமும் இதைக் கூறுகிறது. (பாடல் 67, 74)

காங்கய நாட்டு வேளாளர்கள், அந்தணர், ஞானியர், புலவர், தேவர்கள் ஆகியோருக்குக் குறைவில்லாமல் உணவளிப்போம் என்று மேழிக் கொடிகட்டி அன்னமிடக்கூடியவர்கள் அவர்கள் செல்வம் மிக்கவர்கள் அரசர்கட்கு முடிசூடும் உரிமை படைத்தவர்கள். இதோ புலவர் பாடும் புகழ் வரிகள்.

*'மறைய வர்க்கும் மெய்ஞ்ஞானி யர்க்குங்கவி*
*வாண ருக்கும் சிறந்திடு தேவர்க்கும்*
*குறைவி லாமல் அனம்கொடுப் போம்எனக்*
*கூர்ந்து மேழித் துவசங்கள் கட்டிய*
*நிறைந்த செல்வம்சம் பத்துள்ள வேளாளர்*
*நீதி மன்னர்க்கு மாமுடி சூட்டவே*
*இறைகு டிகள்எண் ணாயிரம் கோத்திரம்*
*இருக்கும் காங்கேய நாடெங்கள் நாடே'*

வேளாளர் சடையப்ப வள்ளல் மரபினர் கொடுக்க வசிட்டன் இராமனுக்கு முடிசூட்டிய காட்சி இங்கு நினைவுகூரத் தக்கது.

**காங்கய நாட்டு ஊர்கள்**

காங்கயம், வள்ளிஎறிச்சல், காடையூர், பட்டாலி, கீரனூர், பார்ப்பதி, பரஞ்சேர்வழி, காரையூர், மருதுறை, முத்தூர், கண்ணபுரம், வெள்ளகோயில், ஆறுதொழு, ஆலாம்பாடி ஆகிய 14 ஊர்களைக் காங்கயநாடு தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

இவைகளைத் தொகுத்துக் காங்கய நாட்டு ஊர்த்தொகைப் பாடல் ஒன்றும் பாடியுள்ளனர்.

*காங்க யத்துடன் வள்ளிதென் காடையூர்*
*கந்தர் மேவிய பட்டாலி கீரனூர்*
*ஓங்கு பார்ப்பதி நற்பரஞ் சேர்வழி*
*உற்ற காரை மருதுறை வெண்முத்தூர்*
*தேங்கு கண்ண புரம்வெள்ளை கோவிலும்*
*சிறந்த ஆறுதொழு ஆலாம் பாடியும்*
*தீங்கி லாதகங் காகுல நாட்டார்*
*செழிக்கும் காங்கய நாடெங்கள் நாடே*

மெக்கன்சி ஆவணங்களும், வேறு சில பாடல்களும் காங்கய நாட்டில் 12 ஊர்கள் என்று கூறுகின்றன. ஆறுதொழு ஆலாம்பாடி ஆகியவை காங்கய நாட்டு ஊர்களாக முன்பு சேர்க்கப்பெறவில்லை. அவ்விரண்டு ஊர்களும் காங்கய நாட்டில் குடியேறிய பொருளந்தை குலத்து வேளாண் பெருமக்களால் உருவாக்கப் பெற்ற புது ஊர்கள் ஆகும். அவ்விரு ஊர்களிலும் பொருளந்தை குலப் பெருமக்களே இன்றும் தனிக் காணியாளர்களாக வாழ்ந்து வருகின்றனர். பொருளந்தை குலக் காணிப்பாடல்களிலும் அவ்விரண்டு ஊர்களும் குறிக்கப் பெறுகின்றன.

இருபத்து நான்கு நாட்டுப் பட்டயம் என்னும் ஆவணம் ஒன்று சிவன்மலை, துறவலூர், தேவதானம், வீரசோழபுரம் ஆகிய நான்கு ஊர்களையும் காங்கயநாட்டு ஊர்களுடன் சேர்த்துக் கூறுகிறது. தேவதானம் என்பது ஆறுதொழு என்பது அறிஞர்கள் கருத்து. கோயிலுக்குக் கொடுக்கப் பெற்ற கொடை நிலங்கள் அவ்வூரில் மிகுந்திருந்ததே அப்பெயர் வரக் காரணம் ஆயிற்று காங்கய நாட்டாரின் பக்திப் பெருக்கம் இதன் மூலம் தெரிகின்றது

❖❖❖❖❖❖

# 3. முத்தூர்

## முத்தூர்

காங்கயநாட்டு ஊர்த்தொகைப் பாடலில் முத்தூர் 'வெண்முத்தூர்' என்று சிறப்பு அடைமொழியுடன் கூறப்படுகின்றது 'வெண்' என்பதற்கு வேர்ச்சொல் ''வெள்'' என்பதாகும் வெள் என்பதற்கு ஒளி, ஒளி பொருந்திய என்பது பொருளாகும் ஒளி பொருந்திய முத்தூா அல்லது ஒளி பொருந்தியவர்கள் வாழும ஊர் முத்தூர் என்பது பொருளாகும

முத்துக்கள் கடலில் மட்டுமல்ல பல்வேறு இடங்களில் தரைப் பகுதிகளிலும் தோன்றுவதாக இலக்கியங்கள் கூறுகின்றன. அதன்படி உள்நாட்டுப் பகுதியிலும் பல இடங்களில் முத்துக்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு உள்ளது

காங்கய நாட்டைச் சிறப்பிக்கும் பாடல் ஒன்றில்

*'முத்துரத்தினம் விளைவுள்ள நாடு'*

என்று கூறப்படுகிறது முத்துக்கள் பலவற்றில் 'வெண்முத்து' என்பதொன்று வெண்மையான முத்துக்கள் தோன்றும் இடம் முத்தூர்ப் பகுதியாக இருக்கலாம்

முத்தூரில் காட்டை அழித்து நாடாக்கிக் குளம் தோண்டி வளத்தைப் பெருக்கியவர்கள் கொங்கு வேளாளரில் முத்தன் குலத்தினர். முத்தர் அல்லது முத்தன் குலத்தார் ஏற்படுத்திய ஊர் முத்தூர் என்றும் பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது

சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் முத்தூற்றுக் கூற்றம் இப்பகுதியாக இருக்கலாம் என்று ஆய்வாளர் திருப்பூர் க பழனிசாமிப் புலவர் அவர்கள் கருதித் தம் கொங்குச் செல்வியில் எழுதியுள்ளார்.

அகத்தியரிடம் மாணாக்கராக இருந்த ஆதிசைவ முனிவர் ஒருவர் இங்கு வாழ்ந்து வந்தார். அவர் நாள்தோறும் சோழீசரைப் பூக்கொண்டு வணங்கி வந்தார் ஒரு நாள் எங்கும் பூக்கள் கிடைக்கவில்லை. தடாகக் கரையில் ஒரு முத்துமாலை கிடைத்தது அதை இறைவனுக்குச் சாத்தி வழிபட்டார். நந்தவனத்தில் ஒரு முத்துமாலை கிடைத்தது. அதை அம்மனுக்குச் சாத்தி வழிபட்டார். அதனால் முத்துமாலைகள் கிடைத்த இவ்வூர் முத்தூர் ஆயிற்று என்றும் கூறுவர்.

சைவத் திருமுறைப் பாடல்கள் பலவற்றில் சிவபெருமான்.. 'முத்தன்' என்றும், சிவனடியார்கள் 'முத்தர்' என்றும் குறிக்கப் பெற்றுள்ளனர் இச் சைவச் சிறப்பாலும் முத்தூர் பெயர் பெற்றிருக்கலாம்.

**இருமுத்தூர்கள்**

மேற்கண்ட சைவ அடியாருக்கு இரண்டு முத்துமாலைகள் கிடைத்தன அல்லவா? பெரிய முத்துமாலை கிடைத்த இடம் பெரியமுத்தூர் என்றும், சிறிய முத்துமாலை கிடைத்த இடம் சின்னமுத்தூர் என்றும் பெயராயிற்று என்பர். சின்னமுத்தூர் தென்அரசு, வடதொரட்டி, மேல்பாறை, கீழ்சரிவு என்ற அமைப்புக் கொண்டது என்பர். கீழ்சரிவைக் கீழ்கரை என்றும் குறிப்பர்.

இதனை

*'குடக்கினில் பாறை குணதிசைக் கரையும்*
*வடதிசைத் தொரட்டி மரந்தெற் கரசும்*
*செழுங்கம லங்கள் சேர்வா விகளும்*
*எழுநிலை மாடத்து எழில்களும் மிகுந்து*
*பொன்னுல கத்தைப் போன்றஅழகு உற்றிடும்*
*சின்னமுத்தூர், என்று புலவர் பாடுவர்.*

சின்ன முத்தூரைச் சிறுமுத்தூர் என ஓர் ஆவணம் கூறுகிறது.

**நட்டூர்**

ஒரு காலத்தில் இப்பகுதி நட்டூர் என்று பெயர் பெற்றுள்ளது. மக்கள் குடியேறி வாழ்ந்த பல பகுதிகட்கு நடுவில் அமைந்த காரணத்தால் கொங்கு நாட்டில் சில ஊர்கள் நட்டூர் என்று பெயர் பெற்றன

காஞ்சிக்கூவல் நாட்டுக் கூவலூர், காங்கயநாட்டுக் காடையூர், பரஞ்சேர்வழி போன்ற பல ஊர்கள் நட்டூர் என்று பெயர் பெற்றிருந்ததாக இலக்கியம், கல்வெட்டு வாயிலாக நாம் அறிகின்றோம். அதுபோல முத்தூரும் 'நட்டூர்' என்று ஒரு காலத்தில் பெயர் பெற்றிருந்தது. நட்டூர் ஆகிய ஊர்களை 'மத்யபுரி' என வடமொழியாக்கினர்..

**மாதவராயபுரம்**

ஒரு காலத்தில் இப்பகுதியை மாதவராயன் என்ற தலைவன் ஆட்சி புரிந்துவந்தான். அவன் தொட்டிய நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவன்.

சிவாலயத்திற்குத் தெற்கே அம்மன்னன் கோட்டை ஒன்று கட்டி முத்தூரை ஆட்சிபுரிந்துவந்தான். திருமால் பக்தனான அவன் ஒரு

பெருமாள் கோயில் கட்டி அதற்கு மாதவராயப் பெருமாள் என்று பெயரிட்டான்.

தான் கட்டிய கோட்டைக்குக் காவல் தெய்வமாகத் தன் குலதெய்வம் கம்பளத்தம்மையை வேண்டி இங்கு கோட்டைக்கரையம்மன் என்ற பெயரில் காவல் தெய்வமாக்கி ஒரு கோயில் கட்டினான் அக்கோயிலைக் கோட்டையின் தென்பால் நிறுவினான்.

மாதவராயன் வாழ்ந்த காலத்தில் இவ்வூர் அம்மன்னன் பெயரால் 'மாதவராயபுரம்' என்ற பெயரில் வழங்கியது

போசள மன்னர் காலத்தில் ஒரு மாதவராயன் என்ற தண்டநாயகன் இப்பகுதியை ஆட்சிபுரிந்ததாக வரலாறு கூறுகிறது. மாதவராயபுரம் என்ற பெயர் அவன் பெயராலும் ஏற்பட்டிருக்கலாம்

**முத்து மங்கலம்**

கோட்டைக்கரையம்மன் கோயில் உள்ள பகுதி முத்தூருக்கும் மங்கலப்பட்டிருக்கும் இடையே உள்ள காரணத்தால் 'முத்துமங்கலம்' என அழைக்கப்படுகிறது

**இலக்கிய ஏடுகளில்**

'அழகான முத்தூர்' என்று காங்கய நாட்டுப்பாடல் கூறுகிறது முத்தூர் நகரம் என்றும் பாராட்டப்பட்டுள்ளது. 'முத்து நன்னகர்' என ஒரு பாடலில் குறிக்கப்படுகிறது.

*'தாவுபுகழ் முத்தூர்'*
*'பூமேவு சோலைசெறி புகழ்முத்து மாநகர்'*
*'விண்ணொத்த முத்துநகர்'*
*'வளம்பெருகு முத்துநகர்'*
*'பொன்னிலகு முத்துநகர்'*
*'நிறைந்துள பணிலம் நிதங்கொழித் திலகும்*
*முத்தினம் மிகுந்த முத்தூர் நகர்'*
*'சிறந்த முத்து மாநகர்'*
*'சுருதியர்வாழ் முத்தூர்'*
*'பழஞ்சீர்சேர் முத்துநகர்'*

*'அதிபர்உறை முத்துநகர்'*

*'தூய முத்துநகர்'*

*'மாயவன் மார்புறை தேவிமகிழ் முத்தூர்'*

என்று பொதுவாக முத்தூரும்,

*'நன்னெறிசூழ் சின்னமுத்தூர்'*

*'சீதேவி வாழும் சின்னமுத்து நகர்'*

எனச் சின்னமுத்தூரும் இலக்கியங்களால் ஏத்திப் பாடப்படுகின்றது.

**சங்க இலக்கியத்தில்**

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடிகிழார் பாடிய புறநானூற்றுப் பாடலில் (எண் 24) 'முத்தூறு' என்ற வேளாளர் வாழும் நெல் விளையும் ஊர் ஒன்று குறிக்கப்பட்டுகிறது.

*'பொன்அணி யானைத் தொல்முதிர் வேளிர்*
*குப்பை நெல்லின் முத்தூறு தந்த*
*கொற்ற நீள்குடை கொடித்தேர்ச் செழிய'*

என்று பாண்டியன் அழைக்கப்படுகிறான். அண்மையில் பேரூரில் பாண்டியன் நெடுஞ்செழியன் பெயர்பொறித்த மண் தகடுகள் பல கிடைத்துள்ளன முத்தூர் முதற்காணியாளர் ஒருவர் 'பாண்டியப்பன்' என்று குறிக்கப் பெறுகிறார். எனவே சங்ககாலப் புலவர் பாடிய முத்தூறு நம் முத்தூர் ஆகவே இருக்கலாம். பழைய உரையாசிரியர் 'முத்தூற்றுக்கூற்றம்' எனக் குறிப்பார். சிலப்பதிகாரத்திலும் முத்தூர்க் கூற்றம் குறிக்கப்படுகிறது. (11:22:உரை)

கொங்கு நாடெங்கும் நடைபெற்ற பல சமுதாய ஒப்பந்தங்களிலும், சமய நிகழ்ச்சிகளிலும் முத்தூர்க் காணியாளர்கள் பலர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். முத்தூர்க் காணியாளர்கள் பிறரால் நன்கு மதிக்கப்பட்டுள்ளனர்.

பட்டாலிக் கிரையப் பட்டயத்தில் 'முத்தூருப் பெருமாக்கவுண்டர்' என்பவரும், பொருளந்தைகுலச் செப்பேட்டில் 'முத்தூரிலேயிருக்கும் சின்னப்பகவுண்டர், குமரசாமிக்கவுண்டர், குப்பிச்சிக்கவுண்டர், சின்னையகவுண்டர், ரங்கையகவுண்டர்' என்பவர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**கடகத்தூர்**

டி எம் காளியப்பா அவர்கள் முத்தூருக்குக் கடகத்தூர் என்ற பெயர் இருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார். கடகம் என்பதற்குப் பிங்கல நிகண்டு படை, பாசறை என்று பொருள் தருகிறது எனவே படையும், பாசறையும் இருந்த முத்தூர் கடகத்தூர் எனப் பெயர் பெற்றது போலும்.

**சேய்க்கிரமங்கள்**

முத்தூரும், சின்னமுத்தூரும் தொன்மையான ஊர்கள். இவைகளைத் தாய்க்கிராமங்கள் எனலாம். இக்கிராம எல்லைக்குள் பல ஊர்கள் புதியனவாகத் தோன்றியுள்ளன மோளக்கவுண்டன் புதூர், தொட்டியபாளையம், மலையாத்தாபாளையம், சூரியநாராயணவலசு, கரட்டுப்பாளைய்ம், சின்னக்கரட்டுப்பாளையம், வெள்ளியங்காட்டுப் புதூர், நகப்பாளையம், ஊடையம், செந்நாக்கல்மேடு, சர்க்கரைபாளையம், புதுப்பாளையம், சேரம்பாளையம், செங்கோடம்பாளையம், வேலாயுதம்பாளையம், பாரவலசு, நல்லிக்கவுண்டன்புதூர், சின்னமுத்தூர்த் தண்ணீர்ப்பந்தல், மணிவாசகபுரம், நல்லம்மாபுரி, சோமநல்லூர் என்பன இக்கிராம எல்லைக்குள் அடங்கிய ஊர்களாகும். ஊடையம் என்பது கோட்டையின் நீர் அரண் ஆகும்

முன்பு முத்தூர் நிர்வாகத்திற்கு மூன்று மணியகாரர்கள் இருந்தனர். இன்றைய ஊராட்சி மன்றம் உள்ள இடத்தில் பழமையான 'மங்கம்மா சத்திரம்' இருந்தது. சாமியார்கள் சிலர் இருந்து அன்னதானம் செய்தனர். சத்திரத்திற்கும் சிவன் கோயிலுக்கும் சுரங்கம் இருந்துள்ளது.

ஈரோடு, கொடுமுடி, வெள்ளகோயில், காங்கயம் போன்ற எல்லா இடங்களிலிருந்தும் முத்தூர் வர வசதியாகப் பேருந்துகள் உள்ளன.

❖❖❖❖❖❖

# 4. நொய்யல் ஆறு

முத்தூர் அருகே பழம்பெரும் வரலாற்றுச் சிறப்புடைய நொய்யல் ஆறு ஓடுகிறது. முத்தூர் கிராமத்தின் வடக்கு எல்லையாகவும் திகழுவது நொய்யல் ஆறு. ''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என்பது பழமொழி முத்தூர்ப் பகுதிக்கு அழகூட்டுவதும், வளம் தருவதும் நொய்யல் ஆறு ஆகும்.

கொங்கு நாட்டில் தோன்றிக் கொங்கு நாட்டில் பாய்ந்து கொங்குநாட்டு எல்லையிலேயே காவிரியோடு கலக்கும் ஆறு காஞ்சிமாநதி என்னும் நொய்யல் ஆறு ஆகும்.

## தோற்றம்

கொங்கு நாட்டின் மேற்கு எல்லையாகத் திகழும் வெள்ளியங்கிரி மலைப்பகுதியில் தோன்றிப் பெரும்பாலும் கிழக்கு நோக்கிச் சுமார் 170 கிலோ மீட்டர் பயணம் செய்து காவிரியோடு கலக்கிறது காஞ்சிமாநதி.

கோவைகிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் வெள்ளியங்கிரி மலையிலிருந்து புறப்படும் காஞ்சிமா நதியை ஒரு வில்லிலிருந்து புறப்படும் அம்புக்கு ஒப்பிட்டுக் கூறுவார்

வெள்ளியங்கிரியின் பல்வேறு பகுதியிலிருந்து புறப்படும் பல சிற்றாறுகள் ஒன்றாகச் சேர்ந்து காஞ்சிமாநதி தோன்றுகிறது முதலில் 2000 மீட்டர் உயரத்தில் உள்ள ''ஆண்டிகனை'' நீர் காஞ்சிமாநதியில் சேர்கிறது.

மையமாக வரும் நொய்யலாற்றுக்குத் தென்பகுதியில் தர்மலிங்கம்மலை, எட்டிமடைமலை, அய்யாசாமிமலை, ஒரத்திமலை, கூத்தாண்டிமலை, குச்சிமலை ஆகியனவும், மேற்குப் பகுதியில் அத்திமலை, கரிமலை, குஞ்சரமுடி, பொறத்திமலை, வெள்ளியங்கிரி, மூக்கை, தும்பிமுடி, வரடிமலை ஆகியவையும், வடபகுதியில் இடிஞ்சமலை, பெருமாள்முடி, மருதமலை ஆகியனவும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் ஆகும்.

கரிமலையில் தோன்றும் பெரியாறு, கொடுவாய்ப்பள்ளம், நந்தன்கரைப் பள்ளம் இரண்டும் கூடிய சின்னாறு, இருட்டுப்பள்ளம், வெள்ளியங்கிரியில் தோன்றும் சுவாமிமுடியாறு, ஆனையாறு, பூண்டியாறு,

நீலி வாய்க்கால், ஒரத்திப்பள்ளம், அய்யாசமிமலைப் பள்ளம், ஆனைப்பள்ளம், பாம்பாட்டிப் பள்ளம், சங்கனூர்ப் பள்ளம் தடாகப்பள்ளம், திருப்பூராறு, வண்ணாற்றங்கரை, நள்ளாறு முதலிய பல ஆறுகளும், பள்ளங்களும், ஓடைகளும், அருவிகளும், காஞ்சிமா நதியோடு கலக்கிறது. முட்டம் அருகேயுள்ள ஒரு துணையாற்றுக்கு இன்றும் 'காஞ்சிமாநதி' என்றே பெயரிட்டு அழைக்கின்றனர்.

### கொங்குநாட்டு ஆறுகள்

கார்மேகக் கவிஞரின் கொங்குமண்டல சதகமும், வாலசுந்தரக் கவிராயரின் கொங்குமண்டல சதகமும் கொங்குநாட்டு ஆறுகளைத் தொகுத்துக் கூறுகின்றன

*திருமணிமுத்தாறு* — *சண்முகநதி*
*தொப்பையாறு* — *பாலையாறு*
*காவிரியாறு* — *வாளையாறு*
*பவானியாறு* — *காரியாறு*
*செய்யாறு* — *குடவனாறு*
*காஞ்சியாறு* — *சண்பகநதி*
*ஆன்பொருநையாறு* — *சிற்றாறு*
*நள்ளாறு*

என்பன அவ்வாறுகளாகும், இதனை

*"திருமணி தொப்பைபூங் காவேரி வானியும் செய்யநதி*
*தருமணி காஞ்சி பொருநைநள் ளாறொடு சண்முகமும்*
*குருமணி பாலை நதிவாளை காரி குடகனதி*
*வருமணி சண்பகம் சிற்றாறு சூழ்கொங்கு மண்டலமே"*

என்ற சதகப்பாடல் விளக்கும், இங்கு 15 ஆறுகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஆனால் இராமபத்திரன் பட்டயம், தென்கரை நாட்டுப் பட்டயம் போன்றவை,

*வானியாறு* — *சிற்றாறு*
*காவேரியாறு* — *குடகனாறு*
*காஞ்சிமாநதி* — *நன்காஞ்சியாறு*
*நல்லமங்கையாறு* — *நல்லாறு*

*ஆன்பொருநையாறு*　　*உப்பாறு*

*மீன்கொல்லியாறு*

ஆகிய பதினொறு ஆறுகளைத் தொகுத்துக் கூறுகின்றன.

முற்காலப் பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனின் சீவரமங்கலச் செப்பேட்டில்

*"மீ கொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர் புக்குத்*
*திருமாலுக்குக் குன்றமன்னதோர் கோயிலாக்கியும்"*

என்று கூறப்படுகிறது. காஞ்சிமாநதிக்கரைப் பேரூர் இங்கு குறிக்கப்படுகிறது.

கொங்கு நாட்டுக்கு மூன்று முறை தல யாத்திரை வந்தவரும், கொடுமுடியைப் பாடி மகிழ்ந்தவருமாகிய தேவாரம் பாடிய சுந்தரர்.

*"மீ கொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்ப் ,*
*பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே*
*பெற்றாம் அன்றே"*

என்று பாடியுள்ளார்.

குறுப்புநாடு, காங்கயநாடு பற்றிய பாடல்களில்

*"கொந்துலவு காஞ்சிநதி சவுந்தரமா நதிவானி*
*குவாவி விளங்குநாடு*
*கூர்ந்தசங் கத்தையும் தாதியால் வெற்றிசெயும்*
*குறுப்புநன் னாடுதானே"*

*"கனசென்னி மலைகாஞ்சி யான்பொருநை சூழ்கின்ற*
*காங்கயநல் நாடுதானே"*

என்று குறிப்புக்கள் வருகின்றன.

கல்வெட்டில் 'எழுகரைநாடு' என்ற தொடர் பயின்று வருகிறது. அருணகிரியாரும் 'எழுகரை நாட்டவர் தம்பிரானே' என்று பாடுகிறார்.

மோரூர்க் காங்கேயர் ஏடு என்னும் ஓலைப் பட்டயம் அரவகிரியைச் சூழ்ந்த காவேரி, பவானி, திருமணிமுத்தாறு, அலகுமுரிச்சான், தொப்பை, ஆம்பிராநதி, நொய்யல் ஆக சத்தநதியாகிய எழுகரைநாடு' என்று கூறுகிறது.

மெக்கன்சியின் ஆவணம் ஒன்று ஏழு ஆறுகளுடன் ஏழு பாடல் பெற்ற சிவாலயங்கள் உள்ள காரணத்தால் எழுகரைநாடு என்று பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது

'வாணி நொய்யல் காவேரி ஆண்பொருந்தம் ஆளியாறு திருமணிமுத்தாறு தொப்பையாறு ஆக நதி ஏழு, சிவாலயத்துக்கு வரலாறு கரூர், வெஞ்சமாங்கூடல், கொடுமுடி, திருநண்ணா, திருமுருகன்பூண்டி, பேரூர் ஆக திருப்பாடல் பெற்ற திருப்பதி ஏழு, நதியும் ஏழு படைவீடும் ஏழு உண்டானபடியாலே கொங்கு மண்டலம் எழுகரை நாடாகச் சொல்லப்படுகிறது' என்பது மெக்கன்சியின் ஆவணப் பகுதியாகும். எல்லாத் தொகுப்புக்களிலும் காஞ்சிமா நதியாகிய நொய்யல் தவறாமல் இடம் பெற்றிருப்பது சிறப்புக்குரியது ஆகும்.

**காஞ்சி**

நொய்யலாற்றுக்குக் காஞ்சி என்பதே பழம்பெயர் பரணர் என்னும் சங்ககாலப் புலவர் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடிய பதிற்றுப்பத்து என்னும் சங்க கால இலக்கியத்தின் ஐந்தாம் பத்தில் காஞ்சியாறு பற்றிப் பாடுகிறார்

''வேனில் காலத்தில் கொண்டாடப்படும் நல்ல நீர்விழாவின் போது கொங்கு நாட்டு மக்கள் தங்கள் வீடுகளில் தங்காமல் சுற்றத்தார்களுடன் அழகிய சோலையில் தங்கி இன்பமாகப் பொழுதைப் போக்கி நீராடி உண்டு, மகிழும்படியான காஞ்சியாற்று மணலினும் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் வாழ்நாள் பெருகுவதாக' என்கிறார்.

*''மலிபுனல் நிகழ்தரும் தீநீர் விழவில்*
*பொழில்வதி வேனில் பேரெழில் வாழ்க்கை*
*மேவரு சுற்றமொடு உண்டினிது நுகரும்*
*தீம்புனல் ஆயம் ஆடும்*
*காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே''*

என்பது பதிற்றுப்பத்துப் பாடலாகும் கொங்கு மக்கள் காஞ்சிமா நதிக்கரையில் தங்கி உற்றாரோடும் உறவினரோடும் நீர் விளையாட்டு விளையாடி உண்டு மகிழ்ந்துள்ளனர்.

கொடுமணல் இலக்கியங்களில்,

*''சோலை சூழ்திருக் காஞ்சிமாநதி*
*துலங்க வந்தருள் தேவனே''*

*"காஞ்சிமாநதி தன்னிலேவளர்*
*கன்னி மாமயில் அன்னமே"*

*"சிறந்த தாம்திருக் காஞ்சி நதியில்*
*வளரும் செல்வத் துரைமகள்"*

என்று காஞ்சிமாநதி குறிக்கப்படுகிறது

*"மண்பரவும் காஞ்சிநதி"*

*"ஆலிக்கும் திருக்காஞ்சிநதி"*

*"மணக்கும் திருக்காஞ்சிநதி"*

*"செய்யபுகழ்க் காஞ்சி'*

*"அருள்பரவும் காஞ்சி"*

என்று பல்வேறு இலக்கியத் தொடர்கள் காஞ்சிமாநதியைப் புகழுகிறது.

பூந்துறை நாட்டின் எல்லை கூறும் புராணப் பாடலில் தெற்கு எல்லையாக

*"உன்னிய தெற்கில் காஞ்சி"*

என்ற தொடர் காணப்படுகிறது

பேரூர் மடத்துச் செப்பேடு, பேரூர்ச் செப்பேடு, தென்கரை நாட்டுப் பட்டயம், கொங்கு காணியான பட்டயம், 24 நாட்டுப்பட்டயம் ஆகியவற்றில் காஞ்சியாறு என்ற தொடரே பயின்று வருகிறது.

விசயநகர மன்னன் இராமதேவ மகாராயர் பிரதிநிதியாக மதுரையில் முத்துவீரப்ப நாயக்கர் ஆட்சிபுரியும்போது கி.பி 1621-ஆம் ஆண்டு பழைய கோட்டைப் பட்டக்காரர் விசுவநாதச் சர்க்கரை உத்தமக்காமிண்ட மன்றாடியார் காஞ்சிநதி தீரத்தில் நவபிரதிட்டையாக அணையும் வாய்க்காலும் உண்டு பண்ணிப் பணி செய்ததாக நத்தக் காடையூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

காஞ்சிமாநதி என்ற பெயர் முட்டம் அருகே ஒரு சிற்றாறுக்குப் பெயராக வருகிறது என்பதை முன்பு கண்டோம். நன்காஞ்சி (நங்காஞ்சி) என்ற ஆறு கொங்கு நாட்டின் தென்பகுதியில் ஓடுகிறது. கொங்கு 24 நாடுகளில் ஒரு நாடு காஞ்சிக்கோயில் நாடு (காஞ்சிக்குறி, காஞ்சிக்கூவல்) என்று பெயர் பெற்றுள்ளது. அந்நாட்டின் பூந்துறை நாட்டை ஒட்டிய பகுதி காஞ்சித் துண்டம், காஞ்சிக் கூவத்துண்டம் எனப்படுகிறது. ஈரோட்டுக் கல்வெட்டில் இத்தொடர் வருகிறது.

**நொய்யல்**

*காஞ்சிமாநதி என்ற பெயர் மறைந்து இன்று நொய்யலாறு என்று* பெயரே வழங்கி வருகிறது

கி.பி 13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கொங்குச் சோழன் விக்கிரமசோழன் (1283), கொங்குப் பாண்டியன் சுந்தரபாண்டியன் ஆகியோரின் சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேசுரன் கோயில் கல்வெட்டில்,

*"நள்ளாறும் நொயிலாறும் கூடும் மூலை"*

என்றும்,

*"நொய்யலாற்றில் இந்தவரி அணையும் அடைத்துக்*
*காலும் வெட்டிக் குளமும் அடைத்துப் பயிர் செய்து"*

என்றும் கூறப்படுகிறது.

வள்ளிஎறிச்சல் தொண்டைமாக் கவுண்டர் வரலாற்றுக் குறிப்பில் ''நொய்யல் ஆறு'' என்ற குறிப்பு வருகிறது கொங்கு காணியான பட்டயம், குறுப்புநாட்டுப் பட்டயம், தென்கரை நாட்டுப் பட்டயம், முத்தூர்ப் பட்டயம், மோரூர்க் காங்கேயர் ஏடு போன்றவற்றிலும் ''நொய்யல்'' என்ற பெயரே பயின்று வருகிறது

காஞ்சி என்ற பெயர் 13ஆம் நூற்றாண்டில் நொயில், நொய்யல் என்று அழைக்கப்பட்டுள்ளது இம்மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பது ஆய்வுக்குரியது

''நொய்'' என்றால் நுண்மை, சிறுமை, மென்மை, மிருது என்று பொருள் உண்டு உடைந்த அரிசிக் குறுணைக்கு ''நொய்க்குறுணை'' என்று பெயர் கோதுமை ரவையைக் ''கோதுமை நொய்'' என்பர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சேனாவரையர் ''நொய்யும் நுறுங்கும்'' நீக்கிச் சோறு சமைத்தல் பற்றிக் குறித்துள்ளார் கற்களே இல்லாத மென்மையான மணலுக்கு ''நொய்மணல்'' என்று பெயர்.

''நொய்'' என்பதற்குச் சூடாமணி நிகண்டு இலேசு என்ற பொருளும் கூறுகிறது ''குறுநொய்'' என்ற தொடரைத் திவாகர நிகண்டு எடுத்துக்காட்டுகிறது. இது இன்று ''குறுணை என்று மாறிவிட்டது. '''நொய்யரிசி கொதி தாங்காது'' என்ற பழமொழியும் உண்டு. நொறுங்கிய அரிசித் துணுக்கை ''நொய்'' என்று அபிதான சிந்தாமணி கூறும்.

நுண்மையான சிறிய மென்மையான, கல் கலக்காத மணல் காஞ்சியாற்றில் கிடைப்பதால் ''காஞ்சி'' நொய்யல் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். கொங்கு நாட்டின் நொய்யல் கரைப் பகுதியில் கட்டிடம் கட்டுவோர் நொய்யலாற்று மணலைச் சல்லடையில் சலிக்காமல் அப்படியே காரைக்குப் பயன்படுத்துவதைப் பாக்கலாம்.

கோவைகிழார் சி எம். இராமச்சந்திரஞ் செட்டியார் ''காஞ்சி மாநதி'' என்னும் தம் நூலில்.

''நொய் போலச் சிறியவள் நான், கங்கை, யமுனை, சிந்து கோதாவிரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதை போன்ற பெரிய ஆறுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நானோ மிகச் சிறிய வள், நொய் போன்றவள், தானியத்தில் நொய்யிற்குச் சத்து மிகுதி, அதுபோல் அந்தப் பேராறுகள் ஆயிரத்தில் ஒரு பங்கும் மக்களுக்குப் பயன்படுவதில்லை. நானோ நூற்றுக்கு நூறு பயன் தருவேன் அதில்தான் சிறப்பு இருக்கிறது. ஆகவே நொய்யல் என்ற பெயரே எனக்கு விருப்பம்''

என்று நொய்யலாறே பேசுவதாக எழுதியுள்ளார் நொய்யல் காவிரியோடு கலக்கும் இடத்தில் ஊர்ப்பகுதிக்கும், அருகில் உள்ள இரயில் நிலையத்துக்கும் 'நொய்யல்' என்றே பெயர். நொய்யல் காவிரியோடு கலக்குமிடத்தில் கூடுதுறைச் செல்லாண்டியம்மன் கோயில் சிறப்புடன் விளங்குகிறது.

இப்படிச் சீரும் சிறப்புமுடைய சங்க காலச் சிறப்புடைய வரலாற்றுப் பெருமையுடைய ''நொய்யலாறு'' முத்தூரின் வடக்கு எல்லையாகத் திகழுகிறது முத்தூருக்கு அழகூட்டுகிறது

நொய்யலாற்றில் முத்தூர் எல்லையும் ஒரு தடுப்பு அணை கட்டி அதன்மூலம் கார்வழிவரை கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு சொல்லபபமடுறதி

❖❖❖❖❖❖

# 5. முத்தூர்க் காணியாளர்கள்

ஒரு ஊரின் உரிமையுடையவர்கள் அவ்வூர்க் காணியாளர்கள் எனப்படுவர். 'தமிழ்ப் பேரகராதி' காணியாட்சி என்பதற்குப் 'பரம்பரை உரிமை' என்று பொருள் கூறுகிறது ஊரில் உள்ள கோயில்களில் வழிபடுவதற்கும், கோயில் திருவாகத்தில் பங்கு பெறுவதற்கும், ஊர்ப் புறம்போக்கை அனுபவிப்பதற்கும், ஊர் நிருவாகத்தில் தம் உரிமையை நிலைநாட்டவும் காணியாளர்கட்கு எல்லா வகையான உரிமைகளும் உண்டு.

முத்தூருக்குரிய காணியாளர்கள் ஏழு பேர் என்று ஒரு பழம்பாடல் தொகுத்துக் கூறுகிறது

*முத்தன் மணியன் முதற்சேரன் வெள்ளம்பர்*
*மெத்துபொரு ளந்தையுடன் மேலான – சித்திபெறும்*
*காவலியர் நன்முதலிக் காமருடன் ஏழ்முதன்மை*
*தாவுபுகழ் முத்தூர்த் தலம்*

என்பது அப்பாடலாகும்

கொங்கு வேளாளர்களில் முத்தன்குலம், மணியன்குலம், சேரன்குலம், வெள்ளம்பர்குலம், பொருளந்தை குலம் ஆகிய ஐந்து குலத்தாரும், காவலியர் என்னும் பெயருடைய வேட்டுவகுலப் பெருமக்களும், முதலியார்களும் (செங்குந்தர் என்றும் கைக்கோளர் என்றும் கூறப்பெறுபவர்கள்) முத்தூர்க் காணியாளர்கள் ஆவர். குலம் என்பதைக் கூட்டம் என்றும், கோத்திரம் என்றும் கூறுவர்

முதன் முதலில் முத்தன் குலத்தாரே முத்தூரை உருவாக்கி முதற்காணியாளர்களாக விளங்கினர். மோகனூர் மணியன் குலத்தார் இங்கு குடியமர்ந்த போது முத்தன் குலத்தார் தம் பெண்களைக் கொடுத்து முதல் உரிமைகளைக் கொடுத்தார்கள் என்பது செவிவழிச் செய்தியாக வழங்கிவரும் நிகழ்ச்சியாகும் அதுமுதல் மணியகுலத்தார் முதல் உரிமை பெற்றுத் திகழ்ந்தனர். இதனைத்தம் 'முத்தூர்த் தலமாண்பு' என்னும் நூலில் அமரர் எம் வி குப்புசாமிக் கவுண்டர் அவர்கள் மிகத் தெளிவாக எழுதியுள்ளார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல ஊர்களில் நடைபெற்றுள்ளன.

திருப்பூர் க. பழனிசாமிப் புலவர் 'முத்தன் என்னும் கூட்டத்தாரை

வென்று மணியன் கூட்டத்தார் முத்தூரைத் தமதாக ஆக்கினர்' என்று தம் கொங்குச் செல்வியில் எழுதியுள்ளார் (1949).

இதைப் பார்த்து ஆய்வாளர் டி.எம். காளியப்பா அவர்கள் 'மணிய குலத்தினர் போர் புரிந்து முத்தூரைக் கைப்பற்றியதாக நினைக்கத்தக்க ஆதாரங்கள் உள்ளன எனத் தம் நூலில் எழுதியுள்ளார் (1978). நல். நடராசன் அவர்கள் அண்மையில் வெளியிட்ட தம் 'கொங்கு வேளாளக் கவுண்டர்கள் சமூக வரலாறு' என்னும் நூலில் மேற்கண்ட செய்திகளைப் பார்த்து 'முத்தர்களின் முத்தூர்க் காணியை மணியன் குலத்தினர் கைப்பற்றிக் கொண்டதால் முத்தர்கள் கொங்கின் பிற பகுதிகளுக்குக் குடிபெயர வேண்டிய நிலை ஏற்பட்டது' என்று எழுதியுள்ளார்

இவர்கள் மூவரின் கூற்றம் தவறானவை. இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. கொங்கு நாடெங்கும் முன்பு குடியமர்ந்து காணி பெற்ற குலத்தாரின் ஓர் ஊரைப் போரிட்டு வென்று விரட்டிவிட்டு வேறு குலத்தார் குடியேறியதாக எந்த ஒரு வரலாறும் இல்லை. பழங்குடியினர் புதியதாக வந்தவர்களைத் தம்மோடு 'சேர வாரும் ஜெகத்தீரே' என்று அன்பும், நட்பும் கொண்டு உறவு பாராட்டி அழைத்துத் தம்மோடு இணைத்துக் கொண்டதாகவே கொங்குக் குல வரலாறு கூறுகிறது

முத்தன் குலத்தாரோடு மணியன் குலத்தார் இணைந்து தென்னிலையில் போர் செய்ததாகவும், இணைந்து பகைவரை எதிர்த்ததாகவும், பகைவரால் இன்னல் ஏற்றபோது கூட இணைந்து அதை ஏற்றதாகவும் வரலாறு உள்ளது. இந்த ஏழு முதன்மை முதலில் விளங்கியிருக்க வேண்டும். பின்பு வேட்டுவரில் பூவலியர், மணியவேட்டுவர், வெங்காஞ்சி வேட்டுவர் என்ற மூவரும் கொங்குச் செட்டியாரும், கொங்கு நாடாரும் முத்தூர்க் காணியாளர்களாக விளங்கினர். ஆக மொத்தம் பன்னிரு காணியாளர்கள் முத்தூருக்கு உரியவர்களாக விளங்குகின்றனர்.

காங்கயநாட்டுக் காணிப்பாடல் கொங்குவேளாண் காணியாளர்களைச் சிறப்பிக்கிறது

*'அழகான முத்தூரில் வளர்கின்ற முத்தனை*
*அய்யமிகு மணியகுலனை*
*அகளங்க சேரனைத்தனபதிபவள்ளம் பனை*
*அனதான பொருளந்தையை'*

என்பது அப்பாடலாகும்.

அப்பன்னிருவர் தொடர்பான கொங்கு நாட்டுச் செய்திகள் சிலவற்றைச் சுருக்கமாகக் காணலாம்.

**முத்தன் குலம்**

முத்தூர்க் காணிப்பாடலில் முதலாவதாக இடம் பெற்றிருப்பது முத்தன் குலம் இவர்களை 'முத்தூரின் பழங்குடிகள்' என்று அமரர் எம்.வி குப்புசாமிக் கவுண்டர் குறித்துள்ளார். முத்தூரை முதலில் உருவாக்கியவர்கள் முத்தன் குலத்தினரேயாவர்.

'முத்துக்களால் ஆன அணிகலன்களை மிக விரும்பி அணியும் இயல்பினர் ஆதலின் இவர்கள் முத்தர்–முத்தன் என்று பெயர் பெற்றனர்' எனத் திருப்பூர் க பழனிச்சாமிப் புலவர் தம் 'கொங்குச் செல்வி' என்னும் நூலில் எழுதியுள்ளார்.

'முத்தன் என்னும் தமிழ்ச்சொல் சிறந்தவன், உயர்ந்தவன், 'பளிச்' என்று மேலான நிலையில் இருப்பவன் என்று பொருள் தரும் எனவே சிறந்தவன், உயர்ந்தவன், மேலானவன என்ற பொருளில் முத்தன் குலத்தார் பெயர் பெற்றனர் என்று அறிஞர் டி எம். காளியப்பா அவர்கள் கூறியுள்ளார்

'முத்தன் குலம் உழவுத் தொழிலால் பெயர் பெற்றது முத்து என்பது ஆமணக்கு, பருப்பு போன்றவைகளைக் குறிக்கும் இவ்வாறு இவைகளை விளைவிக்கும் உழவர்கள் இப்பொருளோடு தொடர்பு கொண்டு முத்தன் குலம் எனப் பெயர் பெற்றனர் என்று கூறுகிறார் நல் நடராசன் வாரக்க நாட்டில் நாரணபுரம் என்னும் ஊர்ச் செப்பேட்டில் முத்தன் குலத்தார் புகழ் பேசப்படுகிறது. அங்குள்ள அங்காளபரமேசுவரி கோவிலுக்குக் கொடை அளித்தவராக முத்தன் குலத்தார் குறிக்கப்படுகின்றனர். முத்தூர் முத்தகுலம் குழந்தைக்கவுண்டர், மழவராய நயினாக்கவுண்டர் ஆகியோர் அங்கு குறிக்கப்பட்டுள்ளனர் ஓடத்துறையில் முத்தூர் முத்தகுலத்தார் குடியேறி வாழ்ந்ததாக நாரணபுரம் செப்பேடு மூலம் அறிகின்றோம். முத்தகுலச் சின்னாருகவுண்டர், குழந்தை கவுண்டர், சின்னப்ப கவுண்டர் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.

முத்தம்மன், முத்துநாச்சி, முத்துச்சாமி என்று முத்தோடு தொடர்புடைய தெய்வங்களைச் சில இடங்களில் முத்தன் குலத்தார் வணங்கிப் பேறுபெற்று வருகின்றனர். அன்னூர், கோபி, பொள்ளாச்சிப் பகுதியில் முத்தன் குலத்தார் சிறப்புடன் வாழ்கின்றனர் கண்ணபுரம், முத்தூர், அன்னூர், இரணபுரம், புதுப்பாளையம், உப்பிலிபாளையம், சோமன்துறை என்பன முத்தன் குலத்தாரின் காணியூர்களில் சிலவாகும்.

கண்ணபுரம் கரியகாளியம்மன் கோயிலுக்கு உரியவர்கள் என்று காணிப்பாடல் கூறுகிறது முத்தன் குலத்தார் பழம்பெருமையுடையவர்கள். முத்தூர்ப் பட்டயத்தின் மூலம் முத்தூருக்காக முத்தகுல சின்னாக்கவுண்டர் மகன் பொன்னாண்டான் 12 வருட காலம சிவன் சமுத்திரத்தில் சிறையிருந்ததையும். தென்னிலைப் போரில் பழையகோட்டைப் பட்டக்காரருக்காகப் போரிட்டு முத்தகுலச் சோழியப்ப கவுண்டர் மகன் பாண்டியபபன் வீர மரணம் அடைந்ததையும் அறிகின்றோம் முதல் காணியாளரான முத்தன் குலத்தார் தம் மாப்பிள்ளைமார்களான மோகனூர் மணியன் குலத்தாருக்கு முத்தூரில முதல் உரிமைகளை விட்டுக் கொடுத்துள்ளனர்

**மணியகுலம்**

'மணி என்பது தானிய மணிகளைக் குறிக்கும். தானிய மணியின் வழியாக மணியன்குலப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்' என்று அறிஞர் டி எம். காளியப்பா அவர்கள் எழுதியுள்ளார்கள்

மணியம என்பது நாடாளும் கலையைக் குறிக்கும். மணியம் – மணியகாரர் என்பது கிராம நிர்வாகியின் பழம் பெயர் மணியம் செய்தவர் மணியன் ஆகியிருக்கலாம் என்பர் இதனையும் டி எம் காளியப்பா அவர்கள் ஏற்றுக் கொள்கிறார் கு. சேதுராமன் அவர்களும் மணியம் என்ற அதிகாரப் பெயரால் இக்குலப்பெயர் வந்திருக்கலாம் என்பர் நெல்-முதலிய தானியங்களைத் தானிய மணிகள் என்பர்; உழவுத் தொழில்கள் செய்து தானிய மணிகளை உற்பத்தி செய்ததால் அதன் பெயரால் மணியன் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று நல். நடராசன் கருதுகிறார். பச்சை மணிகளை அணிந்ததால் இவர்களுக்கு மணியன் எனற பெயர் வந்திருக்கலாம் என க பழனிசாமிப் புலவர் கூறுகிறார்

தொல்காப்பிய எழுத்ததிகார உரையிலேயே 'மணியகாரன்' என்ற பெயர் காணப்படுகிறது தமிழ்ப் பேரகராதி மணியம் என்பதற்கு 'கிராமம்', கோயில், மடம் முதலியவற்றை மேற்பார்க்கும் வேலை' என்று பொருள் கூறுகிறது.

ஏறக்குறைய 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தொன்மையான அறச்சலூர் இசைக் கல்வெட்டில் 'மணிய வண்ணக்கன் தேவன் சாத்தன்' என்ற பெயர் காணப்படுகிறது சங்க காலத்தில் வடமன் + வண்ணக்கன் வடம வண்ணக்கன் என மாறியது போல மணியன் + வண்ணக்கன் – 'மணிய வண்ணக்கன்' என்ற பெயர் ஏற்பட்டது. இக்கல்வெட்டு 'மணியன்' என்ற பெயரின் தொன்மையைக் காட்டுகிறது

செங்கம் பகுதி நடுகற்களில் கி.பி. 10ஆம் நூற்றாண்டுத் தொடக்க காலக் கல்வெட்டொன்றில் (கி.பி. 925) 'மணியன்' என்ற பெயர் வருகிறது. அவர் காமிண்டர் என்று பட்டம் பெற்றுள்ளமை மிகவும் சிறப்புக்குரியதாகும்

*'ஸ்ரீசகரையாண்டு எண்ணூற்று நாற்பத்தேழாவது*
*அண்ணையன் வீரநுளம்பனுக்கு ஆண்டு இரண்டாவது*
*வல்லவரையர்நாட்டில் தொறுக்கொள்ள*
*பவான்னையூர் காமிண்டன் மணியன் மணியனார்*
*தொறு மீட்டுப் பட்டார்'*

என்பது அக்கல்வெட்டாகும். கொங்கு நாட்டில் மணியன்பாளையம், சின்னமணியன்பாளையம், பெரிமணியன்பாளையம் என்ற ஊர்கள் உள்ளன. கண்ணகுலத்தார் காணிப்பாடலில் மணியனூர் என்ற ஊர் கூறப்படுகிறது. இவையெல்லாம் மணியன் என்ற பெயரின் தொன்மையையும் சிறப்பையும் பெருமையையும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

இலட்சுமண பாரதி (1767–1857) பாடிய சிவன்மலைக் குறவஞ்சியில் மணிய குல இராமசாமிக் கவுண்டருக்கு முத்தூர்க் குளத்தருகே நிலம் இருந்த விபரம் கூறப்படுகிறது. 'முதன்மை மணிய குலம்' என்று கூறப்படுகிறது.

கொங்கு காணியான பட்டயத்தில் 'மணியகுலம் ராமகவுண்டர், முத்துக்கவுண்டர், என்றும், திருமுருகன்பூண்டிக் கிரைய சாசனத்தில் 'முத்தூரு மணிய குலத்தில் பொன்மேழிக் தலைவனாகிய பெரிய செல்லியன கவுண்டர்' 'முத்தூரு மணிய கோத்திரத்திலுள்ள கவுண்டர்களும்' என்றும் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணுகிறோம். முத்தூர் மணியகுலத்தார் 'பொன்மேழித்தலைவர்' என அழைக்கப்பட்டுள்ளது அவர்கள் முதன்மை, தலைமை ஆகியவற்றைக் குறிக்கிறது

முத்தூருக்கான போராட்டத்தில் சிவன்சமுத்திரம் சிறையில் பன்னிரு ஆண்டுகள் மணியகுலப் பெரியநயினாக்கவுண்டர் மகன் குமரியப்பன் சிறையிலிருந்தார் தென்னிலைப் போரில் மணியகுலப் பெரியநயினாக் கவுண்டர் மகன் சிலச்செல்லப்பன் வீரமரணம் அடைந்தார். தென்னிலைப் போருக்கு முன் கொங்கராயனைப் பின் தொடர்ந்து சென்ற நிகழ்ச்சியில் காரையூர் மணியகுல ராவுத்த கவுண்டர் மகன் வாரணவாசி வீர மரணம் அடைந்தார். இதனை முத்தூர்ப் பட்டயமும், காரையூர்ச் செப்பேடும் கூறுகிறது.

நத்தக்காடையூர் என இன்று வழங்கப் பெறும் காரையூரில் பயிர குலத்திற்கு முற்பட்ட காணியுரிமையுடையவர்கள் மணிய குலத்தினர்

*'அரசர்புகழ் தென்காரையூர்*
*அதனில்வரு மணியனை*
*கியாதியுள்ள பயிரனை'*

என்பது காங்கயநாட்டுக் காணிப்பாடல் பகுதியாகும் தென்னிலைப் போரில் பழையகோட்டைப் பட்டக்காரர் பெற்ற வெற்றியால் காரையூரில் மணியகுல முதன்மை பயிரகுலத்தாருக்கு அளிக்கப்பட்டதாகக் காரையூராச் செப்பேடு கூறுகிறது காரையூர் மணியர் ராவுத்தணகவுண்டர் மகன் வாரணவாசி என்ற பெயரைப் பட்டாலிப் பட்டயம் கூறுகிறது.

மோகனூர் மணியகுலத்தார் வீட்டில் தேனாயி என்னும் குமரிப்பெண் இருந்தாள் வேற்றூர் சென்று தயிர் விற்று வரும்போது ஒரு வில்வக்காட்டருகே 'விளக்குவை' என்ற ஒலியைத் தேனாயி கேட்டாள் குரல் வந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டு நாள்தோறும் ஒரு விளக்கு வைத்தாள் பிறரால் அந்நிகழ்ச்சி அறியப்பட்டு அந்தச் சிவலிங்கத்திற்குக் குமரி வழிபட்டதன் காரணமாகக் 'குமரீசர்' என்று பெயர் ஏற்பட்டது அம்மன் பெயர் தேனாயி, குமரியம்மன் என்றே வழங்கப்பட்டது. அங்குள்ள காவிரித் துறைக்குக் குமரித்துறை என்று பெயர்

திருநாவுக்கரசர் க்ஷேத்திரக் கோவையில் 'குமரித்துறை' என்றும், திருக்குறுந்தொகையில் 'கொங்குதென் குமரித்துறை' என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளார்

*'நந்தூரர் நெடுவயல் சூழ முகவை நகர்தனிலே*
*இந்தூரர் சடையான் நசையால் விளக்கொன்று ஏற்றுதற்கு*
*சந்தோச மாயொரு பாவனை கொண்டு தயிருவிற்க*
*வந்தோர் குமரி அருச்சித்த தும்கொங்கு மண்டலமே'*

என்று வாலசுந்தரக் கவிராயர் தம் கொங்குமண்டல சதகத்தில் இந்நிகழ்ச்சியைக் குறித்துப் பாடியுள்ளார் மணியகுலத்தாரின் சமயப் பெருமை இதன்மூலம் தெரிகிறது 1633 ஆம் ஆண்டு பவ வருடம் ஆவணி 11ஆம் தேதி வெள்ளாளன் மணியரில் கருப்பகவுண்டன் மனைவி மோகனூர் குமரீசுவரமுடைய தம்பிரானார்க்கு மார்கழி நீராடக் கொடை அளித்துள்ளார் (ARE 295/1966)

முகவை என்பது மோகனூர்; மணிய குலத்தாரின் காணிப் பாடலின் அவர்கட்கு உரிமையுடைய ஊராக 'செந்நெல் செறி முகவனூர்' என்று கூறப்படுகிறது மோகனூர் மணியகுலத்தாரே முத்தூருக்குக் காணியாளர்களாக வந்தனர் முத்தூர் மணியகுலத்தார் ஒருவருக்குக் 'குமரியப்பன்' என்ற பெயர் காணப்படுவதால் இச்செய்தி உறுதிப்படுகிறது இது குமரீசர் வரலாற்றோடு தொடர்புடையது.

கரூர் மணியர், கோடந்துறை மணியர், மோகனூர் மணியர், துக்காச்சி மணியர், முத்தூர் மணியர், இடையாற்று மணியர் எனப் பல ஊர்களில் வாழும் மணிய குலத்தார் அந்தந்த ஊர்ப்பெயரால் அழைக்கப்படலாயினர் எல்லோரும் ஒரு குலத்தினரே. இந்த ஊர்களை முதன்மையாகக் கொண்டு பற்பல ஊர்களில் குடியேறி மணியன் குலத்தார் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

## சேரன்குலம்

முத்தூர்க் காணிப்பாடலில் சேரன்குலம் மூன்றாவதாக இருந்தாலும் 'முதற்சேரன்' என்று அடையுடன் கூறப்படுகிறது சேரன்குலத்தினர் சேர மன்னர்களோடு தொடர்புடையவர்கள் என்றும், சேரமன்னர்களிடம் படைத்தலைவர்களாகவும், அதிகாரிகளாகவும் விளங்கியவர்கள் என்றும், அதனால் இப்பெயர் பெற்றதாகவும் வி இராமமூர்த்தி எழுதியுள்ளார். டி.எம். காளியப்பா அவர்களும் நீண்ட நெடுங்காலமாகச் சேரர்கட்கு உற்ற துணைவர்களாகப் புகழேந்தியதால் இக்குலத்தாரின் சொந்தப் பெயர் மறைந்து சேரன் குலத்தார் என்று வழங்கியிருக்கலாம் என்று கூறியுள்ளார் சேர மன்னர்களை நெருங்கி இருந்த காரணத்தால் சே–சேர்–சேரன்–சேர்ந்தவன் என்னும் பொருளில் சேரன் குலத்தின் பெயர்க் காரணமும் கூறுகிறார் டி.எம். காளியப்பா அவர்கள்.

கு சேதுராமன் சேரன் குலம், சேரலன் குலம் இரண்டையும் ஒன்று என்று கூறி இவர்கள் சேரமரபைச் சேர்ந்த கொங்கு மன்னர்கள் என்று கூறியுள்ளார் (சேரிலான் என்ற குலம் ஒன்று தனியாக உள்ளது). நல் நடராசன் அவர்கள் சேரர்களுக்கும் சேர குலத்தாருக்கும் தொடர்பில்லை, நிலத்தில் விளைந்த நெல்லைத் தானியக் களஞ்சியத்தில் சேர்ப்பவன் சேரன் என்று கூறுகிறார். சேர் என்ற சொல்லுக்கு நெல் களஞ்சியம் என்ற பொருள் இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார் க பழனிசாமிப் புலவர் சேரன் குலத்தார் சேர மன்னன் மாந்தரஞ்சேரன் வழிவந்தவர்கள் என்று கூறியுள்ளார்.

சேரகுலத்தாரேயன்றி வேளாளர் பிரிவில் சேரகுலவேளாளர் என்போர் தனியாக உள்ளனர். அவர்கள் கொங்கு வேளாளர்களிடம் புலவர்களாக விளங்கியுள்ளனர் சேர வேளாளர் – சேர குலத்தாரின் வேறானவர்

கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுச் சித்தளந்தூரில் சேரகுல நல்லய கவுண்டர் மகள் வெள்ளை வேலம்மாளைத் திருமணம் செய்து கொண்டு கன்னிவாடிக் கண்ணகுல •முத்துக்கவுண்டர் மகன் செல்லப்பக்கவுண்டர் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் காணியுரிமை பெற்றார் என்று கண்ணகுலப் பட்டயம் கூறுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க கொடுமணலில் பாண்டியன், பனங்காடை குலத்தாரோடு இணைந்து சேரன் குலத்தார் காணியாளர்களாக உள்ளனர். காடையூர்ப் பட்டயத்தில் 'கொடுமணல் சேரகுல வேலாயுதக் கவுண்டர்' என்ற பெயரையும், பல்லடம் நாரணபுரம் செப்பேட்டில் 'கொடுமணல் சேரகுலம் அவிநாசிக்கவுண்டர்' என்ற பெயரையும் காணுகிறோம். சேர குலத்தாருக்குக் கொடுமணல் ஒரு முக்கியமான காணியூர்.

தென்கரைநாட்டுக் கொற்றனூரில் ஏழுமுதன்மையரில் சேரன் குலத்தார் ஐந்தாவது காணியாளராக உள்ளனர்

*'காவல் குழாயன் கதித்த பெரியகுலன்*
*ஆவல்சேர் ஆந்தை அதிசேரன் – மேவியசீர்*
*செம்பூத்தன் செட்டியொடு தென்கொற்றை மாநகருக்கு*
*இன்புற்ற ஏழ்முதன்மை யே'*

என்பது கொற்றனூர்க் காணிப்பாடல்.

*'சேரகுலதிலக சீமான் குமாரரத்ன*
*மாரன் இளைச்சியன மாபதி'*

என்று கொற்றனூர்ச் சேரகுலத்தலைவரை 'இரத்தினமூர்த்தி விறலிவிடு தூது' என்னும் நூல் புகழுகிறது

அதே தென்கரைநாட்டு நீலம்பூரிலும் சேரன்குலத்தாருக்குக் காணி உரிமை உண்டு.

*'செட்டிமுதல் ஈஞ்சன் சேரன் பரவுதங்கக்*
*கட்டியெனும் நீலம்பூர்க் காளியம்மன் – இட்டமுடன்*
*காமியத்தை யேபரவும் காணிபெற்ற மால்சோழ*
*சாமி மிகுந்த தலம்'*

என்பது நீலம்பூர்க் காணிப்பாடல் ஆகும்.

கொற்றனூரில் சேரகுலத்தார் தீப்பாய்ந்த தங்கள் குலப் பெண்ணை வீரமாத்தி என்ற தெய்வமாக வணங்கி வருகின்றனர். செங்கற்படையாக அங்கு வீரமாத்தித் தெய்வம் உள்ளது.

சேரன் குலத்தார் தமிழ்ச் சங்கப் புலவருக்குக் கொடையளித்ததை வாலசுந்தரக் கவிராயர் கொங்குமண்டல சதகம் (96) புகழுகிறது.

*'அண்ணல்தன் சங்கத் தனந்தனம் ஈந்தான் முகம்மகிழ*
*புண்ணிய பூப திலகன்என் றேஉல கம்புகழ*
*விண்ணிடு திண்பரி சிவிகையும் ஈந்தனன் மீனவன்முன்*
*மண்ணினில் சேரகுல சங்கமன் கொங்கு மண்டலமே'*

என்பது கொங்குமண்டல சதகப் பாடலாகும். இப்பாடலில் சேரன்குலச் சங்கமன் என்பார் புகழப்படுகிறார்

முத்தூர் சேரன்குல செம்பியாக்கவுண்டர் மகன் அர்த்தநாரி சிவன்சமுத்திரத்தில் சிறையிருந்துள்ளார் தென்னிலைப்போரில் முத்தூர் சேரன்குலச் செம்பியாக் கவுண்டரும், நல்லதம்பிக் கவுண்டரும் வீரமரணம் அடைந்துள்ளனர்.

**வெள்ளம்பர்குலம்**

வெள்ளம்பர்குலம் என்பது உழவுத்தொழிலால் ஏற்பட்ட பெயராகும். வெள்ளத்தை தேக்கிப் பயிர் செய்வோர் வெள்ளாளர் எனப் பெயர் பெற்றதைப் போலவே வெள்ளம்பர் என்ற பெயர் ஏற்பட்டது என்று நல். நடராசன் எழுதியுள்ளார்.

அம்பரம் என்ற சொல் ஆடையைக் குறிக்கும். வெள் என்பது வெண்மை, வெள்ளை நிறமான ஆடையின் பெயரால் வெள்ளம்பர் குலப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று டி.எம். காளியப்பா கூறியுள்ளார் பருத்திச் சாகுபடியைப் பரம்பரை மகசூலாகச் செய்துவரும் வெள்ளம்பர்கள் தூய வெண்மையும் நீண்ட துகும்புகளையும் உடைய பருத்தி ரகத்தைப் பெருக்கியவர்கள் என்று கூறுகிறார் கு. சேதுராமன்

முத்தூரிலே வெள்ளம்பர் குலம் நான்காவது குலம் ஆகும் வெள்ளம்பர் குலத்தை 'வெள்ளைக்குலம்' என்றும் கூறுகிறார்கள் முத்தூருடன், பொள்ளாச்சிப் பகுதி, பல்லாங்கோயில், கீரனூர், பொங்கலூர், கத்தாங்கண்ணி, பெற்றாம் பள்ளி போன்ற பல ஊர்கள் வெள்ளம்பர்குலக் காணியூர்கள் என்பர்.

ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சியில் வெள்ளம்பர்குலம் பொங்கலூர் நாட்டில் சிறப்புடன் வாழ்வதாகவும், அவர்கள் பலருக்குக்

கொடையளித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது குறிசொல்லிய குறத்திக்கு இவர்கள் மோகனமாலை அளித்தனர் என்று புலவர் பாடுகிறார் க பழனிசாமிப் புலவர் இப்போது வெள்ளம்பர்கள் முத்தூரில் இலலை என்று எழுதியுள்ளார். வெள்ளம்பர் குலத்தினரால் கட்டப்பட்ட வெள்ளை விநாயகர் கோயில் முத்தூர்ச் சோழீசுவரர் கோயிலினுள் உள்ளது

முத்தூர் வெள்ளம்பரில் அவிநாசிக்கவுண்டர் மகன் திருவம்பலத்தான் சிவன் சமுத்திரச் சிறையில் இருந்துள்ளார்.

## பொருளந்தைகுலம்

கொங்குமண்டல சதகத்தில் ஆறு பாடல்களைப் பெற்ற வரலாறு இலக்கியச் சிறப்புப் பெற்ற குலம் பொருளந்தை குலம் பொருளன் என்பாரைக் குல முதல்வராகக் கொண்ட குலம் பொருளந்தை குலமாகும்

க பழனிசாமிப்புலவர் 'பொருளந்தைகுல வேளிர்களில் முன்னோன் சேரர் பிரதிநிதியாய் மையூரில் குறுநில மன்னனாக இருந்தான் மிகுந்த பொருளாளனாக இருந்தமையால் இவனைப் 'பொருளன்' என்று அக்கால மக்கள் அழைத்தனர். மாந்தரஞ்சேரல் காலத்துக் கொங்குப் பகுதியில் அம்மன்னனுக்குத் துணையாக வந்து தங்கியவர் இப்பொருளனைச் சார்ந்த சந்ததியார்.பொருளனைத் தந்தையாக உடையவர் ஆதலின் இவர்களது பின்னவர் பொருளந்தையர் என்று அழைக்கப் பெற்றனர்' என்று க பழனிசாமிப் புலவர் எழுதியுள்ளார்.

சாத்தந்தை, கண்ணந்தை, பூச்சந்தை என்பனபோல பொருளன் + தந்தை பொருளந்தை என்ற குலப்பெயர் தோன்றியது என்பார் டி எம். காளியப்பா அவர்கள் தொல்காப்பியவிதி இதற்கு இடம் தருகிறது.

குழந்தை, மடந்தை என்பது போலத் 'தை' விகுதி பெற்ற இலக்கண மரபுப்படி பொருளந்தை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று புலவர் அ.மு குழந்தை அவர்கள் எழுதியுள்ளார். அவர் கருத்துப்படி இது தொடர் மொழி அல்ல' ஒரே சொல்லாகும்

இக்குலம் பொருளந்தைகுலம், புரளந்தைகுலம், பெரளந்தைகுலம், பிரளந்தைகுலம், புரளந்தகுலம், பெரளந்தகுலம், பேரிழந்தான் குலம் என்று பலவாறு மக்களால் அழைக்கப்பெறும் டி.எம் காளியப்பா அவர்கள் பொருளந்தை, பிறழந்தை, பேரிழந்தான், முழுக்காதுகுலம் போன்றவற்றை வெவ்வேறாகக் கொள்கிறார்.

நல் நடராசன் அவர்கள் 'ஆந்தை குலத்திலிருந்து பிறழ்ந்து வந்த அதாவது பிரிந்துவந்த குலம் பிறழாந்தை எனப்பட்டது பின்னர் இச்சொல்

பிரளந்தை, புரளந்தை, பொருளந்தை என்பதாகத் திரிந்து விட்டது பொருளந்தை குலத்தாரின 'பெயர்க் காரணத்தை அறிய ஆந்தை குலத்தாரின் ஆதிநாள் வரலாற்றைச் சிறிது அறியவேண்டும்' என்று கூறுகிறார்

இது சரியான கருத்தாகத்தோன்றவில்லை.

பொருளந்தைகுலம் இலக்கியச் சிறப்புமிக்கது.

*'மேவு பொருளந்தைகுலம்'*
*'பெருமைபெறு பொருளந்தைகுலம்'*

*'கனத்த பொருளந்தைகுலம்'*
*'அன்னதான பொருளந்தை குலம்'*

*'அதிக சௌக்கிய பொருளந்தை குலம்'*

*என்பன அற்றுட் சில*

பொருளந்தை குலத்தாருக்கு ஆதிக்காணி கீழ்க்கரைப் பூந்துறைநாட்டுக் 'கருமாபுரம்' ஆகும் அங்கிருந்து கால்நடைகளுடன் காங்கய நாட்டுக் காடையூர் வந்த காங்கேயன் மரபினர்தான் காடையூர் சேட குலத்தார் மகளை மணந்து 'முழுக்காது குலம்' என்று பெயர் பெற்றுக் காடையூரில் வாழ்ந்து வருகின்றனர். காடையூர் பட்டக்காரர் காங்கேய மன்றாடியார் அவர்கள் தலைவர் ஆவார் உரிச்சொல் நிகண்டு இவர்கள் செய்தது என்பர்.

விசயமங்கலத்தில் பொருளந்தை குலத்து வாரணவாசி மன்றாடியார் யானைப்படையுடையவர். புலவர்களை ஆதரித்தவர், காங்கய நாட்டில் ஆறுதொழு, ஆலாம்பாடி ஆகிய ஊர்களைப் புதியதாக ஏற்படுத்தியவர்கள் பொருளந்தை குலத்தினரே, பொருளந்தை குலத்தாரின் இரண்டு காணிப்பாடல்களிலும் முத்தூர் சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது. ஏழூர்ப் பொருளந்தை குலத்துக் கட்டிக்கவுண்டர் 'பள்ளு' இலக்கியம் பெற்றுள்ளார். பல பட்டயங்களில் பொருளந்தை குலத்தார் மிகச் சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளனர்

இவர்கள் பெயரைப் 'பொருள் தந்த குலம்' என்று இன்று சிலர் அழைக்கின்றனர் முத்தூர்க் காணிப்பாடலில் 'மெத்து பொருளந்தை' என் அடைமொழியுடன் பொருளந்தை குலத்தார் அழைக்கப்பட்டுள்ளனர். முத்தூருக்காக சிவன் சமுத்திரத்தில் சிறையிருந்தவர்களில் பொருளந்தை குலத்து தேவணகவுண்டர் மகன் நல்லதம்பியும் ஒருவர், காங்கயநாட்டு

ஆலாம்பாடியும் பூந்துறைநாட்டுப் பிடாரியூரும் பொருளந்தை குலத்தாருக்கு முக்கியமான காணியூர்கள் ஆகும்

**வேட்டுவகுலத்தார்**

வேட்டுவகுலத்தில் ஐந்து பெரும் பிரிவுகள் உள்ளன அவர்கள் காவலியர், பூவலியர், மாவலியர், வேடர், வேட்டுவர் எனப்படுவர் இராமபத்திரன் படடயத்தில் இதே வரிசையில் குறிக்கப்பட்டுள்ளனர் அல்லாள இளையான் பட்டயத்திலும் பேரூர்ச் செப்பேட்டிலும் இவர்கள் குறிககப்பட்டுள்ளனர்

முத்தூருக்குக் காவலியர், பூவலியா ஆகிய காணியாளருடன் மணிய வேட்டுவர், வெங்காஞ்சிவேட்டுவர் ஆகியோரும் காணியாளர்களாக உள்ளனர் வெங்காஞ்சி வேட்டுவரை முத்தூர்ப் பட்டயம் 'வெங்கச்சி வேட்டுவர்' என்று குறிக்கிறது வெஙகச்சி வேட்டுவரில் கணடியதேவன் மகன் பெரியசோழியப்பனும், காவலியரில் கருமத சரவணகவுண்டா மகன் சோழியப்பனும் முத்தூரின் பொருட்டு மற்ற வேளாளர் உள்ளிட்ட காணியாளருடன் சிவன் சமுத்திரத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் சிறையிருந்துளளனா

தென்னிலைப்போர் அக்காலச் சூழ்நிலையில் வேட்டுவகுலப் பெருமக்களுக்கும் வேளாளர்குலப் பெருமக்களுக்கும் நடைபெற்ற போர் அப்போரில் வேட்டுவகுலத் தலைவரை எதிர்த்துக் காங்கய நாட்டார் பன்னிரண்டு ஊர்க்காரர்கள் பழையகோட்டைப் பட்டக்காரருக்காகப் போரிட்டனர் அப்போரில் முத்தூா வேட்டுவர்களாகிய காவலியரும், மாவலியரும் கொங்கு வேளாளரோடு சேர்ந்து வேட்டுவர் தலைவன் கொங்குராயனை எதிர்த்துப் போரிட்டுள்ளனர் அவர்களில் காவிலியரில் கருமருத சரவணக் கவுண்டர் மகன் சோழியப்பனும், மாவலியரில் பருதலையர் மகன் செம்மனும், வீரமரணம் எய்தியுள்ளனர் என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கதோர் நிகழ்சசியாகும்

பட்டாலி வேட்டுவரில் காவலுவரில் அனுமந்தராயக் கவுண்டர் சிவன்மலைச் சார்பிலும் அதன் வடக்கிலும் இருந்த தன் பரந்த அடர்ந்த காட்டுப் பகுதியைத் தீரன் சின்னமலையின் போர்ப் பயிற்சிக்காகவும், ஆயுதங்கள் தயாரிக்கவும், 18 4 1792 அன்று (தீர்த்தகிரிச் சர்க்கரைக் கவுண்டருக்கு) அளித்துள்ளார். தீர்த்தகிரிச் சர்க்கரைக் கவுண்டர் என்பது சின்னமலையின் இயற்பெயர். தென்கரை நாட்டுப் பட்டயத்தில் படைவீரர்களில் மூலகுலத்தார், சேரிலான், குழாயன், கம்பழத்தாரோடு

காவிலுவரும் இருந்துள்ள விபரம் கூறப்படுகிறது மொடவாண்டி பட்டயத்தில் முடவர் காப்பு நிலையத்திற்குக் காவலியர் கொடை தந்த விபரம் கூறப்படுகிறது

புரவிபாளையம் ஜமீன்தார் சந்திரகோப்பண மன்றாடியார் வேட்டுவரில் பூவிலுவர் மரபைச் சேர்ந்தவர் இவர்கள் மரபும் மேற்கண்ட பட்டயங்களில் குறிக்கப்பட்டுள்ளது

முத்தூர் மணியவேட்டுவரும் வெங்கச்சி வேட்டுவரும் தென்னிலைப் பட்டக்காரர் செப்பேட்டில் பல இடங்களில குறிக்கப்பட்டுள்ளனர் அரசியல், சமூக, சமய வாழ்வில் கொங்கு வேளாளர்களும், வேட்டுவர்களும் இணைந்து பணிகள் செய்ததைக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், வரலாற்று ஆவணங்களும் உணர்த்துகின்றன கொங்கு வேளாளர் சமூக ஒப்பந்தங்களில் வேட்டுவர்கள் பலர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்

அப்பிச்சிமார்மடம் வேட்டுவர் கோநகர் அப்பிச்சிமார் காவியம், குருகுல காவியம் என்பன வேட்டுவர் இலக்கியங்கள் கொங்கு நாட்டில் பல கல்வெட்டுக்கள் வேட்டுவர் சமூகம் பற்றிக் கூறுகின்றன.

முத்தூர்க் காணிப்பாடல் மூலம் முதலில் காவலியர் மட்டுமே காணியாளர்களாக இருந்தனர் என்றும், பின்னர் பூவலியர், மணியவேட்டுவர், வெங்கச்சி வேட்டுவர் காணியாளர்களாக அமைந்தனர் எனவும் அறிகிறோம்

**கொங்குச் செட்டியார்**

கொங்கு நாட்டு ஆவணங்களில் எட்டுவகைப்பலர், கவறைச்செட்டி, கன்னடச் செட்டி, கோமுட்டி, கொங்கச்செட்டி, சாலியசெட்டி, செட்டிக்காரர், சேடசெட்டி, தெலுங்கசெட்டி, தேவாங்கசெட்டி, நகரத்தார், நான்குதிசை ஐம்பத்தாறு தேசத்துப் பலர், பட்டுநூல்செட்டி, பன்னிரண்டாம் செட்டி, மூத்தாருசெட்டி, வெள்ளாஞ்செட்டி ஆகிய பல வணிகர்கள் குறிக்கப்பட்டாலும் கொங்குக் காணியுரிமை கொண்ட வணிகர்கள் கொங்கச் செட்டிகளேயாவர்

கொங்குச் செட்டிகள், பல ஊர்களில் காணியுரிமை கொண்டு ஊர் நிர்வாகமும் செய்துள்ளனர். பல ஊர் உரிமைகள் கொங்கச் செட்டியார்களிடமிருந்து கொங்கு வேளாண் பெருமக்களுக்கு மாறியுள்ளன

இராமபத்திரன் பட்டயத்தில் கொங்கு நாட்டுக்குக் காணியுரிமையுடைய மக்களில் கொங்குச் செட்டியார்களும் கூறப்படுகின்றனர். முகுந்த நல்லூர்ப் பட்டயம் தென்குறுப்பை வீரசோழபுர நாட்டுக்குக் காணியாளராகக் கொங்கச் செட்டிகளில் திருமிய கோத்திரத்தைச் சேர்ந்த அவநாசிசெட்டியார் மகன் காசிலிங்கம் செட்டியாரைக் குறிப்பிடுகிறது அவரிடமிருந்தே எழுமாத்தூர்ப் பனங்காடைகுலத்துச் சோழியாண்டாக்கவுண்டர் பெரியபாளையம், நல்லூர், திருப்பூர், ஊத்துக்குழி, மண்ணறை ஆகிய ஐந்து ஊர்களின் உரிமையை விலைக்கு வாங்கியுள்ளார்

காலிங்கராயனுக்குக் கால்வாய் வெட்டும் முயற்சிக்குத் தலைக்கு ஒரு பணம் கொடுத்த செட்டியார்கள் பலரில் கொங்குச் செட்டியாரும் ஒருவராகக் கூறப்பட்டுள்ளனர் பூந்துறைநாட்டுப் பிடாரியூர் உரிமையை ஈஞ்சகுலத்தாரும், திருவாச்சி உரிமையைப் பரஞ்சேர்வழி ஓதாளரும், வெள்ளகோயில் ஆந்தை குலத்தாரும் பெற்றது கொங்குச் செட்டியார்களிடமிருந்தே என்று கொங்கு ஆவணங்கள் கூறுகின்றன

கொங்கு செட்டியார்கள் கொங்கு வேளாளர்களோடு கொண்ட தொடர்பு காரணமாகக் 'கவுண்டர்' பட்டம் பெற்றுள்ளனர். பவளத்தாக்கவுண்டர், இராமஞ்செட்டிக் கவுண்டர் ஆகிய செட்டியார்களை ஆவணங்களில் காணுகிறோம்.

முத்தூர்க் கல்வெட்டுக்களில் 'காங்கயத்தில் வியாபாரி மோடன் செட்டியான ஈசானதேவன்' 'வியாபாரி சடையன் செட்டியான மாணிக்கவாசகன்' 'முததூர் நகரத்தார்' ஆகிய வணிகர்கள் சோழீசுவரர் கோயிலுக்குக் கொடை கொடுத்தவர்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர்.

முத்தூர்ச் சிவன்கோயிலில் செட்டியார்கள் சுந்தரர் திருவிழாவை நடத்துகின்றனர் விழாவில் சிவபெருமான் தூது நிகழ்ச்சி இடம் பெறுகிறது.

முத்தூர்ப் பட்டயத்தில் முத்தூருக்காகச் சிவன்சமுத்திரத்தில் சிறையிருந்த 15 பேரில் செட்டி மொட்டரில் அர்த்தநாரி செட்டி மகன் வேலப்பன், கொல்லுக்கட்டி செட்டியாரில் தெய்வசுவாமி மகன் பெருங்கருணை, அவிநாசியுடையார் செட்டியாரில் சரவணச் செட்டி மகன் செம்மாண்டன் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.

**செங்குந்தர்**

முத்தூரின் முதன்மைக் காணியாளர்களில் ஒருவராக 'நன்முதலிக்காமர்' என்று குறிக்கப்டுவது செங்குந்தர்களையேயாகும்.

இராமபத்திரன் பட்டயம் கொங்குநாட்டின காணியுரிமையுடைய குடிமக்களில் செங்குந்தரையும் ஒருவராகக் குறிக்கிறது காமர் என்பது விரும்பத்தக்கவர் என்ற பொருளைக் குறிக்கும் ஒரு அடைசொழியாகும்.

கொங்குநாட்டில் இடங்கைப் பிரிவினருக்குச் செங்குந்தர்கள் தலைமை தாங்கினர் படையாச்சிகள், பஞ்சகம்மாளராகிய ஆசாரிகளில் ஐந்து பிரிவினர். நகரத்தார், தேவந்திரப்பள்ளர், மாதாரிகள் ஆகியோர் செங்குந்தரின் இடங்கை அணியில் இருந்தனர்

கொங்குநாட்டுச் செங்குந்தர்கள் தங்கள் சமயநிகழ்ச்சிகளுக்காகச் 'செங்குந்தகுல 'மாணிக்கி' என்ற பெண்ணைப் பணியில் அமர்த்தியிருந்தனர் அப்பெண்ணுக்கு மக்கத்தின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், திருமணத்தின் போதும் சிறப்பாகக் கொடை பல கொடுத்தனர்.

செங்குந்தர்கள் திருச்செங்கோட்டில் பெரியநாடு கூடிச் சமூக நியாயங்கள் பேசுவர். அது தீராவிடில் காஞ்சிபுரம் சென்று கம்பளி நியாயம் பேசுவர். காலிங்கராயன் அணைகட்டும்போது 'செங்குந்த கோத்திரத்துக் கைக்கோளனார்' ஆண்டுக்கு ஒரு பணம் கொடுத்தனர் என்று காலிங்கராயன் அணை கட்டின பட்டயம் கூறுகிறது.

செங்குந்தர்கள் கொங்கு நாடெங்கும் காணியுரிமையுடைய புலவர்களாகச் சிறப்புடன் விளங்கியுள்ளனர் அவர்களில் போக்கங்கூட்டம், ராசிகூட்டம், செஞ்சிக்கூட்டம், பூந்துறையான் கூட்டம், சூரியகூட்டம், ஆறாங்கூட்டம் ஆகிய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பலர் காணிப்புலவராக இருந்துள்ளனர். சேதிராயப்புலவர், நஞ்சராயப்புலவர், திருக்கைவேல் புலவர், திருவாவிநன்குடிப் புலவர், மங்கலநாதப் புலவர் என்போர் சிலர் சிலர் 'பட்டன்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் புகழ்ந்து பாடும் புலவர் மரபினர் ஆவர்.

இவர்கள் கொங்கு வேளாளர்களின் ஆதரவு பெற்ற காணிப்புலவர் ஆவர். கொங்குக் கைக்கோளர், முதலியார் என்று சிறப்புப் பெற்ற செங்குந்தர்கள் கொங்கு வேளாளரின் பல திருமணச் சடங்குகளைச் செய்யும் உரிமைபெற்றிருந்தனர் நாட்டுக்கல் சீர், குப்பாரி கொட்டும் சீர், பெண்ணெடுக்கும் சீர், வாழிச்சீர், மங்கல வாழ்த்து இவைகளைச் செங்குந்தர் மேற்கொண்டனர் என்று பட்டயம் கூறுகிறது. இவைகளைச் செங்குந்தர்கட்குச் செய்து கொள்ள உரிமை அளித்தவர் கொங்கு வேளாளர்களில் உலகபுரம் சாத்தந்தை குலத்து உலகில் மன்றாடியார் என்று ஒரு பழம்பாடல் கூறுகிறது

'ஆதிகுலம் செங்குந்தர் அதனில்வரு கொங்கனுக்கு
சாதிகுலம் கல்யாணம் தனதுமுறைப் படியாக
நீதியுடன் எந்நாளும் நிலைத்திருக்க வேண்டும்என
ஓதிவைத்தான் பூந்துறைநாட்டு உலகுடைய உத்தமனே'

என்பது அப்பாட்டு இப்பாடல் செங்குந்தருக்குக் 'கொங்கன்' என அடைமொழி கொடுக்கிறது.

தொண்டை நாட்டிலிருந்தும் செங்குந்தர் பலர் கொங்கு நாட்டில் குடியேறியுள்ளனர் கொங்கு வேளாளரோடு இணைந்து சமய, சமூக நிகழ்ச்சிகளில் செங்குந்தர்கள் பங்கு கொண்டுள்ளனர். மோரூர்க் கண்ணகுலக் காங்கேயர் 60 காங்கேயர் எனப்படுவர் ஒரு காங்கேயருக்குப் பிள்ளை இல்லாத காரணத்தால் நல்லய்யன் என்னும் செங்குந்தர்குல இளைஞன் தன்னைப் பலியிட்டுக் கொண்டார். அவருக்கு மோரூர்க் கண்ணகுலத்தார் குலதெய்வக் கோயிலான நல்லபுள்ளியம்மன் கோயிலில் தனிக்கோயில் உள்ளது. முத்துக்குமாரசுவாமி என்று செங்குந்தர்கள் வழிபடுகிறார்கள். அவரை அறுபத்தொன்றாவது காங்கேயர் எனக் காங்கேயர் அழைத்தனர்

## கொங்கு நாடார்

ஆதிசேடன் நஞ்சில் உதித்த ஏழு கன்னியருக்குச் சிவபெருமான் அருளால் பிறந்த ஏழுபேர் நாடார்களின் முன்னோர் என்று கூறப்படுகிறது. நாடாதி நாடார், நாட்டுவர், மதுரையார், போர்முடையார், கோனாடர், சங்கனி, கொங்கன் என அவர்கள் அழைக்கப்படுவர். 'கொங்கன்' என்ற பெயர் இருந்தமை சிறப்புக்குரியது.

கொங்குநாட்டில் திருமுருகன்பூண்டி, கருமாபுரம், பூந்துறை ஆகிய இடங்களில் நாடார்களுக்கு உரிய மடம் உண்டு பல சமுதாயத்திற்குக் கொங்கு என்ற அடைமொழியுள்ளது நாடார்களுக்கும் கொங்குநாடார் என்ற பெயரைக் கொங்குநாட்டு ஆவணங்கள் தருகின்றன. மேற்கண்ட மூன்று மடங்களில் நாடார்கள் தொடர்பான செப்பேடுகள் உள்ளன.

கொங்குமூப்பன் என்ற பெயரைத் திருமுருகன் பூண்டிச் செப்பேட்டிலும், கொங்குச் சாணார் என்ற பெயரை மொடவாண்டி பட்டயத்திலும் காணுகிறோம்.

'முகப்பன்' என்ற சொல்லே 'மூப்பன்' என்று மருவியது சான்றோர் – சான்றார் என்ற சொல்லே காணார் என்றாயிற்று. கொங்கு நாட்டில் நாடார்கள் வலங்கைப் பிரிவில் இருந்துள்ளனர். நாடாளுவார் –

நாடாழ்வார் என்ற சொல்லே நாடார் ஆயிற்று என்பர் இவை பல ஆவணங்கள் மூலம் அறியப்படுவனவாகும்.

கொங்குவேளாளர்கள் ஏருக்குக் கணக்கிட்டு வரி, மகமை முதலியன கொடுப்பதுபோல நாடார்கள் 'பொட்டிக்கு'க் கணக்கிட்டு வரி கொடுத்துள்ளனர். பொட்டி என்பது அவர்கள் தொழில் கருவிகள் வைக்கும் பெட்டியாகும். காலிங்கராயர் கட்டிய அணை, வாய்க்கால் திருப்பணிக்குக் கொங்கு நாட்டு நாடார்கள் பொட்டிக்கு ஒரு பணம் தந்துள்ளனர்.

பனைமரத்தைக் கற்பக விருட்சம் என்றும், நாடார்களை ஏறி இறங்கும் திருமேனி என்றும், கத்தியை மந்திரவாள், சந்திரன் என்றும் நாடார் சமூக ஆவணங்கள் கூறுகின்றன.

பூந்துறைக் காடைகுல வாரணவாசிக் கவுண்டர் ஏற்படுத்திய முடவர் காப்பு நிலையத்திற்குக் கொங்குநாட்டுச் சமூகத்தினர் பலர் கொடையளித்துள்ளனர். 'கொங்கச் சாணார் வர்த்தனை ஒரு வீட்டுக்கு அரைதுலாம் கருப்பட்டி' கொடுத்ததாக 'மொடவாண்டி பட்டயம்' கூறுகிறது.

பல ஊர்களில் பல கோயில்கட்குக் கொங்கு வேளாளரோடு கொங்கு நாடார்களும் காணியாளர்களாக உள்ளனர். விழாக்களிலும், திருக்கோயில் நடைமுறைகளிலும் பல உரிமைகளைப் பெற்று அவற்றை இன்றும் நிறைவேற்றி வருகின்றனர். பல கோயில்களில் நாடார்குல வீரர்களின் புலிக்குத்தி நடுகற்கள் உள்ளன புலியைக் கொன்று மக்களைக் காப்பாற்றியதற்காக சின்னமூப்பன் மகன் சடையமூப்பனுக்குக் செம்பகுலத்தாரும் கண்ணகுலத்தாரும் காணி கொடுத்ததாகக் காஞ்சிக்கோயில் சீதேவியம்மன் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது

பல ஊர்களில் கோயில்களில் கிடாய் வெட்டும் அரிவாள் நாடார்கள் வசம் உள்ளது. காஞ்சிக்கோயில் நாடார் வசம் உள்ள அரிவாளில் 'பத்திரகாளி கொண்டத்து யெருமைக்கெடா வெட்டர அருவா' என எழுதப்பட்டுள்ளது.

பழையகோட்டைப் பட்டக்காரரின், பயிர குலத்தாரின் குலதெய்வமாகிய ஆனூரம்மன் கோயிலுக்குள் 'செல்லமூப்பன்' கோயில் உள்ளது. நாடார்கள் இன்றும் சென்று வழிபட்டு வருகின்றனர். முத்தூரில் கார்த்திகை தீப உரிமை நாடார் சமுதாயத்திற்கு உரியது.

செல்வக்குமாரர் கோவில் அறிவிப்பில் சிவபிராமணர் முத்தூரின் காணியாளராகச் சேர்க்கப்பட்டுள்ளனர் கொங்குநாட்டுச் சிவபிராமணர்கள் சிதம்பரம், திருக்கடவூர், காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் என ஆவணங்கள் கூறுகின்றன செட்டி சிவப்பிராமணர் ஆகியோர் பழைய காணியாளர்கள் எனச் சில ஆவணங்களில் காணுகிறோம். முத்தூர் வரலாற்றோடு சிவபிராமணர்கள் நெருங்கிய தொடர்புடையவர்கள்

முத்தூர்க் கல்வெட்டுக்களில் காசியப கோத்திரத்து பட்டன் உடையான் குலதீப பட்டன் என்பார் குறிக்கப்படுகிறார் சிவத்திரு குலசேகர பண்டித குருசுவாமிகள் பழைய பாடல்களில் குறிக்கப்பெறுகிறார். இப்போது மங்கலப்பட்டி அருள்திரு சைவசிகாமணி பண்டித குருசுவாமிகள் குலகுருவாக உள்ளார்.

❖❖❖❖❖❖

# 6. முத்தூர்க் கோயில்கள்

## செல்லாண்டியம்மன் கோயில்

கொங்கு வேளாளர் குலதெய்வங்களில மிக அதிகமான கோயில்களைக் கொண்டது செல்லாண்டியம்மனே ஏறத்தாழ 50 குலங்களுக்கு மேல் ஆங்காங்கு செல்லாணடியம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வணங்கி வருகின்றனர் முத்தூரில் சோழீசுவரர் கோயில் அருகே வடகிழக்கே செல்லாண்டியமமன் கோயில் உள்ளது.

செலலாண்டிம்மனைச் செல்லாயி, செல்வநாயகி, செல்விநாயகி, செல்லாயம்மன், செல்லியம்மன், செல்வியம்மன் என்று பல்வேறு இடங்களில் பல்வேறு பெயரிட்டு அழைத்து வருகின்றனர் மதுக்கரையில் எழுதப்பட்ட கண்ணகுலப் பட்டயத்தில் 'சிவசெல்வி துணை' என்ற தொடர் காணப்படுகிறது செல்லாண்டியம்மனுக்கே அங்கு வணக்கம் கூறப்படுகிறது எப்பெயரில் வழிபட்டாலும் அவ்வழிபாடு செல்லாண்டிம்மன் வழிபாடேயாகும்

நெருலூர் என்றும், கோட்டைக்கரை என்றும், மதிள்கரை என்ற பெயர் மருவியதாக உள்ள மதுக்கரை என்றும் வழங்கும் தொன்மையான இடத்தில் உள்ள திருக்கோயிலுக்குச் செல்லாண்டியம்மன் கோயில் என்று பெயர். செல்லாண்டியம்மனுடன் கரியகாளியமமன், பெரியநாயகியம்மன் கோயில்களும் அங்குள்ளன. அவை முறையே சேர, சோழ, பாண்டியருக்கு உரியன என்பர்.

மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு மூன்றுக்கும் எல்லையில் உள்ளது என்பது பண்டைய வரலாறு சேர, சோழ, பாண்டியர்கள் பத்தாண்டுக்கு ஒரு முறை மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் கூடி அம்மன் சன்னதியில் தங்கள் எல்லைப் பிரச்சனை முதலியவற்றைப் பேசித் தீர்த்துக் கொள்வது வழக்கம்.

ஒருமுறை அவ்வாறு கூடும்போது எல்லைத் தகராறு ஏற்பட்டபோது மதுக்கரைச் செல்லாண்டியம்மன் அருளாலேயே தகராறு தீர்ந்ததாம்.

கிழக்கு நோக்கிச் சோழவிநாயகரும், தெற்கு நோக்கிப் பாண்டிய விநாயகரும், மேற்கு நோக்கிச் சேர விநாயகரும் அங்கு அமைக்கப்பட்டன. நடுவே தான் குடியிருப்பதாகக் கூறிச் செல்லாண்டிம்மன் அரசர்களின் எல்லைச் சண்டையைத் தீர்த்து வைத்தார் என்பர்.

எல்லை பிரிக்கப்பட்டபின் அதை நிர்ணயம் செய்ய மதிள்கரை அமைக்கப்பட்டது அந்த மதிள்கரை சீனப்பெருஞ்சுவர்போல் இன்றும் காணப்படுகிறது. எல்லையைப் பிரித்த செல்லாண்டியம்மனே எட்டுக்கூடை மண்ணெடுத்துத் தங்கக்கரை போட்டார் என்பர்.

*'மண்ணைப் பிரித்த மதுக்கரைச் செல்லாயி'*

என்று தட்டயநாட்டார் தெவம் கூறுகிறது.

கண்ணகுலப்பட்டயத்திலும் இச்செய்தி விரிவாகக் கூறப்படுகிறது.

*'மூன்று செங்கற் பிடாரியைக் கொடுத்தாள். தனக்கு*
*மதுக்கரைச் செல்லாயி என்று பேர் கொடுத்தாள்.*
*சபையார்களும், மூவராசாக்களும் நல்லதம்பிக் கவுண்டரும்*
*கோயில் வலம் வந்து செல்லாண்டியம்மன் முன்பு*
*போனார்கள் ......... செல்லாண்டியம்மன் கோயிலுக்குப் போயி*
*அருளாடி சொன்ன பிரகாரம் எல்லைப் பிரிவும் பாகமும்*
*கண்டார்கள்'.*

அதுமுதல் கொங்கு வேளாளர்குலத்தார் பலருக்கு மதுக்கரைச் செல்லாண்டியம்மன் குலதெய்வம் ஆயிற்று கொங்கு நாடெங்கும் பல்கிப் பரவிய கொங்கு வேளாண் பெருமக்கள் மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் பிடிமண் எடுத்துக் கொண்டு சென்று ஆங்காங்கு செல்லாண்டியம்மன் கோயில்கள் பலவற்றை அமைத்தார்கள்.

*'கார்கொண்ட கருணைபுரி செல்லாண்டியம்மை'*

*'சிங்கவாகினியான செல்லாண்டியம்மை'*

எனப் பாடல்கள் புகழ்கின்றன.

பல கொங்குநாட்டுப் பட்டயங்கள் எங்கு எழுதினாலும் 'செல்லாண்டியம்மன் துணை' என்று எழுதினர். சில பட்டயங்களில்

*'மதுக்கரையில் உபயகாவேரியில் தீர்த்தமாடி*
*மதுக்கரைச் செல்லாண்டியம்மன் தீர்க்காயுசு*
*புண்ணிய பாக்கியத்தைக் கொடுத்து*
*இரட்சிப்பாராகவும்'*

என்றும், கல்வெட்டுக்களையும், பட்டய ஆவணங்களையும்

*'மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில்*
*போய்ப் பார்த்துக் கொள்ள வேண்டியது'*

என்றும் எழுதப்பட்டுள்ளனவற்றைக் காணுகிறோம்.

*'அத்தருடன் நடனமிடு பத்திரகங் காளி*
*அம்புவிக்குத் தாயாக வந்தருளும் காளி*
*சத்துரரை மட்டடக்கி நிறுத்துமக மாயி*
*சதகோடி அலகைபடை சூழவரு தாயி*
*முத்துவட மிட்டருளும் உற்றகிரு பாயி*
*மோதுபுகழ் முத்தூரில் மேவும்அனு கூலி*
*பத்திமிகு அடியவரை வட்சிகவு மாரி*
*பத்தர்புகழ் செல்லாண்டி அம்மை நாயகியே'*

என்பது ஒரு பழம்பாடலாகும்.

முத்தூர்க் காணியாளர்கள்,

*'வண்டமரும் கூந்தல் வளரும்செல் லாண்டியம்மன்*
*தண்டாமரையாம் நல் தாள்பணிவோர்'*

என்று புகழப்படுகின்றனர்.

*'வல்லாண்மை கொண்டு நித்தம்*
*மறையவர்க்குச் சொன்னமிட*
*செல்லாண்டி அம்மனுட*
*சீர்பாதம் போற்றி செய்வார்'*

என்பதும் முத்தூரார் புகழ்பாடும் வரிகளாகும்.

சின்னமுத்தூரில் எழுந்தருளி அருள்புரியும் செல்வக் குமாரர்க்கு மாசிச் சிவராத்திரியில் பெருவிழா நடக்கும் முன் முத்தூர் செல்லாண்டியம்மனுக்குக் கிராமசாந்தி நடத்திப் பொங்கல் வைத்துப் பூசித்து வழிபட்ட பின்னர்தான் செல்வகுமாரர் கோயில் கிராம சாந்தியும் திருவிழா நிகழ்ச்சிகளும் தொடங்கும் இதன்மூலம் செல்லாண்டடியம்மனின் முதன்மையும், முக்கியத்துவமும் தெரிகிறது

பரம்பரைப் பண்டாரங்கள் செல்லாண்டியம்மன் கோயிலில் பூசை செய்து வருகின்றனர். அத்தனூரம்மன் குப்பயணன் கோயில் முறைகாரர்கள் செல்லாண்டியம்மனை வணங்கிப் பூசை செய்த பின்னரே அத்தனூரம்மன் – குப்பயணசாமிக்குப் பூசை செய்கிறார்கள்.

முத்தூர்ச் செல்லாண்டியம்மனுக்கு 2.5 1985–இல் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

## அத்தனூரம்மன் – குப்பயணசுவாமி கோயில்

முத்தூர் என்னும் இப்பழம் பதி வளம் எல்லாம் பெற்றுச் சிறப்புடன் விளங்கியது. வேளாண்மை சிறந்திருந்த காரணத்தால் கால்நடைச் செல்வம் மிகவும் பெருகி இருந்தது. அவைகளை மேய்ப்பவர்கள் நாள்தோறும் பசும்புல் இருக்கும் இடம் நாடி அவைகளை ஓட்டிச் செல்வர்.

ஒரு சமயம் முள்ளிமாம்புதர் சூழ்ந்த புகுதிக்குப் பசுக்கூட்டங்களை ஓட்டிக்கொண்டு சென்றனர். காலைமுதல் மாலை வரை அப்பகுதியில் பசுக்கள் நன்கு மேய்ந்தன. கன்று ஈன்ற சில பசுக்கள் சில உணர்ச்சியால் உந்தப்பட்டு முள்ளிமாம்புதர் சென்று நின்று கொண்டு அங்கு புதரின் உள் இருந்த புற்றின்மீது பாலைச் சொரிந்தன. தான் ஈன்ற கன்றை நாடிச் செல்லுவதுபோல அப்பசுக்கள் விரைந்து நாடிச் சென்று நாள்தோறும் புற்றின்மீது பால் சொரிந்தன.

மாடுமேய்ப்பவர்கள் தாம் கண்ட இந்த அற்புதச் செயலை மாலையில் வந்து தம் உடையவரிடம் கூறினார்கள். அவர்களும் வியப்படைந்து அடுத்தநாள் சென்று மறைந்திருந்து அந்தப் பால்சொரியும் அதிசயத்தைக் கண்டார்கள். அந்தப் புற்றைச் சோதிக்க எண்ணி கடப்பாறை, மண்வெட்டி போன்ற ஆயுதங்கள் கொண்டு புதரை அகற்றி அங்கிருந்த புற்றை வெட்டினார்கள். வெட்டிய இடம் எல்லாம் இரத்தம் பீறிட்டு வந்தது. இதைக் கண்டு பயந்து நடுங்கி நின்றபோது அழகிய பெண் தெய்வம் கன்னி வடிவில் காட்சி தந்தது. அவர்களைப் பார்த்து 'பயப்படாதீர்கள். யான் உங்களைக் காத்து நிற்கும் குலதெய்வம். அத்தன் சர்வேசுவரன் ஆணைப்படி உங்கள் முத்தூரையும் மக்களையும், காணியாளர்களையும், கால்நடைகளையும் காக்கும் பொருட்டு முள்ளிமாம்புதரில் புற்றினுள் தவம் செய்து கொண்டிருந்தேன். யான் இருக்கும் இடத்தை உங்களுக்கு அறிவிக்கவே பசுக்களைக் கொண்டு பால் சொரியச் செய்தேன். உங்கள் முன்பு இப்போது காட்சியளிக்கின்றேன்'

நான் அத்தன் சோழீசுவரன் குடிகொண்ட அழகிய முத்தூரிலிருந்து உங்களைக் காக்கும் தாயாராக இருக்க உள்ளேன். என்னை நீங்கள் அத்தனூரம்மை என்று அழைக்கலாம். நான் வெளித்தோன்றிய இடத்தில் கோயில் ஒன்று கட்டுங்கள். சுயம்பு வடிவில் இருந்து உங்களைக் காத்து வருவேன்' என்று கூறினார்.

அவர்கள் கருவறைத் தவச்சாலை என்ற முறையில் கூறைவீடாகக் கட்டி அம்மையை ஒரு நல்ல நாளில் அங்கு எழுந்தருளச் செய்தார்கள். அத்தனூரம்மை அங்கு வீற்றிருந்து அடியாருக்கு அருள் பாலித்து

வருகிறார். அம்மன் அருளால் ஊரார் அனைவரும் பல்வளமும் பெற்றுப் பாங்குடன் வாழ்ந்து வருகின்றனர்.

காங்கயநாட்டில் காரையூர்க் காணியாளர்களாக விளங்கி நாட்டதிகாரம் செய்துவந்தவர்கள் பயிரகுலத் தலைவர் பழையகோட்டைப் பட்டக்காரர். காங்கயநாடு பசுவளம் மிக்கதாகக் காணப்பட்டது. அதற்குக் காரணம் பட்டக்காரர்களே.

தட்டயநாடு, வெங்கால நாட்டில் வாழ்ந்த வேட்டுவகுலப் பெருமக்கள் காங்கயநாட்டுக் கால்நடைகளைக் கவர்ந்து சென்றனர் பழைய கோட்டைப் பட்டக்காரர் அவைகளை மீட்டனர் வேட்டுவகுலத் தலைவர்கள் கொற்றவையை வணங்கி வெற்றிபெற வேண்டினர் அம்மன் உங்கள் ஊர் எல்லையில் ஒரு பிள்ளையாரையும், உரல் உலக்கையையும் வைத்துவிட்டுப் படைஎடுங்கள் கால்நடைகளை மீட்க மற்றவர் வரும்போது பிள்ளையாரும், உரல் உலக்கையும் ஓசை காட்டி உங்களை எச்சரிக்கை செய்யும், அதனால் விழிப்படைந்து நீங்கள் வெற்றி பெறலாம் என்று கூறினார். அவ்வாறே பிள்ளையார், உரல் உலக்கை ஒலியால் உடன் படையெடுத்து வெற்றி பெற்றனர்.

பழையகோட்டைப் பட்டக்காரர் தம் தோல்வி குறித்து ஆராய்ந்தார். தென்சேரியில் குப்பயணன் என்னும் ஒரு பெருவீரர் இருந்தார். மைசூர் அரசர் படையில் பணியாற்றி ஓய்வு பெற்றுத் தென்சேரியில் படைவீரர் பலருக்கும் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்.

வேட்டுவப் படையினரை வெல்லத் தமக்கு உதவுமாறு தென்சேரிக் குப்பயணனை மன்றாடியார் கேட்டுக கொண்டார் அதற்குச் சம்மதித்த குப்பயணனும், அவரது மாணவர்களும் வெங்காலநாடு நோக்கிப்படை எடுத்தனர் வழியில் முத்தூரில் முள்ளிமாம்புதர் சூழ்ந்த சோலையில் தங்கினர்

அங்கு குடிகொண்டுள்ள அத்தனூரம்மனின் பெருமையையறிந்து தமக்கு வெற்றிபெற உதவுமாறு குப்பயணன் அத்தனூரம்மையை வேண்டி வணங்கினார் தாம் வெற்றியுடன் திரும்பி வந்தால் அம்மனின் 'அருள் தலைமையை உலகுக்கு அறிவிக்கும் வகையில் எனது வெடிகொண்டு மூன்று முறை வெடிப்பேன் என்றார்

அத்தனூரம்மன், 'நீ வெற்றி பெறுவாய்; இனி அவர்கட்கு வெற்றி கிடைக்காது. ஆனால் அவர்கள் பிள்ளையாரை வசம் செய்ய பல நல்ல கனி வர்க்கங்களையும், உரல் ஓசையை அடக்க நெல் உமியையும்

கொண்டு செல்லுங்கள். நான் கொடுக்கும் விபூதியை உடன்கலந்து வெற்றி பெறுக' என்று அம்மன் வாழ்த்தினார் குப்பயணனும் அவ்வாறே செய்தார் பிள்ளையார் கனிவர்க்கங்களில் மகிழ்ந்தார் உமியுள்ள காரணத்தால் உரல் ஒலி எழுப்பவில்லை. வேட்டுவகுலப் பெருமக்களின் முயற்சி வெற்றி பெறாமல் தோல்வியடைந்தனர் பிள்ளையாரையும், உரல் உலக்கையையும் கைப்பற்றிக் கொண்டு வந்தனர் உரல் உலக்கையை முத்தூரில் கீழ்ப்புறமும், பிள்ளையாரை முத்தூரின் மேல்புறமும் வைத்துவிட்டுக் காரையூர் சென்று பழையகோட்டைப் பட்டக்காரரிடம் விபரம் கூறி வாழ்த்தும், வெகுமதிகளும் பெற்றனர்

முத்தூர் வந்த குப்பயணன் தன் சோர்வு நீங்கக் கோவணத்துடன் எண்ணெய் தேய்த்துக்குளிக்க முற்பட்டான். அப்பொது வெற்றிபெற்று வந்தால் அத்தனூரம்மனுக்கு மூன்று வெடி வெடிப்பதாக வேண்டியது நினைவுக்கு வந்தது அப்படியே எண்ணெய் தேய்த்தநிலையில் கோவணத்துடன் அத்தனூரம்மன் கோயிலுக்கு ஓடினான் தன் மறதிக்காக மன்னிப்புக் கேட்டு வெடி வெடிக்கும் நினைவு வந்தவுடன் அப்படியே ஓடிவந்துவிட்டதாகக் கூறினான். அம்மன் மகிழ்வுடன் குப்பயணனின் மூன்று வெடிகளை ஏற்றுக் கொண்டு வீரக்குப்பயணன் போன்றவர் காவல் தனக்குத்தேவை என்றும் தன் கோயிலிலேயே காவலுக்குத் தங்கிவிடுக என்று கூறினார். அவ்வாறே தங்கிய குப்பயணன் தெய்வநிலை அடைந்தார்.

தென்சேரியிலிருந்த தம் சகோதரர் குப்பயணனைத் தேடி முத்தூர் அத்தனூரம்மன் கோயிலுக்கு வந்த அவன் சகோதரிகள் பேச்சியம்மன், மயிலியம்மன், முசலியம்மன் மூவரும் தம் சகோதரரைப் பிரிய முடியாமல் அத்தனூரம்மன் அருளுடன் அங்கேயே தெய்வீகக் கோலத்துடன் அமர்ந்தனர். அவர்கள் அத்தனூரம்மனின் பணிப்பெண்களாக ஆகினர்

இன்றுவரை அத்தனூரம்மன் கூரைவேய்ந்த கோயிலிலேயே தெய்வமாக இருந்து அடியார்கட்கு அருள் பாலிக்கின்றார்.

அத்தனூரம்மனைப் பண்டாரங்கள் பூசை செய்து வருகின்றனர் மக்கள் அத்தனூரம்மன் கோயிலில் பல்லி சகுனம் கேட்டுப் பயனடைகின்றனர்.

அம்மனுக்கு மேல்புறத்தில் விநாயகரும், கீழ்ப்புறத்தில் குமரக்கடவுளும் உள்ளனர் அவருக்கு அருகில் அத்தாய், முத்தாய், செல்லாய் படிமங்களும் உள்ளன. அருகில் யானைப்பாகன் உருவம் உள்ளது தென்பகுதியில் சப்த கன்னியர் பரிவார தேவதைகளாக

உள்ளனர். அம்மனுக்கு எதிரில் சிம்மவாகனமும், தொட்டில்களும் உள்ளன.

துப்பாக்கி, தண்டாயுதம், வேற்படையுடன் உள்ள குப்பயணசுவாமி உருவம் சுதையால் ஆனது முன்பு வேப்பமரம் அருகில் இருந்தது. பழைய மரம் பட்டுவிட்டது. தற்போது வேம்பும் – அரசும் உள்ளது. கவசத்துடன் உள்ள குப்பயண சுவாமிக்கு எண்ணெய்க் காப்பு அபிஷேகம் மட்டும் செய்யப்படுகிறது. அருகில் சுதை வடிவில் மகாமுனி என்ற இரத்த முனியும் அவருக்குப் பின்புறம் பச்சமுனி, பவளமுனி, மந்திர மகாமுனியும் உள்ளனர். எதிரில் சகோதரிகளான பேச்சியம்மை, மயிலியம்மை, முசலியம்மை உள்ளனர் அடுத்து இவ்வாலயக் காணியாளர்களின் சிலைகள் வடக்கு முகமாக உள்ளன. குப்பயணனுக்கு வாகனமாகப் பல குதிரைகள் உள்ளேயும் வெளியேயும் உள்ளன.

பேய், பிசாசு, பில்லி, சூனியம், பைத்தியம், விபத்துக்கள் நீங்கவும், வீடுகளிலும், பட்டி தொட்டிகளிலும் திருட்டு நடக்காமல் இருக்கவும் அன்பர்கள் குப்பயணனிடம் நேரில் முறையிடுவார்கள். குப்பயணன் அவைகளைக் கேட்டு அன்பர்கள் குறைகளை நீக்குவார். பக்தர்கள் அதிர்வெடி வெடித்தும், குதிரை, வேல், மணிகளை உபயமாகவும் அளிப்பர்.

ஆடிப்பதினெட்டு, தீபாவளி, திருக்கார்த்திகை, அமாவாசை நாட்களில் விசேடப் பூசைகள் நடக்கும். மாசிமகம் சிவராத்திரியன்று பிரம்மோற்சவம் நடைபெறும்.

கோயில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் இயங்கி வருகிறது.

### சின்னமுத்தூர் செல்வக்குமாரசுவாமி கோயில்

சின்னமுத்தூரில் கோயில் கொண்டுள்ள செல்வக்குமரன் கோயில் முருகன் கோயிலேயாகும். செல்வக்குமரன் வரலாறு செவிவழிச் செய்தியாகவும், காளியண்ணக் கவிராயர் எழுதிய பூந்துறைப் புராணம் மூலமாகவும் சிறப்பாகக் கூறப்படுகிறது.

முருகப்பெருமானின் நான்கு அவதாரங்கள் பூந்துறைப் புராணத்தில் சிறப்பாகக் கூறப்படுகின்றன. முதல் அவதாரம் சோழநாட்டில் சீர்காழியில் மறையவர் சிவபாதர் மகனாகத் திருஞானசம்பந்தராக அவதாரம் செய்தது. இரண்டாவது அவதாரம் பாண்டிய நாட்டில் மதுரை உக்கிரகுமார பாண்டியனாகத் தடாதகைப் பிராட்டியின் மகனாகத் தோன்றியது. மூன்றாம்

அவதாரம் சோழநாட்டில் சுவாமிமலையில் வைசியர் குலத்தில் சுவாமிநாதனாகத் தோன்றியது.

நான்காவது அவதாரமாகக் கொங்குநாட்டு முத்தூரில் கொங்கு வேளாளரில் மணியகுல கோத்திரச் செல்லப்ப கவுண்டருக்கு மகனாக செல்வக்குமாரராகத் திருஅவதாரம் செய்தது என்று பூந்துறைப் புராணம் கூறுகிறது. ஆனால் செவிவழிச் செய்தியாகத் தந்தை பெயர் முத்தூர் மணியகுலம் பரஞ்சோதி என்றும் தாயார் பெயர் பாவை என்பதாகவும் கூறப்படுகிறது. 'முத்தூர்த் தல மாண்பு' எழுதிய அமரர் எம் வி. குப்புசாமிக்கவுண்டர் அவர்கள் செல்வக்குமரனின் பெற்றோர் பெயர் பரஞ்சோதி, பாவை என்றே கொள்கிறார்.

பரஞ்சோதி, பாவை தம்பதியருக்கு நெடுநாட்கள் மகப்பேறு வாய்க்கவில்லை முத்தூர் சோழீசுவரர் கோயிலில் இறைவனை வேண்டினர். மகப்பேறு இல்லாவிடில் தங்கள் ஆவியை விடுவதாகவும் சோழீசுவரரிடம் முறையிட்டனர் சிவபெருமான் அருளால் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. செல்வக்குமரன் என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்த்தனர்.

பஞ்சகன்னியர் எனப்படும் ஐந்து பெண்கள் பழமுதிர்சோலை (அழகர்மலை) சென்று முருகப் பெருமானுக்குத் தொண்டு செய்யும் பேறு வாய்க்கப்பெற வேண்டும் என்று தவமிருந்தனர். முருகப் பெருமான் செல்வக்குமாரராகத் தான் திரு அவதாரம் செய்யும் வரலாற்றைக் கூறிச் 'சிவதர்மங்களை நிறைவேற்றத் தாம் கொங்கு நாட்டுத் தென்சேரிகிரியில் தங்கியிருக்கும் போது பல இடங்களில் அவதாரம் செய்த நீங்கள் அங்கு என்னை அடைவீர்களாகுக' என்று கூறினார்

1) சத்தியமங்கலத்தில் அந்தணர் குலதகில் சத்தியமங்கலத்து அம்மை
2) பட்டவாய்த்தலையில் ராசபுத்திரக் குடும்பத்தில் பட்டத்தலைச்சி
3) மதுக்கரையில் வைசிய மரபில் மதுக்கரைச் செல்வி
4) உமையாள்புரத்தில் பண்டார வம்சத்தில் உபயகாளி
5) உமையாள்புரத்தில் பண்டார வம்சத்தில் வாதாடுகாளி

என ஐவராகப் பஞ்சகன்னியர் பிறந்து வளர்ந்து வந்தனர் (இவர்கள் முருகன் அடியாராகிப் பின்னர் தெய்வதியடைந்து வழிபடப்பட்டு வருகின்றனர்).

செல்வக்குமரன் குழந்தையாக இருக்கும்போது முத்தூர் முத்தகுலத்தைச் சேர்ந்த 'குமராயி' என்னும் அருள்மாது ஒருவர் எடுத்தக்

கொஞ்சவும், பணிவிடைசெய்யவும், வளர்ப்பதில் உறுதுணையாகவும் இருந்தார் பூர்வ புண்ணியத்தால் குமராயி இளம்பெண் துறவியாகச் சோழீசுவரர் கோயிலில் அருட்பணி செய்து வந்தார்.

செல்வக்குமாரர் வளர்ந்து கல்வியையும், பல்வேறு கலைகளையும் பெற்றுப் பேரறிவு உடையவராகத் திகழ்ந்தார். குமராயி செல்வக் குமாரரையே குருவாக ஏற்றுத் துறவறத்தை மேற்கொண்டார்

சின்னமுத்தூரில் குமராயி தவச்சாலை என்ற பெயரில் மடம் ஒன்றை அமைத்து அடியார்களைப் போற்றி உபசரித்து வந்தார். பலருக்கு உணவளித்தார் துறவிகள் பலர் வந்து தங்கிச் செல்லும் திருமடமாகக் குமராயி அமைத்த மடம் விளங்கியது. (இந்த மடமே இறுதியில் செல்வக்குமாரர் கோயிலாக மாறியது).

தக்க பருவம் அடைந்ததும் தேச சஞ்சாரம் செல்வதாகப் பெற்றோரிடம் கூறிச் சென்ற செல்வக்குமாரர் பல தலங்களுக்குச் சென்று அடியார்கட்கு நல்லருள் புரிந்து இறுதியாக முருகன் மந்திராசல மூர்த்தி என்னும் பெயரில் குடி கொண்டுள்ள செஞ்சேரி என அழைக்கப்படும் தென்சேரிகிரிக்கு வந்து ஒரு குகையில் தங்கி யோக நிலையில் இருந்தார்.

அங்கு ஏற்கனவே தவமியற்றிவந்த தொட்டியச் சின்னான், உபய குப்பன் என்ற இருவரும் செலவக்குமாரருக்குப் பணிவிடை செய்யும்பேறு பெற்றனர் பல மெய்யன்பர்களும், துறவிகளும், அடியார்களும் செல்வக்குமரன் தங்கியுள்ள குகைக்கு வந்து அருள் பெற்றனர். எல்லோருக்கும் நல்லருள்பாலித்துச் சிவராத்திரியில் தம்மிடம் வருமாறு கூறி அனுப்பிவிட்டுச் செல்வக்குமாரர் யோகசமாதியில் அமர்ந்தார்.

முன்பு குறிப்பிட்ட பஞ்சகன்னியர் ஐவரும் தம் தவப்பேறால் செல்வக்குமாரரால் அழைக்கப்பட்டுப் பணிவிடை செய்யும்பேறு பெற்றனர். பெற்றோரும் வந்து போற்றினர். செல்வக்குமாரன் பாதநிழலையடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றனர்.

தவமாது குமராயி செல்வக்குமாரரையே நினைந்து நினைந்து சின்னமுத்தூர்த் திருமடத்தில் அடியார்கட்கு உணவளித்து வந்தார். அவருடைய மடத்திருப்பணிக்கும், அருட்பணிக்கும் மணிய குலத்தில் தோன்றிய அத்தாய், முத்தாய், செல்லாய், என்ற மூன்று மகளிரும் துறவறம் பூண்டு குமராயி செய்துவரும் அருள்பணிக்குப் பல்வேறு வகையில் உதவிகள் செய்தனர்.

மணியகுல அத்தாய், முத்தாய், செல்லாய் மூவரும் துறவறம்பூண்டு பல நல்லூர்கட்குச் சென்று உணவு, தானியம் சேகரித்துப் பொதிமாடுகளின் மேல் ஏற்றிவருவர். குமராயி திருமடத்தைச் சேர்ந்த அவை அடியார்கட்கு அன்னம் பாலிக்கப் பயன்பட்டன.

ஞானாசிரியனும் குருநாதனும் ஆகிய செல்வக்குமாரர் வந்துசேர வேண்டிய நாள் வந்தும் வராத காரணத்தால் குமராயி முத்தூர் அத்தனூர் அம்மனிடம் முறையிட்டார்.

அத்தனூர் அம்மனும் தன் ஆலயக்காப்பாளன் ஆகிய குப்பண்ணனிடம் செல்வக்குமாரரை அழைத்துவர ஏவினார்

தென்சேரிகிரி சென்று குப்பண்ணன் விடுத்த அழைப்பை ஏற்க மறுத்த செல்வக்குமாரர் குகையில் மறைந்தருளினார். குப்பண்ணன் மலையை மூன்று கூறாக்கி செல்வக்குமாரரை முத்தூர் வருமாறு வேண்டினான்

மூன்று மலைத்துண்டுகள் இரண்டாகி இன்று பெரியமலை, சின்னமலை என்று தென்சேரிகிரி விளங்குகிறது.

அன்னை அத்தனூரம்மன் அழைப்பை ஏற்றுச் செலவக்குமாரர் முத்தூர் வர இசைகின்றார். பஞ்ச கன்னியருடனும் தொட்டியச் சின்னான் உபயகுப்பன் ஆகியோருடனும் செல்வக்குமாரர் முத்தூர் வந்து அத்தனூரம்மனை வணங்கினார்

அம்மனும் குமராயி ஏற்படுத்திய திருமடத்தில் இருந்து அருள்பாலிக்கக் கட்டளையிட்டார் பெற்றோர் வசித்த சின்னமுத்தூரில் குமராயி கட்டிய திருமடத்தில் செல்வக்குமாரர் தங்கி அதனையே கோயிலாகக் கொண்டு உயிர்கட்கு அருள்பாலித்து வருகிறார். செல்வக்ககுமரன் பஞ்சகன்னியர்களையும் ஆங்காங்கு உரிய இடங்களில் கோயில்கொள்ளச் செய்தார் உபயகுப்பனைக் காவல் தெய்வமாக்கினார்

பல ஆண்டுகள் தவமாது குமராயி செல்வக்குமாரர் கோயில் அருட்பணியாற்றி வந்தார். தான் செய்துவந்த அருள்பணிகளை அத்தாய், முத்தாய், செல்லாய் மூவரும் தொடர்ந்து செய்து வருமாறு யணித்தார் பசுக்கூட்டங்களைப் போற்றவும், அடியார் கூட்டத்திற்கு உணவளிக்கவும் வேண்டினார். பின் தெய்வகதியடைந்தார் ஒவ்வோராண்டும் மாசிமகத்தில் சிவராத்திரிப் பெருவிழாவிற்கு ஏற்பாடு செய்தனர். தொடர்ந்து ஆலயப் பணிகள் குறைவில்லாமல் நடக்க ஏற்பாடு செய்துவிட்டு அம்மூன்று கன்னித்தாய்மாரும் பூதவுடலை நீக்கிப் புகழுடம்பு எய்தினர்.

அவர்கள் மூவரின் சமாதிகளும் சின்ன முத்தூரில் அமைக்கப்பட்டுள்ளன அவர்கள் அனைவரையும் முத்தூர் மக்கள் வணங்கிப் பேறுபெற்று நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

திருநாவுக்கரசரின் சகோதரியார் திலகவதியார் போன்று கொங்கு வேளாண்குலப் பெண்கள் நால்வர் திருமணம் செய்து கொள்ளாமல் இறைபணி செய்து தெயவமாகிய வரலாறு மிகவும் போற்றி மதிக்கத்தக்கதாகும். முத்தன், மணியன் குலத்தாருக்குப் பெருமைதரும் வரலாறாகும்.

செல்வக்குமாரர் என்ற திருநாமங்கொண்ட இறைவன் முருகவேள் என்ற முதல்வர் ஆவர் தெனஅரசு, வடதொரட்டி, ஞானப்பாழி அமைந்துள்ள மேல்பாறை, கீழ்ச்சரிவு என்ற அமைப்புக் கொண்ட சின்னமுத்தூரில் ஆகம முறைப்படி கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், கொடிமரம், பலிபீடம், சுற்றுப் பிரகாரம் என் அமைக்கப்பட்ட ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவன் செல்வக்குமரன். அத்திருக்கோயிலின் முன்புறம் 'உபய குப்பணன்' என்கிற அடியவனின் ஆலயம் உள்ளது. ஆலயத்தில் உள் தென்மேற்கு மூலையில் 'நிருத கணபதி' ஆலயமும், வடமேற்கில் பாலசுப்பிரமணியர் ஆலயமும் அமைந்துள்ளன. வடக்குப் பிரகாரத்தில் வாகன மண்டபமும், பண்டக சாலையும் தென்கிழக்குப் பகுதியில் மடப்பள்ளியும், அதற்குப் பக்கத்தில் ஸ்தல விருட்சமான வில்வ மரமும் உள்ளன. ஆலயத்தில் முன்னர் தேரடியில் இரண்டு அழகிய வேலைப்பாடமைந்த மரத்தேர்கள் உள்ளன

செஞ்சேரியில் செல்வக்குமாரர் தங்கிய குகை இன்னும் உள்ளது. செல்வக்குமாரரின் திருவடியும் உள்ளது. சின்னமுத்தூர் செல்வக்குமாரர் கோயில் திருப்பணி தொடங்கும் முன் செஞ்சேரி சென்று செல்வக்குமாரர் திருவடிகட்கு முதல் பூசை செய்த பின்னரே இங்கு திருப்பணியைத் தொடங்கினர்.

இவ்வாலயத்தில் காலை, மாலை இருவேளை பூஜைகளுடன், மாதாந்திர அமாவாசை, கிருத்திகைத் திருநாட்கள், ஆடி 18, யுகாதி, அககினி நட்சத்திரம், தனுர் மாதம், திருக்கார்த்திகை, சூரசம்ஹாரம், சிவராத்திரி போன்ற திருவிழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன.

சிவராத்திரி விழா இவ்வாலய பிரம்மோற்சவமாகும். பன்னிரு நாடகள் விழா நடைபெறும். லெல்வக்குமாரரை செல்லக்குமாரர் என்றும் அழைக்கின்றனர்.

**பூந்துறைப் புராணத்தில்**

காளியண்ணக் கவிராயர் இயற்றிய பூந்துறைப் புராணத்தில் இறுதிப் பகுதியான குமாரச் சருக்கத்தில் 9ஆம் பாடல் முதல் 15ஆம் பாடல் முடிய செல்வக்குமாரர் வரலாறு கூறப்படுகிறது.

முத்தூர்மணியகுலச் செல்லப்பன் மகனாகத் தோன்றிய செல்வக்குமாரர், பல கல்வி கற்றுச் சித்தனாகிச் செஞ்சேரி அடைந்து கால்நடைகளைக் காத்து மழை இல்லாததின் காரணமாகப் பூந்துறை வந்தார் தென்னிலைக் கொங்குராயனோடு ஏற்பட்ட போரில் குப்பணன் என்பவன் இறக்கும்போது 'செல்வக்குமாரர்க்கு அடிமை ஆகினேன்' என்று கூறி இறந்தான். செல்வக்குமாரர் அடியவனாகிய குப்பணன் பூந்துறை அருகில் உள்ள சேமூரில் கோயில் கொண்டு மக்களுக்குத் துன்பம் தீர்த்துக் கோயில் கொண்டுள்ளார்

*கடையுகத்தில் கொங்குவள நாட்டில் முத்தூர்க்கு*
*அதிபதியாம் கங்கைகுலன் மணிய கோத்ரன்*
*திடம்உயரும் செல்லப்பன் உதரந் தன்னில்*
*சென்றுமனை தன்வயிற்றில் செல்லும் திங்கள்*
*கடலமுதம் போல்குறிகள் பத்தும் சென்று*
*காதலித்துப் பிறந்ததினால் செல்வம் ஓங்கி*
*நடைபயிலச் செல்வக்கு மாரர் என்றே*
*நாட்டினார் உலகிலுள்ளோர் நாடுங் காலை*

*சொல்லரிய இக்குக்குக் கணுவாம் போலத்*
*தோராத கலைக்கியானம் ஆறு சாத்திரம்*
*நல்லபதி னெண்புரா ணங்கள் கற்று*
*நன்மார்க்கம் தனைஎழுதி நவிலும் விஞ்சை*
*அல்லல்அறத் தான்கற்றுச் சித்தன் ஆகி*
*அவனியோர் தங்களுக்கு வியாதி தீர்த்துச்*
*செல்வமிகும் செஞ்சேரி தன்னைச் சார்ந்து*
*செழித்திடக்கோ வர்த்தனங்கள் செய்த பின்னை*

*வான்மறந்து கோவுக்கும் இரைஇல் லாமல்*
*வளருகரி கிரிதன்னில் மாடு மேய்த்து*
*கான்திரணம் புனல்சருகும் இல்லா தாலே*
*கதித்துவளர் பூந்துறைக்குக் கங்குல் சென்றார்*
*ஆள்மிகுந்து புல்மேய்ந்து விரதி ஆகி*
*அடுத்திடும்நல் சேமூரில் அன்பாய் வந்து*
*ஊன்துறந்தே அமுதுஅருந்தி உலகில் வாழ்வோர்க்கு*
*உறும்வினைகள் தாம்தீர்த்து ஓங்கி வாழ்நாள்*

ஓங்கியதென் னிலைய தினில் கொங்கு ராயன்
உயர்கோட்டை கட்டிஅர சாளும் நாளில்
தாங்குஅரிய முடியரசர் எவர்வந் தாலும்
தான்வணங்கா முடிஎன்றே தகும்பேர் பெற்று
வீங்கியநல் முலைமடவார் கூட்டம் மேனி
விருந்தோடு களியாடல் மிகவே செய்து
தேங்கியநல் நாட்டுக்குஒத் ததுவே என்று
சிலகாலம் அரசாண்டான் செங்கோல் வேந்தன்.

அவனிஎல்லாம் ஒருகுடைக்கீழ் அரசே ஆள்வான்
ஆனபிர வுடதேவ ராயர் நாளில்
தவம்உடைய சொல்லில்அரிச் சந்திரன் என்னும்
தகைமைஉளான் ஒருவேந்துஅப் பாச்சி என்போன்
குவலயத்தில் வரக்காணாது இருக்க நாட்டுக்கு
ஒத்ததுவே கொங்குரா யனுக்கும் என்ன
அவன் உரைக்கச் சிலகன்னப் பறையர் தம்மை
அழைத்திட்டான் ஒருகுடைக்கீழ் ஆளும் நாளில்.

கூட்டமிட்டுப் படையெடுத்துக் கொங்கு ராயன்
குறித்துடுநல் கோட்டைக்குள் கன்னம் இட்டு
நாட்டினிலே முக்குறுணி தாலி கொண்டு
நல்வாசற் பிள்ளையரை நலமாகக் கொண்டார்
தாட்டிகமாய்க் குப்பன்என்போன் கன்ன வாசல்
தனில்இறந்தான் வீரசுவர்க்கந் தானே மேவ
நாட்டினிலே செல்வக்கு மார ருக்கு
நான் அடிமை ஆகினேன் என்றான் வீரன்

அந்நாள்தொட்டு எந்நாளும் அடிமை ஆகி
யான்செல்வக் குமாரனுக்கும் அன்பு கூர்ந்தும்
இந்நிலத்தில் மானிடர்க்கும் வியாதி தீர்த்தும்
ஏழ்பிறவித் துன்பமதை எளிதில் நீக்கிக்
கன்னமிடும் கடுங்கோலைத் தானே கொண்டு
காசினியெல் லாம்இனிதாய்க் காத்து வாழும்
செந்நெல்மிகும் பூந்துறைநல் சேமூர் தன்னில்
செயல்பெற்றான் எந்நாளும் நலம்பெற் றானே.

**மங்கையர் திலகங்கள்**

செல்வக்குமாரர் வரலாற்றில் குமராயி, அத்தாய், முத்தாய், செல்லாம் ஆகிய நான்கு கொங்குவேளாண் மங்கையர் பற்றிய செய்திகள் மிக

முக்கியம் வாய்ந்ததாகும் பெண்கள் முக்கியமாகச் சமயத்தொண்டில் ஈடுபடுவது அரிது அதிலும் குறிப்பாகக் கன்னிப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமல் சமயத் தொண்டிலும், திருமடம அமைப்பிலும் குருநாதரை வணங்குதலிலும், அடியாரைப் பேணி உபசரித்தலிலும், அன்னதானத்திலும், மடத்திற்கும் அன்னதானத்திற்கும் வேண்டிய பொருளைத் தேடுதலிலும், அவற்றைத் திருமடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தலிலும் ஈடுபடுவது மிகமிக அரிதான செயலாகும்

மேற்கண்ட சமயம் சார்ந்த நற்காரியங்களில் முத்தன்குலம் சார்ந்த குமராயி, மணியகுலம் சார்ந்த அத்தாய், முத்தாய், செல்லாய் ஆகியோர் ஈடுபட்டது கொங்கு நாட்டுச் சமய வரலாற்றிலும், தமிழகச் சமய வரலாற்றிலும் மிகமிக முக்கியமான நிகழ்ச்சியாகும்

பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் வரலாற்றில் காணும் திலகவதியார் போலவே இப்பெண்கள் நால்வரும் இளமைத் துறவுபூண்டு சமயநெறியில் அருந்தொண்டாற்றியது வரலாற்றுச் சிறப்புமிகக செயலாகும் கொங்கு வேளாண் பெருமக்கள் இநநான்கு மங்கையர் திலகங்களை நினைவு கூர்ந்து தாம் சமய நெறி நடந்து தம் மக்களைச் சமயநெறியில் ஈடுபடுத்துவார்களாக!

## சோழீசுவரர் திருக்கோயில்

வரலாற்றுப் புகழ்வாய்ந்த பெரியமுத்தூர் எனப்படும் முத்தூரில் ஊர் மத்தியில் கம்பீரமாக ஓங்கி உயர்ந்த கோபுரத்துடன் கூடிய சிவாலயம் சோழீசுவரர் திருக்கோயில்

கல்வெட்டுகளில்

'முத்தூர் ஆளுடையார் குலோத்துங்க சோழீசுவரர் என்றும், முத்தூர்ப் பட்டயத்தில்

'முத்தூர் குலோத்துங்க சோழீசுவரமுடைய தம்பிரானார்' என்றும் குறிப்புக்களைக் காணுகிறோம்

கி.பி. 1148 முதல் 1183 வரை கொங்குநாட்டைச் சீருடனும், சிறப்புடனும் நல்லாட்சி புரிந்த கொங்குச் சோழமன்னன் குலோத்துங்க சோழனால் திருப்பணி செய்யப்பட்ட திருக்கோயில் முத்தூர்ச் சிவன்கோயில் ஆகும்.

இக்கோயில் 12ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை மிகவும் சிறப்புடன் விளங்கியதை இங்குள்ள 11 கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன.

அம்மன் பெயர் இன்று 'பிரஹலநாயகி' என்று வடமொழிப்படுத்தி அழைக்கப்பட்டாலும் கல்வெட்டில் 'பெரியநாச்சியார்' என்று தூய தமிழில் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எம்.வி. குப்புசாமிக்கவுண்டர் அவர்கள் தம் 'முத்தூர் தல மாண்பு' என்றும் நூலில் சிவன்கோயில் பூசைக்காக 390 ஏக்கர் நிலங்களும், கோயில் ஊழியர் இருபத்தொருவர் பணிக்காக 340 ஏக்கர் நிலங்களும் மானியமாக விடப்பட்டிருந்தன என்று கூறியுள்ளார்.

1962 ஆம் ஆண்டு நவக்கிரங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுக் குடமுழுக்கு விழாச் செய்யப்பட்டது. சிவாலய முறைப்படி எல்லாம் பரிவார தெய்வங்களுக்கும் உரிய சன்னதிகள் உள்ளன.

1. காங்கயம் வியாபாரி மோடன் செட்டியான ஈசான்தேவன்
2. கொற்றனூர்க் காவலன் கள்ளிப்பிள்ளரில் செய்யான் வைய்யான் மனைவி உடையபிராட்டி
3. முத்தூர்க் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன் மகன் சிங்கனான அரங்கராயன்
4 வியாபாரி சடையன் செட்டியான மாணிக்கவாசகன்
5. திருவாசியனான குலோத்துவங்க சோழச் சிங்கதேவன்
6. முத்தூர் பார்ப்பாரச் சான்றார்
7. காங்கய நாட்டுச் சபையார்
8. வேட்கோவரில் சேவிடைப் பெரியான், நடுவிற் பெரியான், சிறுப்பெரியான்
9 முத்தூர் நகரத்தார்
10. வெள்ளம்பர் குல தன்மபாலன்

ஆகியோர் சோழீசுவரர் கோயிலுக்குக் கொடைகள் அளித்துள்ளனர்.

வேளாளர் வணிகர், வேட்டுவர், பார்ப்பார், வேட்கோவர் போன்ற பல சமூகத்தார் கொடையளித்துள்ளனர். சமூக ஒற்றுமைக்கு அன்றும், இன்றும் முத்தூர் மிகச்சிறந்த எடுத்துகாட்டாகத் திகழ்ந்துள்ளது.

திருப்பணியைப் பொதுமக்கள் திருப்பணி என்றும், திருப்பணியை முன்னின்று நடத்தியோர் கிராமப்பொது மக்கள் என்றும், தலைமை தாங்கியவர்களை மக்கள் குழுத் தலைவர் என்றும் குறித்துள்ளமை சமூக ஒற்றுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

கொங்குச் சோழர் நாளில் இக்கோயில் வழிபாடு செய்வித்த ஆதிசைவ குலப் பெரியவர் பெயர் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. 'சிவப்பிராமனர் காசியப கோத்திரத்தைச்சேர்ந்த பட்டன் உடையான் ஆன குலதீப பட்டன்' என்பவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பரம்பரையாகக் கோயிலில் இருந்தனர் என்றும், அபிடேக நீர்க் குடமும் தருப்பையும் கொண்டு கோயிலில் உள்புகும் (கருவறை) உரிமை இவர்கட்கேயுரியது என்றும் கூறப்படுகிறது. மக்கள் கொடுக்கும் பொன்னையும், பொருளையும் பெற்று அறத்தை இவர்களே செய்யும் உரிமைக்ளைப் பெற்றிருந்தனர்.

முன்பு இக்கோயிலுக்கு இசை வேளாளர்கள், ஆஸ்தான மேளகாரராக இருந்துள்ளனர். அவர்கள் மானியபூமி தேவடியான் தோட்டம் எனப்பட்டது. நட்டுவாங்கம், மிருதங்கம் போன்ற பணிகட்கும், திருவலகு பணிக்கும் உரிய ஆட்கள் இருந்தனர். அவர்கட்கு நில மானியத்துடன் வீடுகளும் அளிக்கப்பட்டிருந்தன.

புதுக்கோவில் ஒன்றைக் கட்டுவதைக் காட்டிலும் முன்னோர் கட்டிய பழைய கோயில்களைப் புதுப்பிப்பதும், பாதுகாப்பதும், பழுதுபார்ப்பதும் நான்கு மடங்கு புண்ணியம் தரும் என்று புராணங்கள் கூறுகின்றன. காஞ்சிப்புராணம் சிவபுண்ணியப் படலத்தில்

*முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய*
*நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவும்*
*தெரிந்து முன்னையில் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு*
*புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங்கு கூறுவர்*

என்று கூறப்படுகிறது.

பெரும் பொருட்கொடை அளித்து எண்ணற்ற தானதர்மங்கள் செய்து அடையும் புண்ணியத்தைவிடத் திருக்கோயில் திருப்பணிக்கும் சிறுகொடை அளித்து அதனால் அடையும் புண்ணியம் மிகவும் சிறந்ததாகும்

பழைய கோவில்களைப் புதுப்பித்து மீண்டும்

*கல்வினால் அமைத்த பேர்கள்*
*கயிலைவிட்டு அகலார் தாமே*

என்று ஒரு பழம்பாடல் கூறுகிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக முத்தூர்ச் சிவாலயத் திருப்பணிகள் செய்யக் காரணமாக இருந்த பொதுமக்கள், காணியாளர்கள், நற்பணிமன்றத்தினர் அனைவரும் நம் பாராட்டுதலுக்கு உரியவர்கள்

குலோத்துங்க சோழீசுவரர் அருளால் எல்லாப்பணிகளும் இனிது நிறைவேறின. இந்தச் சந்தர்ப்பத்தில் தென்காசி ஆலயம் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டியன் பாடிய பாடலினை நினைவு கூர்தல்அவசியம்

*"சேலே றியவயல் தென்காசி ஆலயம் தெய்வச்செய*
*லாலே அமைந்ததிங்கு என்செயல் அல்ல இதனைஇன்னம்*
*மேலே விரிவுசெய் கோபுரப் பாரடி வீழ்ந்துஅவர்தம்*
*பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம பாண்டியனே"*

என்பது அப்பாடலாகும்

**கைலாதநாதர் கோயில்**

முத்தூருக்கு வடமேற்கில் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் செங்கோடம்பாளையம் அருகில் கைலாயநாதர் கோயில் உள்ளது. இக்கோயிலைப் பற்றி செவிவழிச் செய்தியாக ஒரு வரலாறு கூறப்படுகிறது.

பொதியமலையில் அகத்தியர் வாழ்ந்து வந்தார். அவரிடம் சீடராக விளங்கியவர் ஒரு ஆதி சைவ முனிவர் அவர் ஒருமுறை கயிலைமலையில் வீற்றிருந்து அருள்புரியும் பரமசிவத்தைக் காணும் பொருட்டு வடதிசை நோக்கிப் பெரும்பயணம் மேற்கொண்டார். அப்பயணத்தின்போது அந்த ஆதிசைவ முனிவர் முத்தூர் அருகே ஒருநாள் தங்கினார். நித்திய வழிபாட்டின் நிமித்தம் செய்வன செய்து அவர் நிஷ்டையில் ஆழ்ந்தார் அவரது தியானம் கயிலைநாதனாம் சிவபெருமானின் கயிலைத் திருக்கோலத்தைக் காணும் நிலையில் அமைந்தது. நீண்ட நெடுநேரம் அவர் தியானம் செய்தார்

முடிவில் கயிலைநாதரே அங்கு தோன்றினார் கயிலைநாதனை நேரில் கண்ட அம்முனிவர் கயிலைநாதரைப் பலபடப் பாராட்டிப் புகழ்ந்தார். வணங்கி மகிழ்ந்தார். அம்முனிவரைக் கருணையுடன் நோக்கிய கயிலைநாதர் 'அன்பக்ஷே, உன் பக்திக்கு மெச்சினோம் நீ விரும்பியபடி என் கயிலைக் கோலத்தை உனக்கு இங்கே காட்டினோம். ஆதலால் நீ இந்த இடத்தையே கயிலையாக நினைத்து இங்கேயே தங்குவாயாக' என்று கூறினார்.

கயிலைநாதராகச் சிவபெருமான் முனிவருக்குக் காட்சி தந்த இடத்தில் ஒரு கூடம் அமைத்துக் கயிலைநாதர் என்ற பெயரில் லிங்கம் ஒன்றைப்

பிரதிட்டை செய்தனர். பின்னர் அங்கே கோயில் ஒன்று அமைந்தது இதுவே இந்தக் கயிலைநாதர் கோயில் ஆகும்

ஆதிசைவ சிவாச்சாரியார் இக்கோயிலுக்குப் பூசை செய்து வருகிறார். இக்கோயிலுக்கு முன்பு 185 ஏக்கர் மான்யபூமி இருந்ததாக எம்.வி. குப்புசாமிக் கவுண்டர் அவர்கள் எழுதியுள்ளார்கள் இக்கோயிலை ஆனூர் வித்தியாலயா மெட்ரிக் பள்ளித் தாளாளர் கே எஸ் சிவசேனாபதி அவர்கள் நிர்வகித்து வருகிறார்

## மாதவராயப் பெருமாள் கோயில்

கொங்கு நாட்டின் பூர்வீகக் கிராமங்கள்தோறும் சிவன்கோயிலோடு பெருமாள்கோயிலும் இருப்பது வழக்கம் சைவர்களான கொங்கு வேளாண் பெருமக்களும், அவர்களின் குடிமக்களும், பிறரும் சமய வேறுபாடு இன்றி வைணவத் தலங்களாம் விண்ணகரங்களை வணங்கி வருகின்றனர் இது கொங்கு நாட்டுக்குரிய சிறப்பாகும்.

தொட்டிய நாயக்க மன்னனாகிய மாதவராயன் என்பவனால் அமைக்கப்பட்ட கோயில் ஆதலால் மாதவராயப் பெருமாள் கோயில் என அழைக்கப்படுகிறது பூமிதேவியும், சீதேவியும் உடன் எழுந்தருளியுள்ளனர், இப்பகுதிக்கு மாதவராயபுரம் என்று பெயர், மாதவராயன் கோட்டை இருந்ததற்கான அடையாளங்கள் இன்றும் உள்ளன இக்கோயிலுக்கும் 185 ஏக்கர் மானியம் இருந்தது என்பர்

## சத்தியமங்கலத்து அம்மை கோயில்

முத்தூர் வரலாற்றில் கூறப்பட்ட பஞ்ச கன்னிகையருள் ஒருவரான சத்தியமங்கலத்து அம்மை கோயில் முத்தூரின் வடக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் செங்கோடம்பாளையம் செல்லும் பிரிவில் உள்ளது. நித்திய பூசைகள் பண்டாரங்கள் செய்து வருகின்றனர்.

## சோழநல்லூர் மதுக்கரைச் செல்வி அம்மை கோயில்

பஞ்ச கன்னியருள் மற்றொருவரான மதுக்கரையில் வைசிய குலத்தில் தோன்றிச் செல்வக்குமாரரின் ஆசிபெற்ற மதுக்கரைச் செல்வியின் கோயில் முத்தூருக்கு வடமேற்குத் திசையில் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தின் அருகில் உள்ளது. காஞ்சிமாநதி எனப்படும் நொய்யல் ஆற்றின் கரையில் உள்ளது பங்குனி மாதம் பொங்கல் சாட்டுகிறார்கள் சிவன்ராத்திரி, பங்குனியுகாதிப் பண்டிகைகளைச் செங்கோடம்பாளையம் மக்கள் செய்து வருகின்றனர்.

### பட்டத்தலைச் செல்வி அம்மன் கோயில்

பட்டவாய்த்தலை என்னும் ஊரில் ராசபுத்திர வம்சத்தில் தோன்றிய பஞ்சகன்னியருள் ஒருவரான பட்டைத்தலைச் செல்வியின் கோயில் சின்னமுத்தூரில் செல்வக்குமாரர் கோயிலுக்கு வடபுறம் உள்ளது. வரிசையாக உள்ள தொரட்டி மரத்தின் அருகில் அம்மன் காட்சி தருகிறார். பண்டாரங்கள் பூசை செய்து வருகின்றனர்.

### வாதாடு காளியம்மன் கோயில்

உமையாள்புரம் என்ற ஊரில் பண்டாரம் வம்சத்தில் தோன்றிச் செல்வக்குமாரர் ஆசிபெற்ற பஞ்ச கன்னியருள் ஒருவராகிய வாதாடு காளியம்மன் கோயில் முத்தூருக்குக் கிழக்கே ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் ஊடையம் நகப்பாளையம் பாதையில் அமைந்துள்ளது. பகைவர் படையெடுப்பை இந்த அம்மன் தெரிவிக்கும் என்பர்.

இக்கோயிலுக்குப் பக்கத்தில் செல்வக்குமாரரின் பக்தையான செல்லாய் என்னும் பெயர் கொண்ட நல்லம்மை முக்தியடைந்த நினைவுக் குகை ஊடையம் ஊருக்கு மேல்புறம் உள்ளது. பண்டாரங்கள் பூசை செய்து வருகின்றனர். நகப்பாளையம் மணியகுலத்தார் கல்வெட்டு வாதாடு காளியம்மன் கோயிலில் உள்ளது

### உபய காளியம்மன் கோயில்

உமையாள்புரம் பண்டாரம் வம்சத்தில் தோன்றிய மற்றொரு கன்னிகையான உபயகாளியம்மை கோயில் முத்தூரின் தென்கிழக்கில் மங்கலப்பட்டி என்னும் ஊரில் உள்ளது. பண்டாரங்கள் பூசை செய்து வருகின்றனர்.

### மாரியம்மன், பகவதியம்மன் கோயில்

முத்தூரின் மேற்குப் பகுதியில் அரை கிலோ மீட்டர் தொலைவில் சேரம்பாளையம் என்னும் ஊர்க்கருகில் உள்ளன இந்தக் கோயில்கள், சேரம்பாளையம் மாரியம்மன் என்று அழைப்பார்கள். அருகில் பகவதி கோயில் உள்ளது.

மாரியம்மனுக்கு வைகாசித் திங்கள் அஸ்த நட்சத்திரம் உள்ளிட்ட பத்து நாட்கள் பொங்கல் சாட்டி விழா எடுப்பர். முப்பாட்டு உரிமை சேரன் குலத்தாருக்கு உரியது. பண்டாரங்கள் பூசை செய்து வருகின்றனர். செங்குந்த முதலியார்கள் அக்கினிச்சட்டி எடுப்பர். இங்கு அலகு குத்தல் விசேடம்.

### கோட்டைக்கரை அம்மன் கோயில்

முத்தூருக்குத் தென்புறம் வெள்ளகோயில் பாதையில் கால் கிலோ மீட்டர் தூரத்தில் இக்கோயில் உள்ளது. தொட்டிய நாயக்க மன்னன் மாதவராயன் கட்டிய கோட்டையின் காவல் தெய்வம், பண்டாரங்கள் பூசை செய்து வருகின்றனர்.

### செங்காளியம்மன் கோயில்

பெரிய முத்தூரின் வடகிழக்கில் சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் தொட்டியபாளைத்திலிருந்து சொரியம்பாளையம் செல்லும் வழியில்நொய்யலாற்றங்கரையின் அருகில் உள்ளது அம்மை புற்றுக்கண் வடிவில் காட்சி தருகிறார். புற்றுக்கண்ணுக்குத்தான் அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. கொங்கு வேளாளர் பூசை, பண்டாரங்கள் துணைபுரிந்து வருகின்றனர்.

### பாதக்கரைச் செல்வி அம்மன் கோயில்

சின்னமுத்தூரிலிருந்து வடகிழக்கில் இரண்டரைக் கிலோ மீட்டர் தூரத்தில் சொரியம்பாளையம் செல்லும் வழியில் இக்கோயில் உள்ளது. பண்டாரங்கள் பூசை செய்கின்றனர். திருப்பணி நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

# 7. முத்தூர்க் கல்வெட்டுக்கள்

கொங்குமண்டலத்தைக் காங்கயநாட்டு முத்தூர் ஒரு பழம்பதி, முத்தூரிலிருந்து சின்னமுத்தூர் செல்லும் வழியில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்பழங்காலச் சின்னமான பெருங்கற்படைகள் சில இன்றும் காணப்படுகின்றன முத்தூரில் தொன்மை இதன்மூலம் தெரிகிறது. காங்கய நாட்டுப் பதினான்கு ஊர்களில் பத்தாவது இடத்தை முத்தூர் பெறுகிறது.

முத்தூரில் முழுமையாகத் திருப்பணி செய்யப்பட்டுக் குடமுழுக்கு விழாவைச் சிறப்புடன் காணும் அழகுமிக சிவாலயம் சோழீசுவரம், கோயில் சோழீசுவரம் என்றும், இறைவன் சோழீசுவரர் என்றும் இன்று அழைக்கப் பெற்றாலும் இங்குள்ள கல்வெட்டுக்களில் சிவாலயம் குலோத்துங்க சோழீசுவரம் என்றும், இறைவன் முத்தூர் ஆளுடையார் குலோத்துங்க சோழீசுவரமுடையாரர் என்றும் பெயர் வழங்கி வந்துள்ளதைக் காணுகிறோம். கொங்குச் சோழர் திருப்பணி என்பதை அறிகின்றோம்

இக்கோயிலில் பதினொரு கல்வெட்டுக்கள் உள்ளன. இன்று ஒரு கல்வெட்டுக்கூட முழுமையாக அங்கு இல்லை பிரித்த கல்வெட்டுக் கற்கள் மாற்றிவைத்துக் கட்டப்பட்டுள்ளன. காலவெள்ளத்தில் சில அழிவுற்றன.

19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் மெக்கன்சியின் உதவியாளர்கள் விசயநகர அரசரின் ஒரு கல்வெட்டை மட்டும் படியெடுத்துள்ளனர். தென்னியந்தியக் கோயில் சாசனங்கள் முதல் தொகுதியில் அச்சாகியுள்ளது. (எண். 328).

1910 ஆம் ஆண்டு மத்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப்பிரிவினர் இங்குள்ள ஒன்பது கல்வெட்டுக்களைப் படி எடுத்துள்ளனர் இப்பொழுது கல்வெட்டுப்பிரிவு உதகமண்டலத்தில் இருந்தது பின்னர் இந்த அலுவலகம் மைசூருக்கு மாற்றப்பட்டது.

முத்தூர்க் கோயிலில் கல்வெட்டுக்கள் படிக்க இயலாத நிலையில் இருந்ததால் மைசூர் சென்று முத்தூர்க்கோயில் கல்வெட்டுப் படிகள் மத்தியத் தொல்லியல் துறைமூலம் பெறப்பட்டன. 1910 ஆம் ஆண்டு மத்தியத் தொல்லியல் துறையார் இக்கோயில் கல்வெட்டுக்களைப் படி எடுக்கும்போது மெக்கன்சி கல்வெட்டுக்கள் பதிப்பில் உள்ள கல்வெட்டு

அழிந்துவிட்டது என அறிகிறோம். ஏனெனில் அவர்கள் படி எடுத்த கல்வெட்டுக்களில் அக்கல்வெட்டு இல்லை. இன்றுகூட அக்கல்வெட்டின் பகுதிகளைக் காண முடியவில்லை.

குலோத்துங்கசோழன் (1148–1183) கல்வெட்டுக்கள் ஐந்தும் வீரராசேந்திரசோழன் (1207–1255) கல்வெட்டுக்கள் நான்கும் இங்கு உள்ளன. ஒரு கல்வெட்டு அரசனின் நேரடி ஓலையான கோனேரின்மை கொண்டான் கல்வெட்டாகும். அநேகமாக அக்கல்வெட்டு பாண்டியரது கல்வெட்டாக இருக்கலாம்.

முன்பு மிகச்சிறு கோயிலாக இருந்த இச்சிவாலயம் கொங்குச் சோழமன்னன் குலோத்துங்க சோழன் திருப்பணி செய்து விரிவாக்கிய காரணத்தால் குலோத்துங்க சோழீசுவரம் என்று பெயர் பெற்றது போலும். இறைவனும் குலோத்துங்க சோழீசுவரர் என்று பெயர் பெற்றார் இன்றைய சோழீசுவரர் என்ற பெயரைக் குலோத்துங்க சோழீசுவரம் என்று மாற்றினால் வரலாற்றுப் பெருமை தெரிய வாய்ப்பாகும்

முன்பு சிவாலயங்களில் அம்மனுக்குத் தனிக்கோயில் எடுப்பது வழக்கமில்லை திருக்காமக் கோட்டங்கள் என்ற பெயரில் பின்னாளில்தான் எடுக்கப்பட்டன. ஆனால் முத்தூரில் அம்மன் பெரிய நாச்சியார்க்குப் பதின்மூன்றாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே தனிக்கோயில் கட்டப்பட்டமை தெரிகிறது கொங்கு நாட்டில் பல சிவாலயங்களில் தொன்மையான அம்மன் சன்னதிகள் உள்ளன.

### திருவிளக்குக்கொடை

பலர் முத்தூர்ச் சிவாலயத்திற்குச் சந்தியாதீபம் வைக்கப் பொற்காசுகளைக் கொடையாக அளித்துள்ளனர்..

1. காங்கயம் வியாபாரி மோடன் செட்டியான ஈசானதேவன் 1155 ஆம் ஆண்டு சந்தியாதீபம் வைக்க ஒரு அச்சு கொடையாக அளித்துள்ளான்.
2 தென்கரை நாட்டுக் கொற்றனூர்க் காவலன் கள்ளிப் பிள்ளரில் செய்யான் வைய்யான் என்பவன் மனைவி உடையபிராட்டி 1211ஆம் ஆண்டு சந்தியாதீபம் ஒன்று எரிக்கக் கொடை அளித்துள்ளாள்.
3. முத்தூர்க் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன் மகன் சிங்கனான அரங்கராயன் 1211ஆம் ஆண்டு சநதியாதீபம் வைக்க ஒரு அச்சுக் கொடையாக அளித்துள்ளான்
4. வியாபாரி சடையன் செட்டியான மாணிக்கவாசகன் 1212ஆம் ஆண்டு சந்தியாதீபம் வைக்க ஒரு அச்சு கொடையாக அளித்துள்ளான்.

5. வேளாளரில் வெள்ளம்பர் சோழனான தன்மபாலன் சந்தியாதீபம் எரிக்க 1159 ஆம் ஆண்டு ஒரு அச்சு கொடையாக அளித்தான்

**அமுதுபடிக்குக் கொடை**

1. திருவாசியனான குலோத்துங்க சோழச் சிங்கதேவன் 1155ஆம் ஆண்டு அமுதுபடிக்காகக் கொடையளித்துள்ளார். இவர் அரசு அதிகாரியாக இருக்கலாம்

2. முத்தூரிலிருக்கும் பார்ப்பாரச் சான்றார் அமுதுபடிக்காக அரிசிக்குப் பதிலாகக் கம்பு கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்

3 1227ஆம் ஆண்டு முத்தூர் நகரத்தார் அமுதுபடிக்குக் கொடையளித்துள்ளனர்

4. 1450 ஆம் ஆண்டு காங்கய நாட்டுச் சபையார் அமுதுபடியின் பொருட்டுக் கொடையளித்துள்ளனர்

**வேட்கோவர் கொடை**

1156 ஆம் ஆண்டு முத்தூர் காணியுடைய வேட்கோவரில் சேவிடைப் பெரியான், நடுவிற் பெரியான், சிறுப் பெரியான் ஆகிய மூவரும் ஒன்றரை அச்சுக் கொடையாக அளித்துள்ளனர் பெயர் அமைப்பைக் காணும்போது மூவரும் சகோதரர்கள் எனத் தெரிகிறது.

**திருப்பணிக்கொடை**

1227ஆம் ஆண்டு கோயிலில் திருப்பணி செய்து புதுப்பிப்பதற்காக முத்தூர் நகரத்தார் கொடையளித்துள்ளனர்.

முத்தூர் வேந்தரில் செல்வன் என்பவன் 1156 ஆம் ஆண்டு கொடையளித்துள்ளார்.

**கோயில் சிவபிராமணர்**

முத்தூர்க் கோயில் காணியுடைய சிவப்பிராமணர் காசியப கோத்திரத்தைச் சேர்ந்த பட்டன் உடையான் ஆன குலதீப பட்டன் என்பவர் சில கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளார். இவர் குடமும் குச்சியும் கொண்டு கோயில் உள்புகும் உரிமையுடைவர் என்று குறிக்கப்படுகிறார். இவரே கொடைகளை ஏற்றுப் பரம்பரை பரம்பரையாகத் தவறாமல் நடத்திவருவேன் என்று உறுதியளித்துள்ளார். நீண்ட காலம் இவர் வாழ்ந்திருந்ததாகத தெரிகிறது.

## அளவு கருவி

முத்தூரில் அக்காலத்தில் வழங்கிய அளவு கருவிக்குச் 'சோழியம்' என்று பெயர் இருந்துள்ளது. அரிசி, கம்பு ஆகியவை இக்கருவியால் அளக்கப்பட்டுள்ளன

## நாணயம்

அக்காலத்தில் 'அச்சு' என்ற பொன் நாணயம் வழக்கில் இருந்துள்ளது அரை அச்சுக் கொடுப்பதும் வழக்கில் இருந்துள்ளது இதனை 'மூலப் பொருளாக வைத்து வட்டிமூலம் அறச்செயல் நடைபெற்றது.

## கொடையளிக்கப்பட்ட ஊர்கள்

1450 ஆம் ஆண்டு காங்கய நாட்டுச் சபையார் அனைவரும் ஒன்றாகக் கூடிக் கோவில்பள்ளி, சோமையநல்லூர் ஆகிய ஊர்களில் உள்ள அனைத்து நிலங்களையும் முத்தூர்ச் சிவாலயத்திற்குக் கொடையாக அளித்துள்ளனார்.

## ஆறுகாலப்பூசை

15ஆம் நூற்றாண்டில் முத்தூர்ச் சிவாலயத்திற்கு ஆறுகாலப் பூசை நடைபெற்றுள்ளதைக் கல்வெட்டின் மூலம் அறிகின்றோம். அன்றைய கோயில் சிறப்பும் மக்களின் பக்தித் திறமும், வழிபாட்டுப் பெருமையும் இதன்மூலம் தெரிகிறது.

## கல்வெட்டுக்கள் மூலம்

கீழேயுள்ள ''கல்வெட்டுக்களில் முதல் ஒன்பது கல்வெட்டுக்கள் மத்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் வெளியிட்டுள்ள 1911 ஆம் ஆண்டறிக்கையில் 158 முதல் 166ஆம் எண் கல்வெட்டுக்களாகப் பதிவாகியுள்ளது. மூலக் கல்வெட்டுக்கள் அச்சில் உள்ளன. இன்னும் வெளியாகவில்லை. ஒரு கல்வெட்டு அவிநாசிப் பேராசிரியர் மா. கணேசன் படி எடுத்தது (எண் 5)

### 1. கருவறைத் தென்சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவ
2. ற்கு யாண்டு ஏழாவது காங்கயத்தில் விபா
3. பாரி மோடந் செட்டியாந ஈசானதேவந்நே

4. ந் முத்தூர் ஆளுடையார் குலோத்துங்

5 க சோழீஸ்வரமுடையாற்கு சந்தியாதீபம்

6. ஒந்றுக்கும் அச்சு ஒந்றும் கைக் கொண்டு

7 இக்கோயிலில்க் காணிஉடைய சிவப்பிரா

8. மணன் காசுவந் பட்டந் உடையானாந குலதீப ப

9. ட்டந்நேந் எந் மக்கள் மக்கள் இவ்விளக்கு ஒந்

10. றும் சந்திராதித்தவரை செல்வதாகவும்.

## 2. கருவறைத் தென்சுவர்க் கல்வெட்டு

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்து

2. ங்க சோழதேவற்குத் திருவெழுத்தி

3. ட்டுச் செல்லாநின்ற திருநல்லி

4. யாண்டு ஏழாவது திருவாசியனா

5. ந குலோத்துங்கசோழச்சிங்கதே

6 வனேந் காங்கையநாட்டு முத்தூரி

7. ல் ஆறுடையார்க் குலோத்துங்க சோழீ

8. ஸ்வரமுடையாற்கு நாயனார் அமுது

## 3. கருவறை மேற்குச்சுவர்க் கல்வெட்டு

1 ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவற்கு ய

2. ாண்டு எட்டாவது காங்கைய நாட்டு முத்

3 தூர்... வேந்தரில் செல்வன் பு. நவர்

## 4. கருவறை மேற்குச்சுவர்க் கல்வெட்டு

1. கோவிராசகேசரி திரிபுவநச் சக்

2 கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ

3 தேவற்கு யாண்டு எட்டாவது காங்க

4. யநாட்டு முத்தூர் வேட்கோவந் காணி

5. உடைய வேட்கோவந் சேவிடை பெரிய

6. ானு நடுவிற் பெரியானு சிறுப்பெரியானும் முத்தூ

7. ராளுடையார் குலோத்துங்க சோழீஸ்வரமுடையார் தன்

8. டேசுர ஸ்ரீஹஸ்தத்தால் நாங்கள் இவ்வச் சொன்றரையு

9. ம்

**5. கருவறை மேற்குச்சுவர்க் கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு பத்தாவது முத்தூர் வெள்ளான் வெள்ளம்பரில்...மர சோழ...
2. யான தன்மபாலநேன் குலோத்துங்க சோழீசுவரமுடையார்கு சந்தியா தீபத்துக்கு அச்சு ஒன்றும் கைக்கொண்டு இக்கோயில் காணியுடைய சிவப்பிராம
3. ணன் காசுவந் பட்டந் உடையானான குலதீபபட்டநேன் என் மக்கமக்கள் இவ்விளக்கொன்றும் சந்திராதித்தவரை ...
4. க்கோயில் குடமுங் குச்சியும் கொண்டு புக்கான் ஒருவன் இவ்விளக்கு ஏற்றுவார்

**6. கருவறை வடக்குச்சுவர்க் கல்வெட்டு.**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர
2. தேவற்கு யாண்டு நாலா
3. வது தென்கரைநாட்டு கொற்ற
4. னூர் காவலந் கள்ளி பி
5. ள்ளரில் செய்யான் வைய்யா
6. ன் மனைக்கிழத்தி உடைய பி
7. ராட்டிய்யேன் முத்தூர் ஆளுடை
8 யார்க்கு சந்திபா தீபம் ஒந்று.

**7. கருவறை வடக்குச்சுவர்க் கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்
2. திர தேவற்கு யாண்டு நா
3. லாவது முத்தூர் காவன்,
4. வளவரில் உத்தமசோழப் பல்ல
5. வரையந் மகந் சிங்கநாந அர

6. ங்கராயநேந் முத்தூர் பெரிய
7. நாச்சியாற்கு சந்திபாதீபம் ஒந்றுக்
8. கும் அச்சு ஒன்றுங் கைக்கொண்டு
9. பெரிய நாச்சியார் கோயில்லில் காணி
10. உடைய சிவப்பிராமனந் காசுவந்
11. பட்டந் உடையாநாந குலதீப
12. பட்டநேந் இவிளக்கொந்றும்
13. ந் மக்கள் மக்கள் சந்திராதித்தன
14. ர செல்வதாகவும்

**8. கருவறை தெற்குச்சுவர்க் கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு நாலாவதுக்கு எதிரா
2. மாண்டு ... வயைத்தி வியாபாரி சடையந் செட்டியான மாணிக்க வா
3. சகன் சந்தியாதீபம் ஒந்றுக்கு அச்சு ஒந்று குடுக்கைக் கொண்டு இக்கோயி
4. லில் காணிஉடைய சிவப்பிராமணந் காசுவந் பட்டந் உடை
5. யாநாந குலதீப பட்டநேந் எந் மக்கள் மக்கள் இவ்விளக்கு ஒந்றும்..
6. ாக் குடமும் குச்சியும் கொடு புகுவார் சந்திராதித்தவரை செலுத்துவதாகவும்

**9. கருவறை வடக்குச்சுவர்க் கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்குத் திரு
2. வெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியா
3. ண்டு இருபதாவது முத்தூர் நகரத்தார் ஆ
4. ளுடையார் கொலோத்துங்க சோழீச்சுர
5. முடையாற்கு திருப்புதியதுக்கு இக்கோயில் கா
6. ணியுடைய சிவப்பிராமணந் காச்யவ கோத்திர கு
7. லதீபட்டந்...................................நகர

8. த்தார் பக்கல் திருப்புதியதுக்கு.........சேக ப

9. ............ ..லான .. . . .. ...இவ்வச்சுங்கொண்டு..... . ..துக்கு ஆண்

10. டுவரை தொட்ட.......ளக்கு ......... ..நாழியால் ப.

11. ..... துணிப்பதக்கு அமுதுக்கு .....வி....

12. திபப... . முள்ளளவும் செலுத்துவோமாகவும் இக்கொ

13. யில்குடமுங் குச்சியுங் கொண்டு புகுவாந் செலுத்துவேநாக

14. கல்வெட்டிக் குடுத்தேந் குலதீப பட்டநேந் முத்தூர்

15. ........ க்கு

**10. கருவறை தெற்குச்சுவர்க் கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோநேரிமை கொ

2. ண்டான் முத்தூர் பாப்பாரச் சான்றா

3. ற்கு நம்மோலை குடுத்தபடியாவ

4. து தாங்கள் இறுக்கக் கடவ இறைக்கண்

5. புக்காச் சிலவாகத் தங்களூர் ஆளுடைய

6. குலோத்துங்க சோழீசுரமுடையா

7. ற்கு திரு அமுதுபடி அரிசி சோழியத்தா

8. ல் நானாழிக்கு தங்களூர் இறைக்கண்பும் பி

9 காணம் பதில் கண்பும் செ

10. .... க்கண்பு கலத்து வாய் அறு..

11 ... .கண்பும் யாண்டு ஆறாவது முதல்

12 ......டி சுரநா ... .

**11. மல்லிகார்ச்சுனராயர் கல்வெட்டு**

ஸ்வஸ்திஸ்ரீமன் ராச மண்டலேசுவரன் சமஸ்த திருபுவனச் சக்கிரவர்த்திகளாகிய அரியராய பூறவ தெட்சன பச்சிம உத்தர சது சமுத்திராதிபதி திரையடர்ந்து ஈழமண்டலமும் எம்மண்டலமுங் கொண்டருளி ராச்சியம் பரிபாலனம் பண்ணின அனந்தராயர் ஸ்ரீவீரமகாராயர் தேவராய உடையார் குமாரர் ஸ்ரீமது யிம்மண்டலத்து மல்லிகார்ச்சுனராய உடையார் கடவதாக னன்னா பிற கெம்பீர

உடையவற்கு ராச்சியம் பொற்குமன செல்லானின்ற சகாப்தம் 1372க்கு மேல் செல்லாநின்ற சுக்கில சம்வத்சரம் வையாசி மாதம் 25 தேதி சோமவாரம் கேட்டை நக்ஷத்திரமும் தைதுலாகரணமும் பெற்ற காலத்தில் காங்கய நாட்டவரோம் நிறைவற நிறைந்து குறைவறக்கூடி வாட்டமின்றி .. .. கூட்டம் பொருந்தி குலோத்துங்க சோழீசுவர நயினாருக்கு உதகம் கொடுத்த ஊராவது கோவில்பள்ளி சோமைய நல்லூர் நஞ்சை புஞ்சை தோட்டம் மேல் நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் எப்பேர்ப்பட்ட பாட்டங்களும் ஸ்ரீ குலோத்துங்க சோழீசுவரமுடையாற்கு ஷட்கால நிமந்தங்களுக்கு திருவாராதனம் அமுதுபடி சாத்துப்படி முதலாகியதுக்கும் உண்டாவதாகக் குடுத்தது யிப்படி கல்லிலேயும் வெட்டிக் கொள்ளுவாராகவும்.

❖❖❖❖❖❖

# 8. முத்தூர்ப் பட்டயம்

முத்தூரின் வரலாற்றுச் சிறப்பையும், முத்தூர் வாழ் அனைத்துப் பெருமக்களின் ஒற்றுமையையும், தியாக உணர்வையும் எடுத்துக் காட்டுவது முத்தூர்ப் பட்டயம் என்னும் ஓலைச் சுவடியாகும்.

கொங்குநாட்டு அறிஞர் வே ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தொகுப்பில் உள்ள அப்பட்டயத்தை 2.4.1978 ஆம் ஆண்டு முத்தூர் எம்.வி குப்புசாமிக்கவுண்டர் அவர்கள் படி எடுத்துத் தம் 'முத்தூர் தல மாண்பு' என்னும் நூலில் வெளியிட்டுள்ளார்கள் அமரர் வே.ரா. தெய்சிகாமணிக்கவுண்டர் அவர்களின் கையெழுத்துப் படியைக் கொண்டு இந்நூலாசிரியர் தம் 'கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள்' என்னும் நூலில் (1992) அதைப் பதிப்பித்துள்ளார்

கொங்குநாட்டின் முக்கியமான செய்தியொன்றை இப்பட்டயம் கூறுகிறது. மெக்கன்சி ஆவணங்களில் உள்ள காரையூர்ச் செப்பேட்டின் நகல் மூலம் முத்தூர்ப் பட்டயச் செய்தி உறுதிப்படுவதை அறிகின்றோம்.

காங்கயநாட்டுப் பன்னிரண்டு ஊரவரும், தென்கரை நாட்டாரும், பூந்துறை நாட்டாரும், அரைநாட்டரும் தென்னிலை வெங்கச்சி வேட்டுவத் தலைவன் கொங்குராயனுக்குச் சவளக்காணிக்கை கொடுத்து வந்தனர். சவளக் காணிக்கை தொடர்ந்து அளிக்க வேண்டும் என வற்புறுத்துனர். சவளக் காணிக்கை என்பது மரியாதையின் பொருட்டுத் தலைவனுக்கு அளிப்பது. பராபவ ஆண்டு ஆனி மாதம் 7ஆம் நாள் தென்னிலை வேட்டுவ தலைவன் கொங்குராயன் மாந்தபுரம் வந்து வெட்டிக்குத்தி ஆடு மாடுகளையெல்லாம் ஓட்டிக்கொண்டு போய்விட்டார் வள்ளி எறிச்சில் பில்லகுலம் தொண்டைமான் மன்றாடி மகன் மாந்தக்கவுண்டர், காவுல பெரியதம்பிக்கவுண்டர் மருமகன் காரை, காரையூர் மணியகுலம் ராவுத்தகவுண்டர் மகன் வாரணவாசி மூவரும் கால்நடைகள் சென்ற வழியில் தொடர்ந்து சென்று மொஞ்சனூார்க் குளத்தருகே நடைபெற்ற சண்டையில் இறந்துபோனார்கள்.

காங்கயநாடு 12 ஊராரும் ஒன்றுகூடி பழையகோட்டை அழகன் சர்க்கரை உத்தமக்காமிண்டன் தலைமையில் பன்னப்பறைரோடு சென்று தன்னிலைக் கோட்டையை இடித்துக் கொங்கராயனைக் கொன்றார்கள். மேற்கூறிய நான்கு நாட்டாரும் தாராபுரம் சென்று நஞ்சராயனை வேண்டிக்கொள்ள பழையகோட்டையாரை நஞ்சராயன் அனுப்பினான் என்று செப்பேடு கூறுகிறது.

தென்னிலைப் போரில் முத்தூரைச் சேர்ந்த பதின்மூன்று பேர் இறந்து போனார்கள்

1. காவிள கருமருத சரவணகவுண்டர் மகன் சோழியப்பன்
2 மணியரில் பெரியநயினாக்கவுண்டர் மகன் சிலச்செல்லப்பன்
3. வளவரில் சிதம்பரநாதக்கவுண்டர் மகன் விருத்தாளியப்பன்
4 காச்சலில் தீர்த்தாக்கவுண்டர் மகன் வேலப்பன்
5. சேரரில் செம்பியாக்கவுண்டர் மகன் நல்லதம்பிக்கவுண்டர்
6. முத்தரில் சோழியப்பகவுண்டர் மகன் பாண்டியப்பன்
7. உப்பிலியரில் அங்கணநாயக்கர் மகன் சின்னவயிரவன்
8. மாகுளவரில் பருதவலயர் மகன் செம்மன்
9. தச்சரில் சோழத்தச்சன் மகன் அர்த்தநாரி
10. உகச்சரில் வேலன் மகன் சைவசிகாமணி
11 இருளரில் கூத்தன் மகன் மசப்பணிக்கன்
12. பரம்பரில் பெரியபிள்ளான் மகன் செய்யான்
13. பறையரில் வீரத்தோட்டி மகன் மதசரவன்

இவர்கள் அன்றைய முத்தூர் வீரர்கள், நாட்டுக்காகக் கொங்கு வேளாளர்களுடன் முத்தூரில் வாழ்ந்த பலசமூகத்தாரும், வேட்டுவகுலப் பெருமக்களும் (காவலர், மாவலவர்) கொங்கராயனோடு போர் செய்யப் போர் முனைக்குச் சென்றது அக்காலத்து முத்தூரின் சமூக ஒற்றுமையைக் காட்டுகிறது. 13 பேரில் 6 பேர் முத்தூர்க் காணியாளர்கள், அவர்கள் இறந்துபோன மற்ற 7 பேரின் வாரிசுகளுக்கு மானிய நிலம் அளித்துள்ளனர் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர். மனித நேயத்துக்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

தலைமை தாங்கிய அழகன் சர்க்கரை உத்தமக் காமிண்டருக்கு காரையூர், கொடுமணல் காணியாகக் கிடைக்கிறது. நாட்டுத் தலைமைப் பட்டமும் கிடைத்தது.

மற்றொரு முக்கியமான செய்தி முத்தூர்ப் பட்டயத்தில் காணப்படுகிறது விசயநகருக்கு வரி கொடுக்காத காரணத்தால் கொங்கு நாட்டில் பலர் சிறைப்படுகின்றனர். முத்தூர்ப் பொதுமக்களில் 15 பேர்

கைதாகிச் சிவன் சமுத்திரத்தில் சிறையிருந்தனர். எஞ்சிய முத்தூர் மக்கள் மற்ற அனைவரும் பயந்து போய் கீழ்க்கரை வாழவந்தி நாட்டு அரியூருக்குக் குடிபெயர்ந்து விட்டனர். 12 வருடம் முத்தூரில் மக்கள் குடியில்லாமல் பாழ்நத்தமாக இருந்துள்ளது. பின்னர் மக்கள் குடியேறுகிறார்கள் அவர்களுக்கு மிகக் குறைந்த வரி விதிக்கப்படுகிறது.

சிவசமுத்திரச் சிறையில் இருந்த முத்தூர் மக்கள்

1. முத்தூர்க் காணியாளப் பின்ளையரில் காவுல வேந்தரில் கருமருத சரவண கவுண்டர்மகன் சோழியப்பன்

2. வளவரில் சிதம்பரகவுண்டர் மகன் கோணியப்பன்

3. காச்சலில் அர்த்தநாரிக்கவுண்டர் மகன் குமாரசாமி

4. கள்ளிபில்லரில் வேலப்பகவுண்டர் மகன் வேம்பாகவுண்டர்

5. வெங்கச்சி வேட்டுவரில் கண்டியதேவன் மகன் பெரியசோழியப்பன்

6. செட்டிமொட்டரில் அர்த்தநாரிசெட்டி மகன் .வேலப்பன்

7. கொல்லுக்கட்டி செட்டியாரில் தெய்வசுவாமி மகன் குமரியப்பன்

8. அவிநாசியுடையார் செட்டியாரில் சரவணச்செட்டி மகன் செம்மாண்டான்

9. வெள்ளாளரில் மணியர் பெரியநயினாக்கவுண்டர் மகன் குமரியப்பன்

10. வெள்ளம்பரில் அவினாசிக்கவுண்டர் மகன் திருவம்பலத்தான்

11. சேரன் செம்பியாக்கவுண்டர் மகன் அர்த்தநாரி

12. முத்தூரில் சின்னாக்கவுண்டர் மகன் பொன்னாண்டான்

13. பிரளந்தையரில் தேவணகவுண்டர் மகன் நல்லதம்பி

14. திருப்பையரில் சோழியப் பெரியபெருமாள் மகன் சருவேசுவரன்

15. உப்பிலியரில் அங்கண்ணன் மகன் மாதவநாதன்.

இச்செப்பேட்டில் முத்தூரில் எல்லைகள் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன வேட்டுவத் தலைவர் கொங்குராயன் இறந்தபின் அவனுடைய மனைவிமார் வீரமாசத்தியாக ஏற்பாடு செய்தபின் வாலரசப்பிள்ளையாரைக் கொண்டுவர அதிப்பிள்ளையார் முத்தூருக்கும்

காரையூருக்கும் எல்லையில் பொத்திப் பிள்ளையாராக இருக்கும் விபரம் கூறப்படுகிறது.

இவ்விரு வரலாற்றுச் செய்திகளை எழுதிய நிகழ்ச்சியில் காங்கயம் பல்லவராயர், வள்ளிஎறிச்சில் தொண்டைமான் மன்றாடி, காடையூர் கழுவன காங்கேயர், பட்டாலிக் காலில் பெரிய சிதம்பரன், கீரனூர் குடுமி வேட்டுவரில் செம்பராயக்கவுண்டர், காரையூர் சோமன் உத்தமக் காமிண்டன், மருதுறை விழுப்பராயன், பார்ப்பதி சேனாபதி செட்டி, பரஞ்சேர்வழி காவிலச்சேனாபதி, கன்னபுரத்துச் செட்டி பட்டக்காரர் அர்த்தநாரி, வெள்ளகோயில் காவல் வீரப்பெருமாள் ஆகியோர் காட்சிகளாக இருந்துள்ளனர்

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முத்தூர்ப் பட்டயம் இங்கு முழுமையாக அளிக்கப்படுகிறது. இப்பட்டயத்தின் சில பகுதிகள் இல்லை. சில இடங்களில் முறை மாறி எழுதப்பட்டுள்ளது

ஏடு பெயர்த்து மீண்டும் எழுதிய விவரம் எழுதப்பட்டுள்ளது. அப்போது இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்

**பட்டயம் - மூலம்**

. சுபஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் மூவராயர் கண்டன் கட்டாரிச் சாளுவ மீசுரகண்டன் துட்ட நிக்கிரகச் சிட்ட பரிபாலன் எம்மண்டலமும் ஈழமும் இலங்கையும் திறைகொண்டருளிய ராசாதிராசன் ராசபரமேசுவரன் இராசமார்த்தாண்டன் இராசவல்லவன் இராசபுங்கவன் இராசகேசரி இராசநவரத்தின நாராயண துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோகந் தவிர்த்தான் யிரனதும்பரராமன் துடஷ்த நெடஷ்த காட்டா கோலாகலன் மதியாதமன்னர் மகுடஞ் சிதற பதிசூறை கொள்ளும் பரசூரராமன்

அசுவபதி கஜபதி நரபதி நவகோடி நாராயணன் அங்க வங்கலர் கலிங்கர் கோலார் மத்தர் மாளுவர் துலுக்கர் கெவுடர் மத்தகர் கோசலர் அவுணர் மறவர் மலையாளர் கொங்கர் கம்பளர் குக்குரர் குச்சரர் கொந்தளர் ஒட்டியர் தெலுங்கர் துளுவர் துக்கரர் சவுறாட்டர் மராட்டிகர் மராடர் காம்போசர் ஆரியர் பப்பரர் கண்ணாடர் சோகனர் மலைதேவி விபாடர் மத்தக்குடோரி 18 கோட்டத்து மன்னியர்கண்டன் புடைகுழாகிய பூலோக புரந்தரர் உத்தரர் தட்சிண பூருவ பசசிம சத்த சமுத்திராதிபதி ஈழநாடு சரே சோழ பாண்டியர் வல்லாள பயங்கர தெய்வராயர், வீரமதராயர், மல்லிகார்ச்சுனராயர், விருப்பாச்சி புஜபெலராயர்,

வல்லாளராயர், பிரபுடதேவராயர், காரியத்துக் கருத்தரான அரியணவுடையார் கொங்கு மண்டலத்தில் நரையனூர் நாட்டில் இராதாபுரத்தில் எழுந்தருளியிருந்து.

ஓதியுணர்ந்து உலகமுழுதாண்டு மும்மூர்த்தியும் முத்தமிழ் வினோதன் சரிபுடை தாங்கும் மானவினோதன் அளிக்குச் சந்திரன் ஒளிக்கும் கதிரோன் அர்த்தத்துக்கு அரிச்சந்திரன் மறத்துக்கு வன்னி சொல்லினில் தருமன் தோளினில் வீமன் வில்லினில் விசயன் வாளினில் அபிமன் பரிதனில் நகுலன் கரிதனில் உதயன் போகத்தில் இந்திரன் புகழினில் போஜன் செலத்தினில் வாரி நடுவினில் இயமன் தைரியத்தில் நிருதி தனத்தினில் குபேரன் – முத்தூருக்கும் கொல்லன் கோயிலுக்கும் எல்லைப்பிரிவு வீதிக்கல்லு கரும்பள்ளம் தோரணப் புளியல் கருங்கரடு அஞ்சூர் எல்லைப்பிரிவு எல்லையில் புவனக்கல்லு சுனைத்துறை நொய்யலுக்குத் தெற்கும் கிடாக்கிடந்தான் மடு ஒழுகுவாரைப் பரப்பு நரப்புமடை வெங்கமேடு பச்சைப்பாளி வெளிஎல்லைப் பிரிவு வட்டப்பாறை இருப்புக்கரடு முத்தூருக்கும் முஞ்சனூர்க்கும் வெள்ளகோயிலுக்கும் முக்கூட்டு எல்லைப் பிரிவு ஒழுகுபிளியில் கல்லப்பாழி வளவன் குளத்து உலக்குளத்துப் பெரிய ஆலமரம் நவவள்ளியிறை சட்டைப்பாறப் புளியல் எல்லைப் பரப்பு முத்தூர்க்கும் காரையூர்க்கும் வள்ளியிறைச்சலுக்கும் முத்தூருக்கும் தெற்கு வெங்கைமேடு பச்சைப் பாளியூர்க்கு மேற்கு கருமணக் கொம்பூருக்கு வடக்கு நொய்யலாறு இந்தப்படிக்கு சுவாமியார்க்கு நாற்றிசையும் வெட்டிப் போட்டோம்.

இதற்குக் காங்கயம் பல்லவராயன், வள்ளியிறைச்சல் தொண்டைமான் மன்றாடி, காடையூர் கழுவன காங்கேயன். பட்டாலிக்காலில் பெரிய சிதம்பரன். கீரனூர் குடுமி வேட்டுவரில் செம்பராயக்கவுண்டன் காரையூர் சோமன் உத்தமக்காமிண்டன், மருதுறை விழுப்பராயன், பார்ப்பதி சேனாபதி செட்டி, பரஞ்சேரிவெளி காவிழச்சேனாபதி, கன்னபுரத்துச் செட்டி பட்டக்கார அர்த்தநாரி, வெள்ளைக் கோயில் காவல் வீரப்பெருமாள் இவ்வனைவோரும் சாட்சியாக சுவாமியாருக்கு சந்திராதித்தர்வரை நடப்பதாகச் சாசனம் வெட்டிக் குடுத்தோம்.

எல்லைப் பிரிவு காறப்பள்ளம் காரையூர் எல்லைப் பிரிவு கருமணக்கொம்பு இந்தப்பிரகாரம் நால்திசை எல்லை அறியவும், யிப்பால் விசய வருஷம் சிவன் சமுத்திரத்து மல்லிகார்ச்சனலிங்கத்திற்கு கொங்குமண்டலம 64 காத வட்டகையும் நாற்பத்தெண்ணாயிரம் ஊரும் யிரை எண்ணை செல்லத்தக்கதாகப் பிரபுடதேவராயர் கட்டளையிட்டு இராதாபுரம் சீர்மைக்கும் மாயப்பருடையாரையும், கட்டளையிட்டபோது அதுவும் எண்ணை செல்லாமலிருக்கையில் பிரபுடதேவராயர் உம்மத்தூர்

விருப்பாச்சி உடையார்க்கு இராதாபுரத்துச் சீமை கட்டளையிடுகையில் அவர் வந்து கொங்கு மண்டலத்தில் சிறைகொண்டு போகையில் முத்தூர் காணியாளப் பிள்ளையரில் காவுள வேந்தரில் கருமருத சரவண கவுண்டர் மகன் சோழியப்பனும், 'வளவரின் சிதம்பரநாதக்கவுண்டன் மகன் கோணியப்பன், காச்சலில் அர்த்தநாரிக்கவுண்டன் மகன் குமாரசாமியும், கள்ளிபில்லரில் வேலப்பகவுண்டர் மகனான வேம்பாகவுண்டனும், வெங்கச்சி வேட்டுவரில் கண்டியதேவன் மகன் பெரியசோழியப்பனும், செட்டி மொட்டரில் அர்த்தநாரிசெட்டி மகன் வேலப்பனும், கொல்லுக்கட்டி செட்டியரில் தெய்வசுவாமி மகன் பெருங்கருணையும், அவிநாசியுடையார் செட்டியாரில் சரவணச் செட்டி மகன் செம்மாண்டனும், வெள்ளாளரில் மணிய பெரியநயினாக்கவுண்டர் மகன் குமரியப்பன். வெள்ளம்பரில் அவினாசிக் கவுண்டர் மகன் திருவம்பலத்தானும், சேரன் செம்பியாக் கவுண்டன் மகன் அர்த்தநாரியும், முத்தூரில் சின்னாக்கவுண்டன் மகன் பொன்னாண்டாலும், பிரளந்தையரில் தேவனகவுண்டர் மகன் நல்லதம்பியும், திருப்பையரில் சோழிப் பெரிய பெருமாள் மகன் சருவேசுவரனும், உப்பிலியரில் அங்கண்ணன் மகன் மாதவநாதனும் இந்த 15 பேரையும் பிடித்துக் கொண்டுபோய் சிவன் சமுத்திரத்தில் விலங்கில் போட்டார்கள்

அப்போது மாதவநாதன் காவல்காரருக்கு இதம்படப் பேசி தன்னுடைய காவலுமகன் நக்கசருவேசுவரனுடைய காவலும் யிரண்டுபேரும் விலங்கு விடுவித்துக் கொண்டு அநதப் பயகளுக்குள் பட்டணம் சிவன் சமுத்திரம் வந்து கொப்பாவும் எடுத்துயிப்படிப் பன்னிரண்டு வருஷம் சிறையில் சிக்கி அங்கு இருந்தார்கள் அந்தப் பயகளைச் சிறைப்பிடித்த காலாதினாலே முத்தூரார் அனைவரும் வலசுக்குக் கீழ்க்கரையில் வாழவந்திநாட்டில் அரியூரில் போய் இருந்தார்கள்.

அதில் சென்னை பட்டணத்தாருக்கும் சிவனே சமுத்திரத்தாருக்கும் சண்டையாய்க் காலதியாய் இருந்த தருவாயிலே மாதவநாதன் அந்தப் பயகளுக்கு விலங்கு நிறுத்து அந்தக் காவலும் அறியாமல் கரியகண்டன் கணுவாயும் தணாயக்கன் கோட்டையும் கடந்து இரவும் பகலுமாக அந்தப் பயகளை முத்தூருக்குக் கூட்டிக் கொண்டு வந்து அங்கிலுங் குடியில்லாமல் வலசு போயிருக்கிற தலமும் தேடிப்போய் கீழ்க்கரை வாழவந்தி னாட்டில் அரியூரில் முத்தூரார் அனைவரும் முன்பாக அவரவர்கள் பிள்ளையும் ஒப்புவித்துக் கொண்டு இப்படி முத்தூர் 12 வருஷம் குடியில்லாமல் பாழ் நந்தமாயிருந்தது. அதனிடையில் குரோதி வருஷம் அற்பசி மாதம் 12 கொங்குமண்டலம் இராதாபுரம் சீமை நஞ்சைய உடையார்

கூட்டிக்கொண்டு வந்து கட்டின யேருக்கு 5 பணமாகக் கட்டளையிட்டு குடியூர்க்கு அங்கங்கு அழைப்பித்து வைத்தார்கள்.

இப்படிக்கு இந்தப் புண்ணியம் நடத்தி வந்தவர்கள் குலோத்துங்க சோழீச்சுரமுடைய தம்பிரானார் அருளாலேயும், தெய்வசிகாமணி பண்டிதார் அருளாலேயும், சாமீப சாரூப சாலோக சாயுச்சிய பதமும் பெற்று புத்திர சந்தானம் மதன சந்தோஷம் உண்டாய் பலவருஷம் பெற்று வாழ்ந்திருப்பார்கள். அரியன உடையார் பிரிதானி சிங்கண்ண தேவருடையார் முன்பாக காங்கேய நாட்டு மூத்தூரு எல்லை நாற்பாங்கும் பலரையறுத்து யிப்பால் காங்கயனாடு 12 ஊருமமணலூர் நாட்டு தென்னிலை வெங்கச்சி வேட்டுவன் கொங்குராயனுக்கு வருஷா வருஷம் சவளக் காணிக்கை இருந்து வந்த படியினாலே பராபவ வருஷம் ஆனி மாதம் 7ஆம் தேதி மக நட்சத்திரம் சதுர்த்தியும் பெற்ற வியாழக்கிழமை நாள் கொங்குராயன் வந்து மாந்தபுரத்திலே மாடு பிடித்துக்கொண்டு போனார்கள். ஆகையினாலே வள்ளியிறைச்சல் புள்ளைத் தொண்டைமான் மன்றாடி மகன் மாந்தியப்பனும், வள்ளியிறைச்சல் காவுள பெரியதம்பிக் கவுண்டர் மருமகன் காரையும். இராவுத்தக் கவுண்டன் மகன் வாரணவாசியும் இவர்களிரண்டு பேருமாக மாடு பிடித்துக் கொண்டு போய்ப் பட்டடார்கள் அது கருமமாக அழகன் உத்தமக் காமிண்டனும் நாம காங்கயநாடு 12 ஊருமிருந்து அவனுக்குச் சவளக் காணிக்கை குடுக்கிற தென்னயென்றும் விசயநகரம் கன்னப் பறையர் நல்லஅனுவான் சேவகராக அழைப்பித்து அவர்களுக்கும் வேண்டியது கொடுப்பித்துக் காங்கயனாடு 12 ஊராருமாகக் கொங்குராயன் பேரிலே படை எடுத்துக் கன்னப் பறையரைக் கொண்டு கோட்டையும் சுரங்கமிடுவித்து அந்தச் சுரங்கமிடிந்து விழுந்தும் அதில் சிலபேர் பட்டும் அந்தக் கோட்டையைத் தூளி கோட்டை கொண்டு வெட்டினபோது தென்னிலை கொங்கராயனும் பட்டான்.

ஆகையினால் கொங்கராயன் பெண்களும் வீரமாஸ்தியாகப் புறப்பட்டு அழகன் உத்தமக் காமிண்டனையும் கண்டு வலங்கைச் செட்டியர் விருது அல்லா நாங்களும் வாழ்த்திக் கொண்டு விற்றுக் கொள்ளுகிறது. எங்களுக்கும் செட்டியார் தறத விருது வலங்கைக்கும் உடையவர்கள் எல்லோ விற்பது எங்களையும் .சாகவரங்கண்டு போகவென்று அந்த வீரமாசத்தி சொன்னதினாலே அப்படியே அவர்களையும் சாக வரங்கண்டு போகவென்று வருகையில் வாலரசப் பிள்ளையாரையும் வண்டியிலே பூட்டிக் கொண்டு காரையூருக்குக் கொண்டு போகையில் அந்தப் பிள்ளையாரும் முத்தூருக்கும் காரையூருக்கும் நடுவில் பொத்திப் பிள்ளையாராக இருந்து கொண்டது.

ஆகையினால் தென்னிலைப்படையில் முத்தூரார் பட்டவர்கள் காவில கருமருத சரவணக் கவுண்டர் மகன் சோளியப்பன், மணியரில்

பெரியநயினாக் கவுண்டன் மகன் சிலச்செல்லப்பன், வளவரில் சிதம்பரனாதக் கவுண்டன் மகன் விருத்தாளியப்பன், காச்சலில் தீர்த்தாக் கவுண்டன் மகன் வேலப்பன், சேரரில் செம்பியாக் கவுண்டர் நல்லதம்பிக் கவுண்டர், முத்தரில் சோழியப்ப கவுண்டர் மகன் பாண்டியப்பனும், உப்புலியரில் அங்கண்ண நாயக்கர் மகன் சின்னவயிரவனும், மாகுளவரில் பருதலையர் மகன் செம்மனும், தச்சரில் சோழத்தச்சன் மகன் அர்த்தநாரியும், உகச்சரில் வேலன் மகன் சைவசிகாமணியும், இருளரில் கூத்தன் மகன் மசப்பணிக்கனும், பரம்பரில் பெரிய பிள்ளான் மகன் செய்யானும், பறையரில் வீரத்தோட்டி மகன் மதசரவனும் இந்தப் பதிமுணு பேரும் தென்னிலையில் பட்டார்கள்.

ஆகையினால் இந்த 13 பேரிட பெண்களும் வீரமாசத்தியாகப் புறப்பட்டார்கள். அது கருமம் சாணியாழப்பட்டவர்கள் 6 பேரும், மற்றவர்கள் 7 பேருக்கும். இந்த 7 பேரின் பெண்டுகள் தங்களுக்கு பட்டித்தாருக்காடு எந்தக் காலமும் உண்டாயிருக்கத் தக்கதாக காடு விட வேண்டுமென்றபடியினாலே காணியாழப்பட்டவர்கள் 6 பேரின் பெண்டுகள் வீரமாசத்திகளும் அப்படியே பேசி 7 பேருக்கும் பட்டித்தாருகாடு விடவேண்டுமென்று முத்தூரார் அனைவருக்கும் சொன்னபடியினாலே அனைவருமாகக் கூடியிவர்களுக்குக் காடு விட்டபடிக்கு,

சின்ன வயிரவனுக்கு செம்பாளிக்கு நிருதி மூலை சோழசமுத்திரத்திற்கு வடகிழக்கு, செம்மனுக்கு நாவல் பரப்புக்கு மேற்கு, அர்த்தநாரிக்கு சிறுமுத்தூருக்கு மேற்கு, பச்சைச்கனைக்குத் தென்மேற்கு, செய்யானுக்கு முத்தூருக்கு மேற்கு, ஓலைப்பரப்புக்குத் தென்மேற்கு மூலை, ஈழவச் சோழ மூப்பன் மகன் பெரிய பாலைப்பரப்புக்கு வடக்கு, மதசரவனுக்கு கொக்கரளத் தீர்த்தத்துக்குக் கிழக்கு இந்தப் பிரகாரத்திற்கு அனைவருமாகக் கூடிப் பட்டித்தாருக்காடு விட்டோம். இதுவும் சந்திராதித்தர்வரை நடந்து வரவு, தெய்வகுனைக்கு அக்கினி மூலைக்காடு காவிலுவர் நாலு முதன்மைக்கும், வேட்டுவர் நாலு முதன்மைக்கும் கரியீடு இவருக்கு வீட்டகாடு, இந்தச் செப்பேடு எழுதினமைக்கு தொண்டமண்டலத்து இறைவரசநல்லூர் சிற்பாசாரியரில் அண்ணாமலை மகன் சேனாபதி எழுதின பட்டயம், அனாதியாய் ஏடு பழையதாய்ப் போனபடியினாலே கலியுக சகம் 4059–க்கு மேல் செல்லாநின்ற விளம்பி வருஷம் ஆடி மாசம் ஏகாதசியும் அனுஉருமும் பெற்ற வியாழக்கிழமை நாள் குன்னத்தூரிலிருக்கும் பிராமணரில் வடமலைப் பிள்ளை மகன் ரங்கனாத புத்திர நல்லையன் எழுதினேன். யிது பெரியோர்கள் பொருந்தருளவும்.

❖❖❖❖❖❖

# 9. குல குருக்கள்

கொங்கு நாட்டில் சைவம் சிறப்புற்று விளங்கியது கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கள் ஏழு அவை கரூர், வெஞ்சமாங்கூடல், அவிநாசி, பவானி, கொடுமுடி, திருச்செங்கோடு, திருமுருகன் பூண்டி என்பன. அவ்வேழு தலங்களையும் ஒன்றாகச் சேர்த்து வணங்கும் வழக்கம் கொங்கு நாட்டில் இருந்தது. அதனை,

*ஆதி கருவூர் அணிவெஞ்சை மாக்கறைசை*
*நீதி அவிநாசி நீள்நணா – மேதினியின்*
*தஞ்சமாம் செங்குன்றூர் தண்முருகன் பூண்டிதமை*
*நெஞ்சமே நித்தம் நினை*

என்ற வெண்பா சிறப்புடன் விளக்குகிறது. காங்கய நாட்டுப் பட்டக்காரர்கள் ஒரே நாளில் இவ்வேழு தலங்களையும் வணங்கும் வழக்கம் கொண்டிருந்தனர் என்பதைத் தனிப் பாடல்கள் விளக்குகின்றன

இவ்வாறு சைவம் சிறந்த கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வேளாண்குலப் பெருமக்கள பலரும் தங்குக்கென்று தனித்தனியாகக் குலகுருக்களை நியமித்துக்கொண்டு பலர் தீட்சை பெற்றுச் சைவசமயச் சிறப்புடன் நலமாக எல்லாப் பேறும் பெற்று வாழ்ந்தனர். குலகுருக்கள் சைவம் பேணி, ஆலயங்களைக் காத்து, அடியார்க்கு ஆசி வழங்கிச் சிறப்புடன் திகழ்ந்தனர்

கொங்கு நாட்டில் முதலில் குடியேறிய கொங்கு வேளாண் பெருமக்கள் 'தங்கள் குலகுருவுடன் வந்தனர்' என்பதைப் பல செப்பேடுகள் கூறுகின்றன. 24 நாடுகள் பிரித்ததும் நாட்டுக்கு ஒரு குலகுருவாக 24 பேரை நியமித்தனர் எனறு ஒரு பட்டயம் கூறுகிறது.

சோழர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தும்போது சோழநாட்டிலிருந்து நிறந்துள்ள ஆதி சைவர்களைக் கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்ததாகக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது

*குலசே கரன்குலோத் துங்கசீர்ச் சோழர்கள் கொங்கினிடை*
*தலபூசை நன்குறத் தன்நாட்டு ளாரில் சமர்த்தர்கண்டு*
*நிலையான காணியும் மேன்மையும் ஈய நிதானமுறு*
*வலவாதி சைவர்கள் வாழ்வதன் றோகொங்கு மண்டலமே*

என்ற சதகப்பாடல் மூலம் அதனை அறியலாம். ஒரு சில செப்பேடுகள் சோழநாட்டுத் திருக்கடையூரிலிருந்து அவர்கள் வந்ததாகக் கூறுகின்றன. சில குருக்கள் காஞ்சிபுரம் தம் பூர்வீகக் காணியூர் என்று கூறுகின்றனர். சிதம்பரத்தையும் சிலர் தம் பூர்வீகக் காணி என்பர்.

திருச்செங்கோட்டுத் திருப்ணி மாலையும் இதனை ஒரு பாடல் மூலம் விளக்குகிறது.

*காரணிக மானவள வன்கலி யுகாதியில்*
*கட்செவி மலைப்பரமனைக்*
*கந்தனை வணங்கிமக பூசையுண் டாக்கினன்*
*கைலாச நாதசிவனைத்*
*தாரணி புகழ்ந்திடத் தாபித்த னன்பெரிய*
*தண்கூப மதுகண்டனன்*
*சைவமறை போய்பூச னைக்கினிய ராகவே*
*தனதுமண் டலமேவியே*
*சீரணிச்சீ காழியர் ஆலம்பாயர் காசிபர்*
*திறத்தோடர்ச் சனைசெய்யவே*
*திதமுற அமைத்தனன் மநுநீதி முறைகண்ட*
*செம்பியன் பெற்ற பெருமை*

என்ற பாடல்மூலம் அதனை அறியலாம்.

கொங்கு நாட்டவருக்குக் குலகுருக்கள் இருந்தனர் என்பதைப் பல செப்பேடு பட்டயங்கள் உறுதிப்படுத்துகின்றன

*'கந்தமாபுரிப் பட்டநம் அதிலுள்ள பதிணெண்குடிகள் இந்தத் திருமுருகன் பூண்டி ஆதீனத்துக்கு உடையவராகிய காசிப கோத்திரத்துக் குருக்களானபடியினாலே தன்னுடைய சிஷயனாகிய வீரவிக்கிரம சோழியாண்டாக் கவுண்டர்'*

என்பது ஒரு எடுத்துக்காட்டாகும்

கொங்கு நாட்டவர் தங்கள் குலகுருக்களை எவ்வாறு மதித்தனர் என்பதைத் கொங்கு நாட்டுச் செப்பேடு ஒன்று பின்வருமாறு விளக்குகிறது.

'நாங்கள் யெந்த நாட்டிலே யெந்த ஊரிலேயிருந்தாலும் எங்கள் கோத்திரத்தார் தலைக்கட்டு ஒன்றுக்கு நாகரம் பணம் அஞ்சு வருஷம் பிரதி குடுத்துச் சஞ்சாரம் வந்தபோது சஞ்சாரக் காணிக்கையும் அப்பணைப் படிக்கி உபதேசம் பாத பூசை முதலானதும் பண்ணிக்கொண்டு எங்கள்

வமுசத்தார் புத்திரபவுத்திர பாரம்பரியமாயி பாதபூசை பண்ணிக்கொண்டு சன்னிதானத்துலே தீட்சை மகாமந்திர உபதேசம் பண்ணிக்கொண்டு சுவாமியார் தெண்டினை கண்டினை ஆணை ஆக்கினை அபராதத்துக்குட்பட்டு நடந்து கொள்ளுவோமாகவும்.

எங்கள் கோத்திரத்தார் எந்த நாட்டிலே எந்த ஊரிலே காணி வாங்கி அதிகாரம் பண்ணினாலும் சுவாமியார் பாதத்துக்குப் பணிந்து நடந்து கொள்ளுவோமாகவும் இப்படி நடந்துவரும் காலத்தில் இதுக்கு விகாதம் சொல்லாமல் பரிபாலனமாயி எங்கள் வமுசத்தார் பயபக்தியாய் நடந்து வந்தவன் சுகமாயி தனசம்பத்தும் தானிய சம்பத்தும் அஷ்டைஸ்வரியமும் ஆயுளாரோக்கியமும் தேவப்பிரசாதமும் குருப்பிரசாதமும் மேம்மேலும் உண்டாகி கல்லும் காவேரிப் புல்லும் பூமியும் சந்ராதித்தாள் உள்ளவரைக்குகும் சுகமாயிருப்பார்கள்'.

உடல்பொருள் ஆவி மூன்றையும் குலகுருவுக்கே தத்தம் செய்து பட்டயம் எழுதிக் தந்துள்ளனர். வாரிசு இல்லாத சொத்து குலகுருவுக்கே என்றும் சிலர் கூறினர். 'குருவே சிவம்' என்று திருமூலர் முதலிய சான்றோர்கள் கூறிய சிறந்த வழியில் கொங்கு வேளாண் பெருமக்கள் நடந்துள்ளனர்.

குருக்கள்புரம், குருக்கள்பாளையம், தம்பிரான் வலசு போன்ற ஊர்கள் குருக்களுக்குத் தனி ஊர்ப் பகுதிகளைக் கொடையாக விட்டு அவர்களுக்கென்றே தனி ஊர்கள் ஏற்பட்டதைக் குறிக்கும் பொருளந்தை குலத்தார் காடையூரில் 'குருக்களய்யன் பாளையம்' என்ற ஊரும், குலகுருக்கள் மடமும் ஏற்படுத்தியுள்ளனர். அங்கு குருக்கள் சீரும் சிறப்புடனும் இன்றும் வாழ்ந்து அடியார்களுக்கு அருளியும் ஆலயத்திருப்பணியில் பங்கு கொண்டும் சிறந்துவருகிறார்கள்

வெறு கொங்கு நாட்டின் எந்தப் பகுதிக்கும் இல்லாத சிறப்பு காங்கய நாட்டுக்கு உண்டு. இங்கு தான் காங்கேய நாட்டுப் பதினான்கு ஊர்களுக்கும் பனிரண்டு குருபீடங்கள் உள்ளன.

1. காங்கயம் – சிவத்திரு உத்தமபண்டித குருசுவாமிகள்
2. வள்ளியறச்சல் – சிவத்திரு பெரியசாமிபண்டித குருசுவாமிகள்
3. காடையூர்
4. ஆறு தொழு

(3, 4) – சிவத்திரு மீனாட்சி சைவ புரந்தரபண்டித குருசுவாமிகள்

5. பட்டாலி – சிவத்திரு கனககிரிபண்டித குருசுவாமிகள்

6. கீரனூர் – சிவத்திரு கொடுமுடிப்பண்டித குருசுவாமிகள்

7. பார்பபதி – சிவத்திரு ஒருநான்கு வேதாந்தபண்டித குருசுவாமிகள்

8. பரஞ்சேர்வழி – சிவத்திரு பாலசக்தி சைவ சிகாமணி பண்டித குருசுவாமிகள்

9. காரையூர் – சிவத்திரு சிவஞானபண்டித குருசுவாமிகள்

10. மருதுறை – சிவத்திரு ஆலாலசுந்தர பண்டித குருசுவாமிகள்

11. முத்தூர் – சிவத்திரு குலசேகரபண்டித குருசுவாமிகள்

12. கண்ணபுரம் – சிவத்திரு கனகசபாபதி பண்டித குருசுவாமிகள்

13. வெள்ளகோயில்
14. ஆலாம்பாடி – சிவத்திரு சந்திரசேகர பண்டித குருசுவாமிகள்

முத்தூர்க் காணியாளர்கட்கு மங்கலப்பட்டி முத்தூர் மடாலய ஆதீனம் அருள் திரு சைவசிகாமணி பண்டித குருசுவாமிகள் அவர்கள் குல குருவாகச் சிறப்புடன் விளங்கி வருகிறார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க முத்தூர்ப் பட்டயத்தில் கோயில் பூசை செய்யும் உவச்சர் குல வேலன் என்பாரின் மகன் பெயர் 'சைவசிகாமணி' என்று குறிப்பிடப்படுவது சிறப்புமிககதாகும்.

❖❖❖❖❖❖

# 10. புலவர்கள்

கொங்கு நாட்டில் குறிப்பாகக் கொங்கு வேளாளரிடையே புலவர்களுக்கு உள்ள மரியாதை தமிழகத்தில் வேறு பகுதிகளில் இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

புலவர்கள் செந்தமிழ்ப் பாக்களால் ஈர்க்கப்பட்ட கொங்கு வேளாளப் பெருமக்கள் புலவர்கட்கு அடிமைச் சாசனம் எழுதிக் தந்தனர். புலவர்களின் பல்லக்குகளைச் சுமந்தனர். புலவர்களின் எச்சில் காளாஞ்சி ஏந்தினர். அவர்களின் பாதச் சம்மாளிகளைச் (செருப்பு) சுமந்தனர். சந்திர சூரியர் உள்ளவரை நானும் எம் குடும்பத்தாரும் புலவர்கட்குக் குற்றேவல் செய்வோம் என்று பட்டயம் எழுதித் தந்தனர் சிலர்.

சோழர்களின் காலத்தில் சொங்கு 24 நாடுகட்கும் புலவர்கள் நியமிக்கப்பட்டனர். இடையில் நாட்டுப் புலவர்கள் வழக்கம் நின்றுவிடவே விசயநகர அரசர்கள் காலத்தில் மீண்டும் பரம்பரைக் புலவர்கள் நியமிக்கப்பட்டனர். இதனைக் கொங்குப் புலவர் பட்டயம் விரிவாகக் கூறுகிளது.

தங்கள் நாட்டுக்கென்று தனியாகப் புலவர்களை நியமித்துப் கொண்ட வழக்கம் காங்கய நாட்டவர்கட்கு உண்டு. காங்கய நாட்டுக்குச் செங்குந்த கோத்திரம் போக்கங்கூட்டம் நஞ்சராயப் புவவன், கம்பருக்குக் கையேட்டுக்கார உவச்சன், பாலிடையன், தொளுவன், வேதியன், சேரகுல வேளாளன், மங்கலன், வணியன், சேனியன், திருவம்படிக்காரன், பச்சை மலையாளன் ஆகிய சமூகத்தார் பலர் புலவர்களாக விளங்கினர்.

ஒருமுறை காங்கய நாட்டார் கூடித் தங்களுக்குப் பால் சாப்பிடும் பழனிமலைப் புலவனைத் தங்கள் நாட்டுப் புலவராக நியமனம் செய்தனர். பால் சாப்பிடும் புலவர் என்ற தொடர் மிகவும் விசேடமானதாகும்

புலவாகள் கொங்கு வேளாளர்கள் இல்ங்களுக்கு வந்தால் விருந்திட்டு இறுதியில் வேளாளர்கள் தாம் உண்ணும் வெண்கல வட்டிலில் நிறைப் பசும்பாலை ஊற்றிப் பழம்போட்டுப் பிசைந்து முக்காலிமேல் வைத்துச் சாப்பிடுமாறு செய்வர் அதனால் கொங்குநாட்டுப் புலவர்களுக்குப் பால் சாப்பிடும் புலவர்கள் என்று பெயர் ஏற்பட்டது

திருமண வீடுகளில் நடைபெறும் முக்கியமான சடங்குகளில்

புலவர்கள் உள்ளிட்ட கலைஞர் சிலரை முன்னர் நடக்கச் செய்து அச்சடங்குகளைச் செயவர். அதனை மங்கல வாழ்த்து.

*'பட்டன் புலவன் பண்பாடி தக்கைகொட்டி*
*திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன் னேவர'*

என்று கூறுகிறது. திருமணச் சடங்குகளில் இறுதியானது புலவர்கள் பால் சாப்பிடும் சடங்கேயாகும். புலவர்கள் பால் சாப்பிடாத வீடுகளை மிகவும் இழிவானதாகக் கருதுவர்.

இல்லங்களுக்கு வந்த புலவருக்கு மூன்று வேட்டிகள் அளிப்பர். ஒன்று தலைக்கு உருமாலையாக, மற்றொன்று தோளுக்குத் துண்டாக, மூன்றாவது இடுப்பு வேட்டி. தாராளமாகப் பொருளும் (வர்த்தனை) வழங்குவர். அறுவடை காலத்தில் தானியம் அடிக்கும் களத்திலேயே புலவருக்குத் தானியங்களை அளப்பர்.

இவ்வளவு சிறப்புகளுக்கெல்லாம் காரணமான கொங்கு வேளாளர்களிடம் வலக்கை நீட்டிப் பரிசில் வாங்கிய புலவர்கள் மற்ற வள்ளல்கள் யாராக இருப்பினும் இடக்கையை நீட்டியே பரிசில் வாங்குவார்களாம்.

காங்கயநாட்டு ஊர்களுக்குச் செங்குந்த கோத்திரம் போக்கங்கூட்டம் நஞ்சராயப்புலவன், கம்பருக்குக் கையேட்டுக்கார உகச்சன், பாலிடையன், தொளுவன், வேதியன், சேரகுலவேளாளன், மங்கன், வணிகன், சோழியன், திருவம்படிகாரன், பச்சை மலையாளன் இவர்கள் புலவர்களாக விளங்கினர். பால்குடிக்கும் புலவர்கட்கு வர்த்தனைக்கு உள்ள பணம் கொடுக்கவேண்டும் என்று கொங்குப் புலவர் பட்டயத்தில் எழுதப்பட்டுள்ளது முத்தூருக்கும் இவர்கள் மரபினர் பரம்பரைக் காணிப் புலவராக இருந்திருத்தல் வேண்டும்.

❖❖❖❖❖❖

## வாழ்த்து

முத்தூர் அருள்மிகு செவ்லாண்டியம்மன், அருள்மிகு சோழீசுவரர் – பிரகலநாயகி அம்மன், அருள்மிகு மாதவராயப் பெருமாள் கோயில்கள் குடமுழுக்குவிழா அன்று **'முத்தூர் வரலாறு'** என்ற நூலைச் சிறந்த முறையில் ஆய்வு செய்து வெளியிட்ட ஐயா புலவர் செ. இராசு அவர்களை என் குடும்பத்தின் சார்பாகவும், கிராமப் பொதுமக்கள் சார்பாகவும் அருள்மிகு செல்வக்குமாரர், அருள்மிகு அத்தனூரம்மன், அருள்மிகு குப்பயண்ணசுவாமி திருக்கோவில் குலத்தவர்கள் சார்பாகவும் அன்புடன் வாழ்த்தும்



**P. பாலசுப்பிரமணியம்,**
தெற்கு வயவு, சின்னமுத்தூர்
காணியாளப் பெருமக்கள் பொறுப்பாளர்
பொதுக்குழு உறுப்பினர்,
ஸ்ரீ சங்கர வித்யாலயா போர்டு,
கொடுமுடி.
(தொலைபேசி 54476)

---


*சேல்ஸ், சர்வீஸ், ஸ்பேர்ஸ்*

**செல்வம் ஆட்டோ ஏஜென்சி**
வெள்ளகோயில் ரோடு,
முத்தூர்.
தொலைபேசி – 54223, 55127

உதிரி பாகங்கள் விற்பனையில் ஐந்தாண்டுகளாக இந்தியாவில் முதலிடம். உரிமையாளர்கள் முன்னிலையில் சிறந்த சர்வீஸ். நவீன வசதியுடன் புதிய ஷோரூம்.

**எக்சேஞ்சு மேளா, லோன்மேளா மூலம்**
**வாகனங்கள் தரப்படும்**

உரிமையாளர் : **சி. தமிழ்ச்செல்வன்**

குட்டப்பாளையம் சாமிநாதன் கல்வி அறக்கட்டளை,

**ஆனூர் வித்யாலயா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி,**

முத்தூர், தொலைபேசி : 54236

- ஹாஸ்டல் வசதியுண்டு ❖ தொடர்ந்து 100% தேர்ச்சி
- LKG முதல் +2 வரை ❖ பண்டைய காலச்சாரத்திற்கு இடம்
- ஒவ்வொரு மாணவனையும் 'முழுமனிதன்' ஆக்குவது
- 50 ஏக்கர் பரப்பளவில் விஸ்தரிப்புப் பணிகள்
- ஆக்ஸ்போர்டு, கேம்பிரிஜ் மூலம் ஆங்கிலப் பயிற்சி
- குருகுல முறையில் விடுதி ❖ பஸ், வேன் ஆயா வசதி
- தியானம், கராத்தே, இசை, இந்தி வகுப்புக்கள்
- ஆடியோ, வீடியோ பாடமுறை கம்ப்யூட்டர் பயிற்சி

திரு. **கே.எஸ். சிவசேனாபதி**, தாளாளர்

---

வாழ்க வளமுடன்!

R.K. *பிரகாசன்*, D.I.E., Vu2, PTH.,

**பிரகாசன் இஞ்சினீரிங் ஒர்க்ஸ்**

முத்து மங்களம்

முத்தூர் – 638 105

போன் : 54467

செல் 098430 – 27798

கார்களுக்கு அதிக கிலோ மீட்டர் மாறுதல் செய்யப்படும்



சோதிடம், ஜாதகம் கணித்துக் கொடுத்து 50 ஆண்டு அனுபவம் பெற்ற, தமிழ்நாடு கணித சோதிட சங்கத் தலைவர், சிவாலய ஞானசக்தி உபயதாரர்.

பொன்னம்பலம் **P.P. பெருமாள்கவுண்டர்**,
பாக்கியவதி சோதிட நிலையம்,
சுமைதாங்கி, பெருமாள் நகர்,
முத்தூர். போன் : 54381

**பெற்றோர் ஆசிரியர் கழகம்**
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஊடையம்.

| *தலைவர்* | *செயலாளர்* | *பொருளாளர்* |
|---|---|---|
| S. சுப்பராயக்கவுண்டர் | வே. கிருஷ்ணவேணி | ஜெயமணி சுப்பிரமணியம் |

**R.S.S. ஜுவல்லர்ஸ்**
4, பொன்வீதி,
ஈரோடு – 638 001

போன் : கடை : 210462,
வீடு : 271694

**P.P. பழனியப்பகவுண்டர் ஜுவல்லரி**
8, பொன் வீதி, ஈரோடு – 638 001
போன் : கடை – 210632,
வீடு : 259911

உரிமையாளர் P. சிவக்குமார்

**R. மாரப்பன்**
**சரண்யா கார்மெண்ட்ஸ்,**
118, குப்பண்ண செட்டியார் தெரு,
காமராசர் ரோடு,
திருப்பூர் – 4.

---

**C.P. இராதாகிருஷ்ணன்,** M.P.,
பாரதிய ஜனதா பாராளுமன்ற உறுப்பினர்,
திருப்பூர்

---

**C.P. குமரேசன்**
**ஸ்ரீமுத்துக்குமார் டெக்ஸ்டைல்ஸ்**
5, சரீப் காலனி,
திருப்பூர்.

---

**K. செல்வப்பன் & பிரதர்** (மணியன் குலம்)
**செல்வக்குமார் ஸ்டோர்ஸ்**
647-**A** பல்லடம் ரோடு,
திருப்பூர் – 641 604

**ப.ச.விசுவநாதன் Ex.M.C.**
முன்னாள் நகர தி.மு.க செயலர்

**வி. பன்னீர்செல்வன் M.C.**
கொங்கு இஞ்சினீரிங் எலக்ட்ரிகல்
சூரம்பட்டி நால்ரோடு
ஈரோடு – 9

**வி. இளங்கோ**
சோழன் ஆப்செட் அச்சகம்
ஈரோடு.

---

செல்லாண்டி அம்மன் படம் அச்சு உதவி
**M. சண்முகவடிவேல்** (சேரன் குலம்)
**கலாவதி சண்முகவடிவேல்**
துலிப் ஃபேசன்ஸ்
திருப்பூர் – 641 607

---

R.S. மணி
**SCM டிரேவல்ஸ்**
39, ராமநகர் முதல் தெரு,
திருப்பூர் - 641 602
சுற்றுலா செல்ல 57சீட் வீடியோகோச் பஸ் கிடைக்கும்

K. ராமசாமிக்கவுண்டர், பாலமுரளி எக்ஸ்போர்ட்,
கண்பத் கார்மெண்ட்ஸ், திருப்பூர்.

---

**N. துரைசாமி** (மணியன் குலம்)
**பெஸ்ட் மெக்கானிக்கல் ஒர்க்ஸ்**
106, குப்பண்ண செட்டியார் வீதி,
பல்லடம் ரோடு, திருப்பூர் – 641 604



**தெய்வத்திரு எஸ். சின்னப்பகவுண்டர்**
(மணியகுலம்)
சோளங்கபாளையம்,
பாசூர் (அ.நி.)



**கே. செல்வமுத்துக்கவுண்டர்**
மணியகாரர் வீடு (மணியகுலம்)
தொட்டியபாளையம், முத்தூர்

**எஸ். பெருமாள்கவுண்டர்,**
பங்களாத் தோட்டம், முத்தூர்,
சோழீசுவரர் திருப்பணிக் கமிட்டித் தலைவர்

**பி.கே. குமாரசாமிக்கவுண்டர்,**
வள்ளியம்பாளையம், நற்பணிமன்றச் செயலாளர், முத்தூர்

**வி. இராமசாமிக்கவுண்டர்,**
செங்கோடம்பாளையம்

**M.N. துரைசாமிக்கவுண்டர்**, பெருமாள்புதூர், முத்தூர்

**M.N. பொன்னுசாமி,** பெருமாள்புதூர், முத்தூர்

# TEXMO INDUSTRIES

Taro



OPENWELL SUBMERSIBLE MONOBLOCK



SINGLE PHASE MONOBLOCK

பேரன்புடையீர்,

எங்களிடம் டெக்ஸ்மோ கம்பெனியின் மோட்டார்கள், பம்பு செட்டுகள், நீர் மூழ்கி மோட்டார்கள், கம்பரஷர்கள் மற்றும் தேவையான உதிரிபாகங்கள் அனைத்தும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற டீலர் :

**S.K.** கோவிந்தசாமி

142, வெள்ளகோயில் ரோடு, முத்தூர் – 638 105.

தொலைபேசி 54465.